விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஐப்பசி 14 வியாழக்கிழமை (31.10.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 316

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## வெள்ளிக்கிழமை பாடசாலைகளுக்கு விடுமுறை!

(கொழும்பு)

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு நாடளாவிய ரீதியிலுள்ள தமிழ்மொழிமூல பாடசாலைகளுக்கு நாளை முதலாம் திகதி வெள்ளிக்கிழமை விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை, முதலாம் திகதி வழங்கப்பட்டுள்ள விடுமுறைக்கு மாற்று பாடசாலை நாளாக எதிர்வரும் 9-ம் திகதி சனிக்கிழமை கடைப்பிடிக்கப்படும் என அவ் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (செ-11)

## ஊடகவியலாளர்கள் இருவர் கைது

(கொழும்பு)

சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனத்தின் ஆசிய பசுபிக் பிராந்திய பணிப்பாளர் உட்பட சம்மேளனத்தின இரண்டு உறுப்பினர்கள் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இலங்கை குடிவரவு மறறும் குடியகல்வு திணைக்களத்தின் அதிகாரிகளினால் நேற்று கைது செய்யப்பட்டனர். 20ம் பக்கம் பார்க்க

## சு.ஆணைக்குழு நிறுவுவது அவசியம்

(கொழும்பு)

வட மாகாணசபை தேர்தல் நடந்ததை பாராட்டியுள்ள பொதுநல்வாய அமையத்தின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா பொதுநலவாய நல் மரபுப்படி ஒரு சுயாதீன தேர்தல்ஆணைக்குழுவை நிறுவுவதன் அவசி 20ம் பக்கம் பார்க்க

# இராணுவ பிடிக்குள் மக்கள் காணிகள்



## அமெரிக்காவிடம் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலிகாமம் வடக்கில் உயர் பாதுகாப்பு வலயமாக இராணுவத்தினரால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள 6 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட தமிழ் மக்களின் காணிகளில் உள்ள வீடுகள் மற்றும் கட்டங்கள் புல்டோசர் கொண்டு இடித்து அழிக்கப்பட்டுவரும் சம்பவம் தொடர்பில் அமெரிக்காவிடம் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முறையிட்டுள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

# பொதுநலவாய மாநாட்டை தடுத்து நிறுத்துங்கள்

## டெல்லியில் நேற்று ஆர்ப்பாட்டம்

(டெல்லி)

இலங்கையில் நடைபெற உள்ள பொதுநலவாய கூட்டமைப்பின் மாநாட்டை இந்தியா தடுத்து நிறுத்த வேண்டும் அல்லது இந்தியா கலந்து கொள்ளாமல் புறக்கணிக்க வேண்டும் என்று வலியுறுத்தி இந்திய சோஷலிச ஜனநாயகக் கட்சி (எஸ்.டி.பி.ஐ.) சார்பில் டெல்லி ஜந்தர் மந்தரில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இவ் ஆர்ப்பாட்டத்திற்கு கட்சியின தேசிய தலைவர் சயீத் தலைமை தாங்கினார். தமிழ் மாநில தலைவர் கே.கே.எஸ்.எம்.தெஹ்லான் பாகவி, தேசிய துணை தலைவர் சாம் குட்டி ஜாகோப், தேசிய பொது செயலாளர்கள் அப்சர் பாஷா, அப்துல மஜீத் பைசி, ராஜஸ்தான் மாநில துணை தலைவர் வழக்கறிஞர் விஜேந்திர கசனா மற்றும் தமிழ் மாநில பொது செயலாளர்கள் நெல்லை முபாரக், நிஜாம் முஹைதீன், அப்துல் ஹமீது ஆகியோருடன் திரளான பொது மக்கள் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் எஸ்.டி.பி.ஐ கட்சியின் தமிழ் மாநில தலைவர் கே.கே.எஸ்.எம்.தெஹ்லான் பாகவி பேசுகையில்,

பொதுநலவாயத்தின் அடிப்படை கொள்கைகளான அமைதி சமததுவம் ஆகிய கொள் 20ம் பக்கம் பார்க்க

## மீட்கப்பட்ட யுவதி வன்புணர்வின் பின்னரே கொலை

(கரவெட்டி)

புத்தூர் கிழக்கு சனசமூக நிலையத்திற்கு பின்பாகவுள்ள தோட்டக் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட இளம்யுவதி பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்ட பின்னர் கொலை செய்யப்பட்டுள்ளதாக மருத்துவப் பரிசோதனை மூலம் தெரிய வந்துள்ளது.

புத்தூர் கிழக்கில் நேற்றுமுன்தினம் மதியம் தோட்டக் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட அமிர்தலிங்கம் மைதிலி (வயது 27) என்ற பெண்ணின் பிரேத பரிசோதனை யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற போதே, மேற்கண்டவாறு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொலைச் சம்பவம் இடம்பெற்ற கிணற்றிலிருந்து நேற்றுமுன் தினம மாலை குறித்த பெண்ணின கையடக்கத் 20ம் பக்கம் பார்க்க

# மனித உரிமை விவகாரங்களை மாநாட்டில் பேச முடியாது

## இலங்கை அரசு கட்டுப்பாடு

(கொழும்பு)

கொழும்பில் அடுத்த மாதம் இடம்பெறவுள்ள பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாடடில் மனிதவுரிமை விவகாரங்கள் தறித்து பேசுவதற்கு இடமளிப்பதில்லை என்று இலங்கை அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக தெரியவருகின்றது.

இம்மாநாட்டில் பங்கேறகவுள்ள சில அரசியல் தலைவர்கள் இலங்கையின் மனிதவுரிமை நிலைமைகள் குறித்து அழுத்தங்களைப் பிரயோகிப்பார்கள் என எதிர்பார்க்கப்படும் நிலையிலேயே அரசாங்கம் இவ்வாறு முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கை செல்லும் போது, மனிதவுரிமைகளுக்கு மதிப்பு அளிக்காத இலங்கை அரசாங்கத்துக்கு தான் கடுமையான செய்தி ஒன்றைத் தெரிவிக்கவுள்ளதாக பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமருன் தெரிவித்திருந்தார்.


இந்நிலையில், இலங்கையின் மனிதவுரிமை நிலைமைகள் தொடர்பில் வெளிநாட்டுத் தலைவர்கள் சிலர் அழுத்தங்களைப் பிரயோகிக்க இம்மாநாட்டைப் பயன்படுத்திக கொள்ளலாம் என்று இலங்கை அரசாங்கம் கருதுவதாலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து கொழும்பு 20ம் பக்கம் பார்க்க




## இரு வெளிநாட்டு தூதுவர்கள் முதலமைச்சருடன் நேற்று சந்திப்பு





(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணசபை புதிதாக அமைக்கப்பட்ட பின்னர் நேற்றையதினம் இரண்டு வெளிநாட்டு தூதுவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்து முதலமைசசர மற்றும் அமைச்சர்களுடன் சந்தித்து கலந்துரையாடி 20ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# படைத்துறைப் பின்னணியிலேயே அம்மன் கோவில் உடைப்பு!

## மனோகணேசன் குற்றச்சாட்டு




ஒரு வருடத்துக்கு மேல் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியிருந்த தம்புள்ளை அம்மன் ஆலயத்தை இறுதியாக பாதுகாப்பு தரப்பினரே பின்னணியில் இருந்து உடைத்து தரைமட்டம் ஆக்கியுள்ளார்கள். நாடு முழுக்க இப்போது நகர அமைப்பு கட்டுமான வேலைகளை செய்து வரும் பாதுகாப்பு தரப்பினரே, கட்டிடங்களை உடைக்கும் பாரிய இயந்திரங்களை பாவித்து இந்த பாவ காரியத்தை செய்து முடித்துள்ளனர்.

உலகின் கவனத்தை இலங்கை மீது திருப்பியுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்களது மாநாடு இலங்கையில் இன்னும் இரண்டு வாரத்தில் நடைபெற உள்ள இந்த தருணத்திலேயே பாதுகாப்பு தரப்பினர் இப்படி நடந்து கொண்டுள்ளார்கள். சிறுபான்மை மக்களின் மத நம்பிக்கைகளை உதாசீனம் செய்யும் இந்த நாட்டு அரசாங்கத்தின் பொறுப்பற்ற தன்மைக்கு இதைவிட வேறு புதிய சான்றுகள் தேவையில்லை என்பதை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஐம்பது வருட வரலாறு கொண்ட இந்த ஆலயத்தை உடைத்து நொறுக்கியுள்ள இந்த சம்பவம் தொடர்பில் நான் நேற்று இலங்கையில் உள்ள அனைத்து வெளிநாட்டு தூதரங்களுக்கும் அறிவித்துள்ளேன்.

இத்தகைய பாவ காரியங்கள் செய்பவர்கள்தான் எங்களை வேறு வழியில்லாமல், சர்வதேச சமூகத்தின் உதவியை நாட செய்கிறார்கள் என்பதை இந்நாட்டில் வாழும் நல்லெண்ணம் கொண்ட சிங்கள பௌத்த மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

பொதுநலவாய மாநாட்டுக்கு இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் வருவாரேயானால், அவர் தம்புள்ளைக்கு சென்று உடைக்கப்பட்ட அம்மன் ஆலய வளாகத்தை பார்வையிட வேண்டும் எனவும் அவருடன் சேர்ந்து பொதுநலவாயத்தின் தலையாய நாடான பிரித்தானியாவின் பிரதமர் கமரூனும் செல்ல வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கம் நேற்று கொழும்பில் நடத்திய ஊடக மாநாட்டில் விக்கிரமபாகு கருணாரத்ன, அசாத் சாலி ஆகியோருடன் கலந்து கொண்ட மனோ கணேசன் சிங்கள மொழியில் மேலும் கூறியதாவது,

இந்த ஆலயம் மற்றும் சுற்றுவட்டார காணி, தம்புள்ளை பௌத்த புனித நகர் திட்ட அபிவிருத்திக்கு தேவையென பாதுகாப்பு அமைச்சின் நகர அபிவிருத்தி சபையின் புனித நகர் திட்ட இயக்குநர் எம்.ஏ.தயானந்த, 31.10.2012 அன்று எழுத்து மூலம் இந்த ஆலயத்துக்கும், சுற்றி குடியிருக்கும் மக்களுக்கும் அறிவித்துள்ளார். அத்துடன் இவர்களுக்கு மாற்று காணியாக, நகர எல்லைக்குள் தற்போதைய இடத்தில் இருந்து சுமார் 150 மீற்றர் தூரத்திலுள்ள பொல்வத்தை என்ற இடத்தில் காணி தரப்படும் என்றும் அந்த எழுத்து மூலமான அறிவித்தலில் தயானந்த தெரிவித்துள்ளார். அத்துடன் தம்புள்ளை ஆலய நிர்வாகமும், இந்த ஆலயத்தை சுற்றி வாழும் சுமார் 40 குடும்பங்களும், பௌத்த புனித நகர் திட்டத்துக்கு இடம்விட்டு மாற்று இடங்களுக்கு செல்ல தயாராக இருக்கிறார்கள் என்பதை சிங்கள பௌத்த மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

நகர அபிவிருத்தி சபை உறுதியளித்தபடி பொல்வத்தை காணியில் குடியேறி வாழ்வதற்கும், அம்மன் கோவில் கட்டி மத வழிபாடுகளை செய்வதற்கும் இந்த மக்களுக்கு அரசாங்கம் உடனடியாக இடம் தரவேண்டும் என்பதுவே இது தொடர்பாக எங்கள் கோரிக்கை.

ஆனால், இன்று பாதுகாப்பு அமைச்சின் நகர அபிவிருத்தி சபை தான் முன்னர் கூறியபடி பொல்வத்தை காணியை இந்த மக்களுக்கு வீடு கட்டி வாழவும், கோவில் கட்டி வழிபடவும் தர மறுகின்றது. இதுதான் இன்றைய பிரச்சினைக்கு காரணம். இதை சிங்கள பௌத்த மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். தற்போது இந்த மக்களுக்கு பணம் கொடுத்து வாடகை வீடுகளில் வாழும்படி பாதுகாப்பு அமைச்சு சொல்கிறது. அத்துடன் தம்புள்ளையிலிருந்து 20 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள ஹபரணை சாலையில் திகம்பொத என்ற காட்டு யானைகள் வாழும் வனப் பகுதியில் சென்று வீடு கட்டி, கோவில் கட்டி வாழ சொல்கிறார்கள். தம்புள்ளை நகரில் நீண்ட காலமாக தொழில் செய்து, பிள்ளைகளை படிக்க வைத்து வாழும் இந்த மக்கள் திடீரென 20 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள காட்டில் சென்று காட்டு யானைகளுடன் குடித்தனம் நடத்த முடியாது என்பது பாதுகாப்பு அமைச்சுக்கு விளங்கவில்லை.

இந்த நாட்டு அரசாங்கம் ஒரு சிங்கள பௌத்த அரசாங்கம் அல்ல. இது சிங்கள பௌத்தத்தை தம் தேவைக்கு பயன்படுத்தி இன, மதவாதத்தை கிளப்பும் அரசாங்கம் ஆகும். மக்கள் அனைவரும் ஒருசேர் எழுந்து நின்று இத்தகைய ஆலய, பள்ளி, தேவாலய உடைப்புகளுக்கு எதிராக உறுதியாக தமது நிலைப்பாடுகளை அரசு தலைமைக்கு தெரிவிப்பார்களாயின், இன்றைய சர்வதேச சூழலில் அரசுக்குள்ளே அது ஒரு பாரிய நெருக்கடியை ஏற்படுத்தும். அதன்மூலம் இத்தகைய அநீதிகள் ஒரே இரவிலேயே முடிவுக்கு வரும். ஆனால் அம்மன் கோவில்களைவிட, பள்ளிகளை விட, தேவாலயங்களைவிட தங்கள் பதவி இருப்புகளே இவர்களுக்கு முக்கியமாக இருக்கின்றது என மனோ கணேசன் மேலும் தெரிவித்தார். (செ-11)


## விளையாட்டுப் போட்டி

(நல்லூர்)

கோப்பாய் கண்ணகி அம்மன் கோயில் சனசமூக நிலையமும் ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் தடகள விளையாட்டுப் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் கே.ராஜ்குமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு சேவைத் திணைக்கள ஆணையாளர் ரி.விஸ்வரூபன், சிறப்பு விருந்தினராக வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் கணக்காளர் திருமதி குமுதினி நிறஞ்சன், கௌரவ விருந்தினர்களாக கோப்பாய் நாவலர் மகாவித்தியாலய அதிபர் திருமதி சாந்தினி வாகீசன், ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் ரி.தர்மராஜா, தொழிலதிபர் பரமானந்தராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ-9-134)

## வைத்தியசாலையில் விக்னேஸ்வரன்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் நெஞ்சு பரிசோதனைக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று பிற்பகல் 3 மணியளவில் முதலமைச்சர் இதயப்பிரச்சினை காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையின் இதய சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜா தெரிவித்தார்.

முதலமைச்சருக்கு மாரடைப்பு எதுவுமில்லை எனவும் இதயப் பரிசோதனைக்காகவே 24 மணிநேரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை நேற்றுக் காலை அமெரிக்க உயர்ஸ்தானிகருடனான சந்திப்பின் போது முதலமைச்சர் இருமல் அவதியுடன் காணப்பட்டதனை அவதானிக்க முடிந்தது. (செ-4)

**தவறிவிட்டது**

குணசிங்கம் சாந்தபாலன் விதானையார் ஒழுங்கை, கோப்பாய் தெற்கு என்பவரின் தேசிய அடையாள அட்டை பேர்சுடன் யாழ். நகரப் பகுதிக்கும் இருபாலைக்கும் இடையில் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 0774310821 எனும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (4386)

**தொடர்ந்தும் மேலதிக சேவையில்...**

இலங்கையின் எப்பாகத்திற்கும் குறைந்த செலவில் உங்கள் அன்புக்குரியவர்களுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், உடுபுடைவைகள் மற்றும் எதுவித பார்சல் ஆயினும் மறுநாள் **(24 மணித்தியாலயம்)** உரிய முகவரிக்கு (Door to Door) ஒப்படைக்கப்படும்.

**குறிப்பு:** விசுவமடு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், நெடுங்கேணி, மல்லாவி, துணுக்காய், பூநகரி ஆகிய வன்னி மாவட்டங்களுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

WESTERN UNION MONEY TRANSFER

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்

303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

(சி-5301) T.P. No.:-021 222 5392

## ஆட்டோ-கனரக வாகனம் நேருக்குநேர் மோதி விபத்து



(யாழ்ப்பாணம்)

முச்சக்கர வண்டியும் கனரக வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் ஒருவர் படுகாயமடைந்ததோடு முச்சக்கர வண்டியும் கடும் சேதத்திற்குள்ளாகியுள்ளது.

இவ் விபத்துச் சம்பவம் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் கே.கே.எஸ். வீதி சிவலிங்கப்புளியடியில் இடம்பெற்றுள்ளது.

இதில் ஆட்டோ சாரதியான இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கனரக வாகனத்தின் சாரதி விபத்து நடைபெற்ற இடத்திலிருந்து தலைமறைவாகியுள்ளார்.

விபத்தின் காரணமாக குறித்த வீதியில் நேற்றைய தினம் பெரும் வாகன நெரிசல் காணப்பட்டது.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த யாழ்ப்பாணப் போக்குவரத்து பொலிஸார் விபத்து தொடர்பில் விசாரணைகளினை மேற்கொண்டதோடு சேதமடைந்த வாகனங்கள் இரண்டினையும் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர். (செ-4)

**31 ஆம் நாள் நினைவஞ்சலி**



தோற்றம்
02.07.1907

மறைவு
01.10.2013

திருமதி **சீனியன் நாகி**

**(சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்)**

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே
அன்பின் இருப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய்
அறிவூட்டும் அன்னையே
எல்லோரும் போற்றும் உத்தமியாய்
பாரினிலே வாழ்ந்து வழிகாட்டிய

எங்கள் இதய தெய்வமே
தாங்கள் இறைவனடி சேர்ந்து
மாதம் ஒன்று கடந்தாலும்
எம் உயிர் உள்ளவரைக்கும்
என்றும் உங்கள் நினைவோடு
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய். (4390)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## தொலைவு இருத்தல்

எனக்குத் தெரிந்த ஒருவர் இருந்தார். அவர் சொந்தமாக ஒரு கார் வைத்திருந்தார். அதில் ஏறி உட்கார்ந்து ஓட்ட ஆரம்பித்தார் என்றால் போதும் வழியில் வருபவர், போகிறவர்களை திட்டிக் கொண்டே போவார்.

இவர் மட்டும்தான் வீதியில் ஒழுங்காக செல்பவர் போலவும் மற்றவர்கள்ெல்லாம் தாறுமாறாக போவது போலவும் அவருடைய நினைப்பு.

எதிரில் யாருமே வரவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுதும் திட்டுவார்.

"என்ன றோட் இது...சுடுகாடு மாதிரி" என்பார். அப்படி ஒரு பழக்கம் அவருக்கு!

இப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் வசதியாக அமையக்கூடிய ஒரு தொழில்நுட்பம் தான் 'தொலைவு இருத்தல்' என்பது. அதாவது Telepresence இது ஒரு நவீன உத்திமுறை.

நம்மைத் தொலைவில் இருப்பதாக நினைக்கச் செய்யும் ஒரு தோற்ற அனுகூலம். இது எப்படியென்றால்...

காரோட்டுபவர் காரில்தான் இருக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. அவர் இன்னொரு ஊரில் கூட இருக்கலாம்.

அதாவது ஒரு மதுரையில் உட்கார்ந்து கொண்டு சென்னை அண்ணாசாலையில் காரோட்டலாம். வழியில் வருபவர், போகிறவர்களை திட்டலாம். வம்பு வராது, ஏனெனில் அவர்களின் காதில் இது விழாது.

இது எப்படியென்றால்...

தொலைவு இருப்பு முகமூடி ஒன்றை தலையில் மாட்டிக் கொள்ள வேண்டும். அந்த முகமூடிக்குள் சின்னத் திரை இருக்கும். நீங்கள் இதை மாட்டிக் கொண்டு மதுரையில் ஒரு குளிர்சாதன அறைக்குள் கணிப்பொறிப் பெட்டிகளுக்கு மத்தியில் உட்கார்ந்திருக்கிறீர்கள்.

அந்தச் சின்னத்திரையில் சென்னையிலுள்ள அண்ணா சிலை தெரிகிறது. எதிரில் வரும் கார்... குறுக்கே போகும் சைக்கிள் எல்லாம் தெரிகிறது. கார் சாரதி ஆசனத்தில் நீங்கள் உட்கார்ந்திருந்தால் என்னென்ன தெரியுமோ அவையெல்லாம் அந்த சின்னத்திரையில் தெரியும்.

நீங்கள் பாட்டுக்கு மதுரையில் ஓர் அறைக்குள் உட்கார்ந்து கொண்டே சென்னையில் காரை செலுத்திக் கொண்டு போகலாம். சைக்கிள் குறுக்கே வருகிறதா... சடாரென வண்டியை நிறுத்தலாம். இடதுபக்கம் முந்தி ஒரு ஸ்கூட்டர் வேகமாக போகிறதா... அதை விரட்டிப் பிடிக்கலாம்.

சென்னை அண்ணாசாலையில் நீங்கள் வண்டி ஓட்டுவது நிஜம். ஆனால், மதுரையில் உங்கள் முகமூடிக்குள் தெரிவது மாயத்தோற்றம்... அதை மாய நிஜம் அல்லது மாய யதார்த்தம் என்று சொல்கிறார்கள். Virtual Reality

விண்வெளி ஆராய்ச்சிக்கெல்லாம் இந்தத் தொழில்நுட்பம் மிகவும் உபயோகம். இயந்திர மனிதர்களை செவ்வாய்க் கிரகத்தில் இறக்கி விட்டுவிட வேண்டியது. இங்கே முகமூடியை மாட்டிக் கொண்டு உட்கார்ந்து கொண்டே அவர்களை வேலை செய்ய வைக்கலாம். எந்தப்பக்கம் போக வேண்டுமோ – போக வைக்கலாம். மண்ணைத் தோண்டி எடுக்க வேண்டுமா – எடுக்க வைக்கலாம். அங்கு போய் நாம் என்ன செய்ய நினைக்கிறோமோ அவற்றையெல்லாம் இங்கிருந்தே செய்யலாம்.

பூமியில் இருக்கும் கட்டுப்பாட்டு அறைக்குள் இருந்து கொண்டு முகமூடியை மாட்டிக் கொண்டு கை,கால்களில் மின்னணு உணர் கருவிகளை பதித்துக் கொண்டு செவ்வாய் கிரகத்திலுள்ள மின்னணு கருவிகளை இயக்கலாம்.

செவ்வாய் கிரகத்தில் சேகரிக்கப்படும் தகவல்கள் மின்காந்த அலைத் தொடர்பு வழியாக பூமிக்கு வந்து சேர குறைந்தது 20 நிமிடமாவது எடுக்கும். ஆனால், இந்த முகமூடியைப் போட்டிருப்பவர் உடனுக்குடன் அங்கே பார்ப்பதை நேரடி வர்ணனை செய்யலாம்.

இந்த மாயத்தோற்ற அறிவியல் எதிர்காலத்தில் பெரிய பெரிய வேலைகளையெல்லாம் செய்யப்போகிறது.

ஒரு பேருந்து ஓட்டுநர் திடீரென்று சிரிக்கத் தொடங்கினாராம்.

"ஏன் சிரிக்கிறீங்க?" என்று கேட்டிருக்கிறார் பக்கத்திலிருந்தவர்.

"துன்பம் வரும்போது சிரிக்கச் சொல்லியிருக்கிறார்கள் பெரியவர்கள். அதனால் சிரிக்கிறேன்" என்றார்.

"இப்பொழுது யாருக்குத் துன்பம்?" என்றார் இவர்.

"நம் எல்லோருக்கும்தான் என்றார்" அவர்.

"எப்படிச் சொல்றீங்க?" என்றார்.

"எதிரில் பாருங்க ஒரு சக்கரம் உருண்டு ஓடிக் கொண்டிருக்கிறது" என்றார் அவர்.

"அந்தச் சக்கரத்துக்கும் நம் துன்பத்துக்கும் என்ன சம்பந்தம்?"

"அது நம்முடைய பேருந்திலிருந்து தான் கழன்று ஓடிக் கொண்டிருக்கிறது" என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# எதிர்க்கட்சிகளை திரட்டி மாநாட்டுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்துவோம்

## விக்கிரமபாகு கருணாரத்ன எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கை சர்வதேசத்திற்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாது பொதுநலவாய அரச தலைவர்கள் உச்சிமாநாட்டை நடத்துவதில் எவ்வித அர்த்தமுமில்லை. மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றாது, சர்வதேச நாடுகளை அழைத்து மாநாடு நடத்துவதன் காரணம் என்ன? என நவசமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன கேள்வியெழுப்பியுள்ளார்.

எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து பொதுநலவாய உச்சி மாநாட்டிற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளோம். எமது மக்களின் நிலைப்பாடு என்னவென்பதை சர்வதேசமும் அறிந்து கொள்ளவேண்டும் எனவும் அவர் கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்;

யுத்தத்தின் பின்னர் இலங்கை அரசாங்கம் சர்வதேசத்திற்கு கொடுத்த வாக்குறுதிகளை இன்னமும் நிறைவேற்றவில்லை. கற்றுக்கொண்ட பாடங்கள்மற்றும்நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பிலும் இன்றுவரையும் ஒரு முடிவும் காணப்படவில்லை.

நாட்டில்அதிகாரப்பகிர்வுஇன்னமும் ஏற்படவில்லை. பொருளாதார நெருக்கடிக்கு எவ்வித நிவாரணங்களும் இன்றுவரை கிடைக்கவுமில்லை.

இவற்றையெல்லாம் கவனத்திற் கொள்ளாத அரசாங்கம், இன்று பொதுநலவாய உச்சி மாநாட்டை நடத்துவதில் அக்கறை காட்டி வருகின்றது. நகர அபிவிருத்திக்காகவும், பத்து நாட்கள் நாடகத்திற்காகவும் பல கோடி ரூபாய்களை செலவழிக்கும் அரசாங்கம், அப்பாவி மக்களைப் பற்றி சிந்திக்காதது ஏன்?

அரசாங்கத்தில் இருக்கும் அமைச்சர்களுக்கு அவர்களது தனிப்பட்ட செலவுகளுக்காக கோடிக்கணக்கில் செலவு செய்யப்படுகிறது. ஆனால், அப்பாவிமக்களின் அன்றாட பிரச்சினைகள் தொடர்பில் தீர்வொன்றைக் கொடுக்க மறுக்கின்றது.

இலங்கையின்உள்நாட்டு நிலைமைகள் தொடர்பில், இலங்கைக்கு வருகைதரும் சர்வதேச நாடுகள் தெரிந்து கொள்ளவேண்டும். ஹெம்கண்துடைப்புக்களைப் பார்த்து எமது நிலைமைகள் தொடர்பில் முடிவெடுக்காது, அப்பாவி மக்களின் நிலைமைகள் தொடர்பிலும் கவனிக்கவேண்டும்.

யுத்தத்தின் பின்னரும் வடக்கு, கிழக்கில் வாழும் மக்கள் சிக்கலான வாழ்க்கையையே அனுபவித்து வருகின்றனர். விவசாயிகளுக்கான நிவாரணங்கள் எதுவும் அம்மக்களை சென்றடைவதில்லை. இந்த நிலைமையில் பொதுநலவாய மாநாட்டை நடத்துவதில் எவ்வித அர்த்தமுமில்லை.

எனவே எதிர்க்கட்சிகளை இணைத்து அரசாங்கத்திற்கு எதிராகவும் பொது நலவாய உச்சி மாநாடுகள் தொடர்பிலும் எமது எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம். இது தொடர்பில் எதிர்க்கட்சிகளுடனான பேச்சுவார்த்தைகளையும் நடத்த திட்டமிட்டுள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# சுகாதாரக்குழு கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்ற சுகாதாரக்குழுக் கூட்டத்தில் சுகாதாரம் தொடர்பான சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக மன்ற தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை அறிவித்துள்ளார்.

மேற்படி குழுக் கூட்டம் கடந்த வாரம் நகராட்சி மண்டபத்தில் மன்றத்தின் சுகாதாரக்குழுத் தலைவர் சி.சுதர்ஷன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது, நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட வெற்றுக் காணிகளைத் துப்புரவு செய்வதற்கென மேலும் 10 நாட்கள் அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளது.

அத்தோடு, பொதுமக்கள் தமது வீட்டுச் சுற்றாடலிலுள்ள போத்தல்கள், தகரங்கள் பேரன்ற கழிவுப் பொருட்களை பொதிகளில் இட்டு வீதியோரங்களில் வைக்குமாறும், அவற்றை நகராட்சி மன்ற வாகனங்கள் எடுத்துச் செல்லும் எனவும், சாவகச்சேரி நகரிலுள்ள முக்கிய மூன்று சைவ உணவகங்களில், மக்களுக்கு ஆரோக்கியம் அளிக்கும் வகையில் சுத்தமான வாழை இலையில் உணவு பரிமாற வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. (அ-9-29)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 - 140 | 130 |
| பச்சைமிளகாய் | 90 | 80 | 120 |
| தக்காளி | 100 | 90 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 50 |
| கோவா | 40 | 50 | 60 |
| கரட் | 60 | 40 | 80 |
| பூசணி | 40 | 30 | 40 |
| புடோல் | 40 | 60 | 60 |
| வாழைக்காய் | 40 | 30 | 60 |
| சின்ன வெங்காயம் | 190 | 100 - 160 | 200 |
| பெரிய வெங்காயம் | 140 - 150 | 100 | 140 |
| பாகற்காய் | 100 | 90 | 140 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 100 |
| கருணைக் கிழங்கு | 40 | 40 | 60 |
| பயற்றங்காய் | 70 | 100 | 120 |
| லீக்ஸ் | 80 | 80 | 90 |
| பீற்றூட் | 15 | 20 | 40 |
| கறிமிளகாய் | 110 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 60 | 60 | 80 |
| போஞ்சி | 120 | 120 | 160 |
| கீரை - 1 பிடி | 10 | 10 | 20 |
| தேசிக்காய் | 350 | 250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 35 - 45 |

# இராசி பலன்

31.10.2013
(ஐப்பசி 14, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
துவாதசி முன்னிரவு 9.02 மணிவரை
உத்தரம் பிற்பகல் 12.42 மணிவரை
இராகுகாலம் 1.33-3.03 மணிவரை
சுபநேரம் 7.33-9.03 மணிவரை

**மேடம்** கலகலப்பான தகவல்கள் வந்து சேரும் நாள், தேகநலன் கருதி எடுத்த முயற்சி வெற்றிதரும், இலாப நோக்கத்தோடு பழகியவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.

**இடபம்** கனவுகள் நனவாக கந்தனை வழிபட வேண்டிய நாள், பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், பொருட் சேர்க்கைக்கு அடித்தளம் அமைப்பீர்கள், போசன சுகமுண்டு.

**மிதுனம்** விருந்தினரை வரவேற்று வியப்படையும் நாள், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கடகம்** குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், கூட்டு முயற்சிகள் வெற்றிதரும்.

**சிங்கம்** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், ரோக பயமுண்டு, அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**கன்னி** விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கிச் சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய அனுபவங்கள் ஏற்படும் நாள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**துலாம்** நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று நினைக்க வேண்டிய நாள், சுப செலவுகள் அதிகரிக்கும், தொழில் நலன் கருதி பயணங்கள் ஏற்படலாம், சஞ்சலங்கள் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, சேமிப்பை உயர்த்தும் எண்ணம் மேலோங்கும், குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும்.

**தனுசு** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், உற்றார்- உறவினர் உங்களின் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**மகரம்** அரைகுறையாக இருந்த பணிகளை இன்று செய்து முடிப்பீர்கள், புதிய திட்டங்கள் கைகூடும், எதிர்பாராத பயணங்கள் ஏற்படலாம், வரவேண்டிய வரவுகள் வந்து சேரலாம்.

**கும்பம்** வேலைகள் உடனுக்குடன் முடியாமல் இழுத்தடிக்கப்படலாம், நல்லவர் என நினைத்த ஒருவரே உங்களுக்கு குறையாக நடந்து கொள்ளலாம்.

**மீனம்** நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, மைத்துனர் வழியில் மனதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதங்கேணியில் வீடு புகுந்து திருட்டு

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கிராமத்திலுள்ள வீட்டுக்குள் புகுந்த திருடர்கள் 7 பவுண் நகைகளையும் 43 ஆயிரம் ரூபா பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் மருதங்கேணி குடியிருப்பு கிராமத்தில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.


இது தொடர்பாக தெரியவருவதாவது,

நள்ளிரவுவேளை வீட்டார் இக் கிராமத்திலிருந்த தருணம் பார்த்து வீட்டின் கதவை உடைந்து உள்நுழைந்த திருடர்கள் அறையொன்றில் பூட்டப்பட்டிருந்த அலுமாரியை உடைத்து 7 பவுண் தங்க நகைகளையும் 43 ஆயிரம் ரூபா பணத்தையும் களவாடிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மருதங்கேணிப் பொலிஸாருக்கு தகவல் கிடைத்ததையடுத்து அவர்கள் பருத்தித்துறை பொலிசாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

தற்போது பருத்தித்துறை பொலிஸார்மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப் பிரதேசத்தில் கடந்த வாரத்திலிருந்து இது மாதிரியான திருட்டுச் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக பிரதேச மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (அ-9-64)



நன்றி: மிரர்

# வடக்கில் 5000 குடும்பங்களுக்கு அமெரிக்கா நிதியுதவி வழங்கும்

## முதலமைச்சரிடம் உயர்ஸ்தானிகர் நேரில் உறுதியளிப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கில் போரினால் பாதிக்கப்பட்ட நிலையில் வறுமைக் கோட்டின்கீழ் வாழும் 5 ஆயிரம் குடும்பங்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் அமெரிக்க நிதியுதவி வழங்கும் என அந்நாட்டின் உயர்ஸ்தானிகர் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை நேற்றைய தினம் யாழ்.நல்லூர் கோவில் வீதியிலுள்ள அவரது வாசஸ்தலத்தில் சந்தித்து கலந்துரையாடியபோதே இலங்கைக்கான அமெரிக்க உயர்ஸ்தானிகர் மிச்செல சிசென் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமெரிக்க உயர்ஸ்தானிகர் மிச்செல் சிசெனுடனான சந்திப்பையடுத்து ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த முதலமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

அமெரிக்க மக்கள் சார்பாக உயர்ஸ்தானிகர் அம்மையார் என்னைவந்து சந்தித்துள்ளார். அவர் இங்கு வந்தமை எமக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கின்றது. அமெரிக்க மக்கள் எங்களுடைய பிரச்சினைகளைப் புரிந்து வைத்துள்ளனர்.

அதன் அடிப்படையில் எப்பேற்பட்ட உதவிகளை மக்களுக்கு வழங்க முடியும் என்றும் ஆராய்ந்தார். எங்களுடைய சகல விதமான பிரச்சினைகளையும் அவருக்கு தெளிவாக எடுத்துக்கூறினேன்.

போரின் பின்னரான காலப்பகுதியில் வடக்கு மாகாணத்தில் வாழும் மக்கள் எவ்வாறான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்பது தொடர்பாகவும் அவர்கள் புரிந்து வைத்துள்ளனர்.

அதன் அடிப்படையில் வடக்கில் போரினால் பாதிக்கப்பட்ட நிலையில் வறுமைக்கோட்டில் வாழும் 5 ஆயிரம் குடும்பங்களுக்கு இரண்டு வருடகாலப்பகுதிக்குள் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நிதியுதவி வழங்க அமெரிக்க முன்வந்துள்ளது. இதனை இலங்கைக்கான அமெரிக்க உயர்ஸ்தானிகர் என்னிடம் இன்று (நேற்று) நேரிலேயே தெரிவித்தார்.

போரினால் பாதிக்கப்பட்ட நிலையில் வாழ்ந்துவரும் அந்தக்குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகளை மட்டுமல்லாது ஏனைய திட்டங்கள் சிலவற்றையும் விரைவில் தாங்கள் நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளதாகவும் அதற்கென மேலும் பல உதவிகளையும் வழங்க அமெரிக்க தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் எங்களுடைய பிரச்சினைகளை அமெரிக்க மக்கள் தெரிந்து வைத்திருப்பதனால் அந்த நாட்டு மக்களுடன் வடக்கு மாகாண மககள் நெருக்கமான உறவைப் பேணி வளர்க்க அமெரிக்க உயர்ஸ்தானிகர் உதவி வழங்குவார் என்று தாம் நம்புவதாகவும் முதலமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# மின்சார நிலைய வீதியையும் புனரமைக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்துக்கு அருகில் அமைந்துள்ள மின்சார வீதி பலத்த சேதமடைந்துள்ள போதிலும் இது தொடர்பில் எவரும் அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை.

இந்த வீதி யாழ்ப்பாணம் மத்திய பகுதியில் நெரிசலான வாகனப் பாவனையை கொண்டுள்ளதோடு சிற்றூர்திகளும் தனியார் பேருந்துகளும் இவ் வீதியையே பிரதானமாக பயன்படுத்தி வருகின்றன.


இந்நிலையில் குறித்த வீதி பல வருடங்களாக புனரமைக்கப்படாது புனரமைப்பில் கைவிடப்பட்ட வீதியாக இருந்து வருகின்றமை பயணிகளிடம் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

அத்தோடு குறித்த பகுதியிலுள்ள ஏனைய வீதிகள் அனைத்தும் காப்பெற் இடப்பட்டு செப்பனிடப்பட்டுள்ள போதிலும் இவ் வீதி மட்டும் புனரமைக்கப்படாது கைவிடப்பட்ட நிலையில் இருப்பதற்கு காரணம் என்ன? என்ற கேள்வியையும் பலரிடம் எழுப்பியுள்ளது.

மேலும் இவ் வீதியின் மோசமான நிலையினால் விபத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் அதிகரித்துள்ளதோடு இந் நிலைமையால் அப்பகுதி வர்த்தகர்களும் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கி வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே இது தொடர்பில் உரியவர்கள் தமது கடமையை உணர்ந்து விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-5)

# நுண்கலைப்பீட நடனத்துறை மாணவர்கள் ஆர்ப்பாட்டம்



(யாழ்ப்பாணம்)

விரிவுரையாளர்கள் பாரபட்சம் காட்டுவதாகவும் பரீட்சைக் குழுவை மாற்றக்கோரியும் இராமநாதன் நுண்கலைப்பீட நடனத் துறை மாணவர்கள் நேற்று அங்கு ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நடனத்துறை விரிவுரையாளர்கள் மாணவர்களுடன் பாரபட்சமாக நடப்பதை நிறுத்த வேண்டுமெனக் கோரியும் பரீட்சைகளின் போது தமக்குப் பிடிக்காத மாணவர்களை பரீட்சையில் வேண்டுமென்றே தோல்வியடையச் செய்வதையும் நிறுத்தக்கோரியே இவ்வார்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து நாட்களுக்கு முன்னதாக குறித்த பிரச்சினை தொடர்பில் மாணவர்கள் நடனத்துறை தலைவி திருமதி அருட்செல்வி கிருபானந்த் மற்றும் கலைப்பீடாதிபதி வி.பி. சிவநாதன் ஆகியோருக்கு கடிதம்மூலம் தெரியப்படுத்திய போதிலும் நேற்றுவரை மாணவர்களுக்கு உரிய தீர்வு வழங்கப்படாமையால் அவர்கள் மேற்படி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். இவ் ஆர்ப்பாட்டத்தை தாம் முன்னெடுத்தமைக்கான காரணம் தொடர்பில் மாணவர்கள் தெரிவிக்கையில்,

இவ்வருட பரீட்சையில் சில மாணவர்களை விரிவுரையாளர்கள் வேண்டுமென்றே பரீட்சையில் தோல்வியடையச் செய்துள்ளனர்.

பரீட்சைகள் நடைபெற்று மிக நீண்ட காலத்தின் பின்னரே அப்பரீட்சைகளுக்கான பெறுபேறுகள் வெளியாகின்றன.

நடனத்துறையினரின் இவ் அநீதியால் 2 ஆம் வருடத்தில் 6 மாணவர்களும் 3 ஆம் வருடத்தில் 5 மாணவர்களும் நுண்கலைப்பீடத்தில் விரிவுரைகளுக்கு வருவதை இடைநிறுத்தியுள்ளதோடு இறுதியாண்டில் மாணவியொருவரும் உளப்பாதிப்புக்குள்ளாகி தனது கல்வியை இடைநிறுத்தியுள்ளார்.

இவற்றைக் கண்டித்தும் நடனத்துறை பரீட்சைக்குழுவை மாற்ற வேண்டும் எனக் கோரியும் பரீட்சையின்போது வீடியோ பதிவு இடம்பெறவும் பரீட்சையில் புறக்கணிக்கப்பட்ட மாணவர்களுக்கு உரிய தீர்வு வழங்கப்படவேண்டுமெனக் கோரியுமே இவ் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது என மாணவர்கள் தெரிவித்துள்ளனர். (அ-4)




# சிறுவர் தினம்

(மானிப்பாய்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சிறுவர் செயற்பாட்டுக் கழகத்தின் 15ஆவது ஆண்டு நிறைவு விழாவும் இவ்வாண்டுக்கான சிறுவர் தினமும் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரியின் குமார சுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக சிறுவர் செயற்பாட்டுக் கழகத்தின் முன்னாள் பொறுப்பாசிரியர் திருமதி சா.அருந்தவபாலன் கலந்து கொள்ளவுள்ளார்.

அத்துடன் அதிபர் வீ.கணேசராஜா, கழகத்தின் பொறுப்பாசிரியர் நா.கு.மகிழ்ச்சிகரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து சிறுவர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கும் மாவட்ட மட்டத்தில் இடம்பெற்ற பொது அறிவுப் பரீட்சையில் தோற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கும் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (அ-9-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன தொழில்நுட்பங்களுடன் புதிய ஊடக மத்திய நிலையம்

பொதுநலவாய அரச தலைவர்கள் உச்சி மாநாட்டை நேரடி ஒலி, ஒளிபரப்புச் செய்யவும் மற்றும் தகவல் சேகரிக்கவுமுள்ள உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கென நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய புதிய ஊடக மத்திய நிலையம் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக ஊடக மற்றும் தகவல் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பொதுநலவாய மாநாடு தொடர்பிலான செய்தி சேகரிப்பிற்கென ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஊடக மத்திய நிலையத்தின் வசதிகள் குறித்து அமைச்சர் கெஹலிய நேற்று முன்தினம் மேற்பார்வை செய்தபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். பொதுநலவாய அரச தலைவர் மாநாட் டின் ஊடாக மற்றும் பிரசார உபகுழு மற்றும் தகவல் ஊடகத்துறை அமைச்சின் கண்காணிப்பின் கீழ் பொதுநலவாய அமைப்பின் லண்டன் அலுவலகத்தின் அறிவுறுத்தல்களுக்கமைய இந்த ஊடக மத்திய நிலையம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

தகவல் சேகரிக்கும் பொருட்டு வெளிநாடுகளிலிருந்து சுமார் 500 ஊடகவியலாளர்கள் இலங்கைக்கு வருகைதரவுள்ளனர். இந்த ஊடக மத்திய நிலையத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்த சுமார் ஆயிரம் ஊடகவியலாளர்கள் பங்குபற்றுவதற்கான வசதிகள் உண்டு.

செய்தியாளர் மாநாடு நடத்தல், தேவையான தகவல்களை பெற்றுக் கொள்ள நவீன புகைப்பட கருவிகள் உள்ளிட்ட சகல தொழில்நுட்ப வசதிகளும் இங்கு உண்டு. இந்த மத்திய நிலையம் நாட்டின் தனித்துவத்தை வெளிக்காட்டும் வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

பொதுநலவாய மாநாட்டில் ஊடகம் மற்றும் பிரசார நடவடிக்கைகளே முக்கியமான அம்சங்கள் என சுட்டிக்காட்டிய அமைச்சர், இலங்கை பற்றி தவறான கருத்துக்கள் வெளிவந்துள்ள நிலையில், இலங்கைக்கு வரும் வெளிநாட்டு அரச தலைவர்கள் குறித்த தகவலை உலக நாடுகளுக்கு அறிவிக்கும் வகையில் நவீன தொழில்நுட்பங்கள் இங்கு பொருத்தப்பட்டுள்ளன என்றும் குறிப்பிட்டார்.. (அ-2)

## பொதுநலவாய மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும் சரத்குமார் வலியுறுத்து

இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் உச்சி மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும் என்று அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் தலைவர் சரத்குமார் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கையில் நடைபெறவுள்ள பொது நலவாய நாடுகளின் மாநாட்டில் இந்தியா வின் சார்பில் பிரதமர், வெளியுறவுத்துறை அமைச்சர், அதிகாரிகள் உட்பட எவரும் பங்கேற்கக் கூடாது என தமிழக சட்டப் பேரவையில் ஒருமனதாக தீர்மானம் நிறை வேற்றப்பட்டுள்ளது.

ஆனாலும் இல ங்கை மாநாட்டில் இந்தியா பங்கேற் கும் என்று ஒரு சில மத்திய அமைச்சர்க ளும், பங்கேற்காது என்று வேறு சில மத் திய அமைச்சர்க ளும் முரண்பட்ட வகை யில் பேசி வருகின்றனர்.

இலட்சக்கணக்கான தமிழர்களை இனப் படுகொலை செய்த இலங்கை அரசு க்கு எதிர்ப்பு தெரிவி க்கும் வகையில் மாநாட் டில் இந்தியா பங்கேற் கக் கூடாது என்பதே தமிழக மக்களின் எதிர்பார்ப்பாகும்.

தமிழக மக்களின் உணர்வுகளுக்கும், சட்டப்பேரவைத் தீர்மானத்துக்கும் மதிப்பளி த்து இலங்கையில் நடைபெறும் பொதுநல வாய மாநாட்டை இந் தியா முழுவதுமாக புறக்கணிக்க வேண் டும் என அவர் வலி யுறுத்தியுள்ளார். (அ-2)

# பிரிட்டன் பிரஜையின் வழக்கு கொழும்பு மேல்நீதிமன்றில்

பிரித்தானிய பிரஜை குராம் ஷேக் படுகொலை தொடர்பாக சந்தேக நபர்களுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

தங்காலை டி நேச்சர் என்ற விடுமுறை விடுதியில் வைத்து பிரித்தானிய பிரஜையான குராம் ஷேக் என்பவர் கொலை செய்யப்பட்டும் அவரது ரஷ்ய காதலியான விக்டோரியா அலெக்ஸ்சாண்ரியாவை தாக்கி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகவும் சந்தேக நபர்களுக்கு எதிராக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் 17 குற்றச்சாட்டுக்களின் கீழ் தங்காலை பிரதேச சபைத் தலைவர் சம்பத் சந்திரபுஷ்ப வித்தியாபத்திரன உட்பட 6 சந்தேக நபர்களுக்கு எதிராக நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில், கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி குமுதினி விக்ரமசிங்க முன்னிலையில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

கொலை, பாலியல் வல்லுறவு, கொள்ளை உட்பட சந்தேக நபர்களுக்கு எதிராக 17 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

ஏற்கனவே சந்தேக நபர்களுக்கு எதிராக தங்காலை மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

சந்தேக நபர்கள் அரசியல் பலத்தை கொண்டு சாட்சியாளர்களுக்கு அழுத்தங்களைக் கொடுக்கக் கூடும் என்பதால் சட்டமா அதிபர் தனக்குள்ள அதிகாரங்களைப் பாவித்து கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு வழக்கை மாற்றியுள்ளார். (அ-2)


**விற்பனைக்கு**

மானிப்பாயில் ஊர்ச் சேவல் கோழிகள் விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு:**
**0774084732**

(4378)



MA, MCom, MBA, MSc PG Diploma

**காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)**

மேற்படி பல்கலைக்கழகத்தினால் (May 2014 பரீட்சைக்குரிய புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன

வரலாறு, அரச அறிவியல், பொருளியல், பொதுநிர்வாகம், சமூகவியல், சமயமும் தத்துவமும் (philosophy Religion) ஆங்கிலம், தமிழ் Journalism and mass communication ஆகிய பாடங்களில் ஒன்றினை தெரிவுசெய்யமுடியும்.

PG. Diploma ஒரு வருட கற்கை நெறியாக Management, Marketing Management Journalism and mass communication, Computer Application ஆகிய பாடநெறிகளில் ஒன்றினை தெரிவுசெய்ய முடியும்.

பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.

முக்கிய கவனிப்பு: பதிவு இறுதி திகதி 10.11.2013

மேற்படி பரீட்சைகள் யாவும் காமராசர் பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட யாழ். இணைப்பு நிறுவனமாகிய புதிய உயர் கல்லூரி வளாகத்தில் நடைபெறும்.

மேற் குறிப்பிட்ட பட்ட நெறிகள் யாவும் இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.

யாழ். இணைப்பாளர்
காமராசர் பல்கலைக்கழகம்,
தொ.பே: 021 222 8148

(சி/5303)

**புதிய உயர் கல்லூரி,**
**ஆரிய குளம் சந்தி,**
**யாழ்ப்பாணம்.**





**குறைந்த கட்டணத்தில் 24 மணி நேர சேவை**

24/7 ONLY MULTI SPECIALITY HOSPITAL IN JAFFNA

Northern Central Hospitals

**நொதன் சென்றல் வைத்திய சாலை வழங்கும் பிரத்தியேக வைத்திய சேவைகள்**

வட பகுதி மக்களின் தேவை கருதி நொதன் சென்றல் வைத்தியசாலை பல நவீன பிரத்தியேக வைத்திய மற்றும் சத்திர சிகிச்சை சேவைகளை நோயாளிகள் கொழும்பு செல்ல வேண்டிய அவசியமில்லாது இங்கேயே வழங்கி வருகின்றதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றது. இங்கு வழங்கப்படும் நவீன சேவைகளாவன:

**கண் சத்திர சிகிச்சை**



விசேட நிபுணத்துவம் வாய்ந்த கண் சத்திர சிகிச்சை நிபுணரால் சகல கண்சத்திர சிகிச்சைகளும் குறைந்த செலவில் மேற்கொள் ளப்படுகின்றன. நாளாந்த கண் கிளினிக்குகளும் நடைபெறுகின்றன.

**காது மூக்கு தொண்டை சத்திர சிகிச்சை**

விசேட வைத்திய நிபுணரால் உடனுக்குடன் நவீன சத்திர சிகிச்சைக் கூடத்தில் மேற்கொள்ளப் படுகின்றது.



**Dentel Surgery (Orthodontic) சகல விதமான பற்சிகிச்சைகள்**



பற் சிகிச்சை நிலையத்தில் பல் கட்டுதல் பல்முடி போடுதல் பாலமிடுதல் என்பவற்றுடன் சகல பற்சிகிச்சைகளும் orthodontic சிகிச்சையும் தினமும் மேற்கொள்ளப்படுகின்றன.

(சி/5239)

**342, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**
T.P: 021 221 9988, 021 221 9977, 021 222 2263 Fax: 021 222 2263
Web : www.nchjaffana.com E-mail: nchjaffna@gmail.com



**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1980 இந்து (Vishvakulam)<br>நட்சத்திரம்: சதயம் 3<br>கி.பா : 31.5 உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L<br>நகைத்தொழில் (சொந்தம்)<br>தொ.இ: B/2418 | பிறப்பு: 1987 இந்து (V)<br>நட்சத்திரம்: சித்திரை 4<br>கி.பா : 12 உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/2462 |
| பிறப்பு: 1980 இந்து (V)<br>நட்சத்திரம்: ரோகினி 1 செவ் 7இல்<br>கி.பா : 69 உயரம்: 5'6'<br>தகைமை/தொழில்: A/L (பிரான்ஸ் PR)<br>தொ.இ: B/2420 | பிறப்பு: 1984 இந்து (V)<br>நட்சத்திரம்: புனர்பூசம் 1<br>கி.பா : 60 உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L / தனியார் கம்பனி (UK)<br>தொ.இ: G/2467 |
| பிறப்பு: 1980 இந்து (Kurukulam)<br>நட்சத்திரம்: கார்த்திகை 2<br>கி.பா : 42.25 உயரம்: 5'11'<br>தகைமை/தொழில்: A/L, National Certificate in Enginering, Skills Enhancement Programme in Domestic Electrical Wiring / உதவி தொழில் நுட்ப உத்தியோகத்தர்<br>தொ.இ: B/2423 | பிறப்பு: 1987 இந்து கிறிஸ்தவம்(V)<br>உயரம்: 4'11"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/2472 |
| பிறப்பு: 1981 இந்து (V)<br>நட்சத்திரம்: ரோகினி சூரின் செவ் 12இல<br>கி.பா : 19.75 உயரம்: 6'<br>தகைமை/தொழில்: Civil Eng, Advanced Diploma in City & Guilds / Civil Engineer<br>தொ.இ: B/2426 | பிறப்பு: 1978 கிறிஸ்தவம் (Padaiyadche)<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: B.Com / Accountant<br>தொ.இ: G/2480 |

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**

**(சர்வதேச இலவச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சங்கிலிகளை திருடிய குற்றச்சாட்டு; சந்தேக நபருக்கு விளக்கமறியல்

(முல்லைத்தீவு)

கள்ளப்பாட்டுப் பகுதியிலுள்ள இராயப்பர் கோயிலடியில் சங்கிலித் திருட்டில் ஈடுபட்ட பெண் ஒருவரை எதிர்வரும் நவம்பர் மாதம் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கள்ளப்பாட்டுப்பகுதியிலுள்ள இராயப்பர் கோவிலடியில் சங்கிலித்திருட்டில் ஈடுபட்ட பெண் முன்னதாக வேறு நான்கு பேரின் தங்கச் சங்கிலிகளையும் அபகரித்துள்ளார்.

இப் பெண் தங்க சங்கிலியை திருடிக்கொண்டு முச்சக்கரவண்டியில் தப்பிச் செல்லும் வேளையில் பொதுமக்கள் கொடுத்த தகவலுக்கிணங்க பொலிசார் முச்சக்கரவண்டியை பின் தொடர்ந்து சென்றுள்ளனர்.

இதனை அவதானித்த குறித்த பெண் முச்சக்கரவண்டியில் இருந்து பாய்ந்து தப்பிக்க முற்பட்ட வேளை காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் நேற்றைய தினம் பொலிசாரால் முல்லைத்தீவு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

கைது செய்யப்பட்ட பெண் திருகோணமலையைச் சேர்ந்தவர் எனவும் முன்னதாக மற்றொரு திருட்டு வழக்கிலும் விளக்கமறியலில் இருந்துள்ளதாகவும் பொலிசார் குறிப்பிட்டுள்ளனர்.

வழக்கை விசாரித்த முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா சந்தேக நபரை எதிர்வரும் நவம்பர் மாதம் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (அ-ம)

# வவுனியா பொது வைத்தியசாலையில் இலவச ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சை

(வவுனியா)

வவுனியா பொது வைத்தியசாலையில் நேற்று தொடக்கம் நவம்பர் முதலாம் திகதி வரையில் மூன்று தினங்களுக்கு இலவச பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை நடைபெறவுள்ளதாக வைத்திய அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய இராச்சியத்திலிருந்து வருகை தந்திருக்கும் ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சை நிபுணர் டாக்டர் அல்வின் ஞானமணி தலைமையில் வவுனியா பொது வைத்தியசாலை மருத்துவர்களுடன் இணைந்து இந்த சிகிச்சை வழங்கப்படவுள்ளது.

இந்த மருத்துவ முகாமுக்கு லண்டனில் உள்ள இம்மானுவேல் கிறிஸ்தவ ஐக்கிய சபையும், ஜெப ஆலய மிஷனும் இணைந்து அனுசரணை வழங்கியுள்ளன.

இம்முகாமில் தீக்காயம், மணிக்கட்டு, கை விரல் சம்பந்தமான நோய்கள் ( மணிக்கட்டு மற்றும் கை அறுவை சிகிச்சை ), கோரமான வடுக்கள், கால் சம்பந்தமான காயங்கள், துணடிக்கப்பட்ட நரம்புகள், நாட்பட்ட புண்கள், பிறப்புக் கோளாறுகள் , கை சம்பந்தமானவை, உலோகத் துண்டுகள், கண்ணாடித் துண்டுகள் என்பவற்றை உடலின் உட் பாகங்களில் இருந்து அகற்றுதல், மறுசீரமைப்பு அறுவைச் சிகிச்சை போன்ற சிகிச்சைகள் அளிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-250)




# வவுனியாவில் அதிவிரைவு தபால் சேவை ஆரம்பம்




(குருமன்காடு)

துரிதமாக கடிதங்களை கிடைக்கச் செய்வதற்காக அதிவிரைவு தபால் சேவை நாடளாவிய ரீதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் வவுனியாவிலும் நேற்று முன்தினம் அதி விரைவு தபால் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

இது தொடர்பில் வடமாகாண பிரதி அஞ்சல் அதிபதி நாயகம் என்.ரட்ணசிங்கம் இது தொடர்பில் கருத்து தெரிவிக்கையில்,

எமது திணைக்களத்தின் மற்றுமோர் முயற்சியாக தபால்களை உடனடியாக கிடைக்கச் செய்யக் கூடியதாக எமது அமைச்சரின் நடவடிக்கை காரணமாக அதிவிரைவு தபால் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந் நடவடிக்கைக்காக வவுனியா தபால் நிலையத்திற்கு இரண்டு வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதில் ஒன்று யாழ்ப்பாணம் சென்று வடமாகாண தபால்களை விநியோகிக்கும். மற்றையது தம்புள்ளைக்கு சென்று தபால்களை ஒப்படைக்கும்.

தென் பகுதிக்குரிய தபால்களை தம்புள்ளை பகுதியில் வைத்து சேகரிக்க முடியுமாதலால் அங்கு செல்லும் வாகனம் விநியோகத்தையும் செய்யும் என்றார்.

இதன் மூலம் தபால் விநியோகத்தில் ஏற்படும் தடங்கல்களை குறைக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்ட இந்த சேவையில் பிரதி அஞ்சல் அதிபதி நாயகம் என்.ரட்ணசிங்கம், பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் எம்.ஜி.அல்ஹா சல்ஹாது, மற்றும் வவுனியா அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (ம-250)

# வீதியைப் புனரமைத்து போக்குவரத்திற்கு உதவுங்கள்

(கண்டாவளை)



சுண்டிக்குளம் சந்தியில் இருந்து சுண்டிக்குளம் கடற்கரை செல்லும் பிரதான வீதி புனரமைப்பு செய்யப்படாது குண்டும் குழியுமாக காணப்படுவதால் இவ்வீதியால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இவ்வீதியால் 2 கிலோமீற்றர் தூரம் வரையான பகுதி புனரமைக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்டளவு தூரவீதியே புனரமைப்புச் செய்யப்படவில்லை.

இவ்வீதியால் தினமும் பாடசாலை மாணவர்கள் மற்றும் பயணிகளும் பயணிக்கின்றனர்.

எனவே மழைகாலத்திற்கு முன்னர் இவ்வீதியைப் புனரமைத்து போக்குவரத்திற்கு உதவவேண்டுமென பயணிகளும் அப்பகுதி மக்களும் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-263)

# விளையாட்டு விழா

(குருமன்காடு)


வவுனியா நெளுக்குளம் பாலாமைக்கல் யங்பைட் விளையாட்டுக்கழகம் 12ஆவது தடவையாக பெருமையுடன் நடாத்தும் தீபாவளி விளையாட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை யங்பைட் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய நிகழ்வுகளாக காலை 8.30 மணிக்கு வரவேற்பு நிகழ்வும், தொடர்ந்து 9 மணிக்கு சிறுவர் தினத்தை கொண்டாடும் முகமாக சிறுவர் நிகழ்ச்சிகளும், பிற்பகல் 1 மணிக்கு முதியோர் விழா சிறப்பு நிகழ்ச்சிகளும், பிற்பகல் 2.30 மணிக்கு யங்பைட் விளையாட்டுக்கழகம் நடாத்தும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியும் நடைபெறவுள்ளன.

இவ் இறுதிப்போட்டியில் யங்பைட் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அம்மன் விளையாட்டுக்கழகம் விளையாடவுள்ளது.

மாலை 7 மணிக்கு HI FI இசைக் குழுவினர் வழங்கும் இன்னிசை கச்சேரி நடைபெறவுள்ளது. (ம-250)

# கட்டாக்காலிகளை கட்டுப்படுத்துக



(பூநகரி)

பூநகரிப் பகுதியில் பருவ மழையின் தாமதத்தால் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நெல் வயல்களில் நெல் விதைகள் முளைவிடாத நிலையில் இருப்பதாலும், முளைத்து வரும் நெற்பயிர்களை கட்டாக்காலிகள் அழித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

சில பகுதிகளில் பெய்த சிறிய மழைக்கு முளைத்த நெல்வயல்களில் உள்ள பயிர்களை கட்டாக்காலி மாடுகள் அழித்து வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

பருவமழை பிந்திய நிலையில் கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்துவதில் மக்களோ, கமக்கார அமைப்பினரோ எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்காமையால் முளைத்த அற்பசொற்ப பயிர்களும் அழிவடைகின்றன.

இதனால் கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரியவர்களிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (ம-84)



கிளி/புனித அந்தோனியார் றோ.க வித்தியாலயத்தில் கல்வி பயிலும் வறுமைக்கோட்டிற்குட்பட்ட 30 மாணவர்களுக்கு ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தால் புதிய ஆடைகள் வழங்கப்பட்ட போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிக்கை விடுவதால் பயனில்லை; ஒன்றுபட்டு சாதிக்க வேண்டும்

## கோவில் உடைப்பு குறித்து ந.குமரகுருபரன்

(கொழும்பு)

**தம்புள்ளை ஸ்ரீபத்திரகாளி அம்மன் ஆலயம் உடைத்து தரைமட்டமாக்கப்பட்டமை வேதனையளிக் கும் விடயமாகும். இந்தச் செயல் நாட்டில் வாழும் இந்துக்களின் உரிமைகளை கேள்விக்குறியாக்கியுள்ளது என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் ந.குமரகுருபரன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, இலங்கையில் சிறுபான்மையினரின் மதஸ்தலங்கள் பரவலாக உடைக்கப்பட்டு, தாக்கப்பட்டு வருகின்றமை தற்போது வழமையாகி விட்டது. அந்த வகையில் தம்புள்ளையில் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம் சில மாதங்களாக தாக்குதலுக்குள்ளாகி வந்தது.

இது தொடர்பில் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தும் முகமாக ஆங்கில மற்றும் தமிழ்த் தேசியப் பத்திரிகைகள் வாயிலாக நாம் பல கோரிக்கைகளை முன்வைத்திருந்தோம். ஆனபோதிலும் தற்போது கோயில் தகர்க் கப்படடுள்ளது.

தமிழ் பேசும் சிறுபான்மையினரின் அடையாளங்களை இல்லாதொழிக்கும் நடவடிக்கையிலேயே பேரினவாத சக்திகள் ஈடுபட்டு வருகின்றன. அதன் காரணமாகவே பள்ளிவாசலும் ஆலயங்களும் கிறிஸ் தவ தேவாலயங்களும் தாக்க ப்படுகின்றன. தம்புள்ளை வரலாற்றில் தமிழ் பேசும் மக்களின் இனப் பரம்பலையும் அவர்களது வரலாற்றையும் இல்லாதொழிக்க வேண்டும் என்ற காரணத்தினாலேயே தமிழ் பேசும் மக்களை தம்புள்ளை நகர்புறப்பகுதிகளில் இருந்து அப்புறப்படுத்தும் நடவடிக்கையை சிங்கள இனவாதிகளும் பௌத்த மதத் தலைவர்களும் முன்னெடுத்து வருகின் றனர்.

இது போன்ற நடவடிக்கைகள் தம்புள்ளையில் தமிழர்கள் வாழ்ந்தனர் என்ற அடையாளத்தை இல்லாது ஒழித்து விடும்.

இது தொடர்பாக யோகராஜ எம். பி. ஆரம்பத்திலிருந்தே குரல் கொடுத்து வந்தார். இதற்காக புதிய சிலையை கொடுத்து இணக்க அரசியலை ஏற்படுத்த முனைந்தார். ஆனால் அதனை தகர்த்தெறியும் வகையில் இனவாதிகள் செயற்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனை கூட்டத்தில் இது தொடர்பில் அதாவது ஆலயத்தை உடைக்கக் கூடாது என்றும் இதற்கு அனைவரும் உதவி நல்க வேண்டும் என்றும் யோகராஜன் எம். பி. வேண்டுகோள் விடுத்திருந்தார்.

ஆனால் அது தொடர்பில் அனைவரும் மௌனம் காத்துள்ளனர். இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

இது தொடர்பில் தனித் தனியாக நாம் அறிக்கைகளை விடுவதால் எவ்வித பயனும் இல்லை. நாம் ஒன்றுபட்டு சாதிக்க வேண்டிய நேரம் வந்து விட்டது. (அ-2)


**அளவெட்டி மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**

**பதவி வெற்றிடம் - விற்பனை உதவியாளர்** (308/17)

எமது சங்கத்தில் விற்பனை உதவியாளர் (308/17) பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களை சங்கக்காரியாலயத்தில் 20/- செலுத்தி பெற்றுக்கொள்ளவும். விண்ணப்பங்கள் யாவும் பொதுமுகாமையாளர். அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கம். கூட்டுறவாளர் வீதி. அளவெட்டி என்னும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ 15.11.2013 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல்வேண்டும்.

1. பதவி விற்பனை உதவியாளர் (308/17)
2. சம்பள அளவுத் திட்டம் 8950-10300
(66/2006 இன்படி) 65*10 - 70* 10
3. கல்வித் தகைமைகள்
அ.கூட்டுறவுப் பணியாளர் கனிஷ்ட தரச்சான்றிதழ்
அல்லது
ஆ. 8 ஆம் வகுப்புச் சித்தியுடன் விற்பனை அலுவல்களுடன் தொடர்புடையதாக மூன்று வருடங்களுக்கு குறையாத அனுபவம்
4. வயதெல்லை - 18-45

(4384)

28.10.2013

பொதுமுகாமையாளர்,
அள.மல்.ப.நோ.கூ.சங்கம்



சந்துரு இசைக்குழுவின் இசைச்சங்கமத்துடன்

**சுடர் தீபாவளி கொண்டாட்டம்**

கார்த்திகை 01ம் திகதி

யாழ்.பிரதான பஸ் நிலையத்திற்கு அருகாமையில்

மாலை 04 மணி முதல் இரவு 09 மணி வரை

இணை அனுசரணையாளர்கள் :-

ஹரிகணன் பிறின்டேர்ஸ்
சங்கீதா AGENT
தாயகம் வைத்தியசாலை
GRAM RESTAURANT
இஷாரா பெஷன்
ஆச்சி HOT FOOD
மயில் அழகுக்கலை & போட்டோ
அருள் குளோபல் EXPRESS
வரதன் லேணர்ஸ்
E.S.P.நாகரட்ணம்

Fm சுடர் தமிழ் நெஞ்சங்களின் இதயகீதம்

அனுமதி இலவசம்

வாருங்கள் சுடரோடு தீபாவளி கொண்டாடுங்கள்

www.sudarfm.com


## புகலிட கோரிக்கையாளர்களை ஆஸி.அரசாங்கம் மதிப்பதில்லை

### அந்நாட்டு புகலிட செயற்பாட்டாளர் சுட்டிக்காட்டு

அவுஸ்திரேலிய அரசாங்கம் புகலிடக் கோரிக்கையாளர்களின் உரிமைகளை மதிப்பதில்லை என அந்நாட்டு புகலிடச் செயற்பாட்டுக் குழுவின் உறுப்பினர் ட்ரவர் க்ரான்ட் தெரிவித்துள்ளார்.

புகலிடக் கோரிக்கையாளர்களின் உரிமைகளை மதிக்க வேண்டுமென அண்மையில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் வலியுறுத்தியிருந்தது.

எனினும், பிரதமர் டோனி அப்போட் தலைமையிலான புதிய அரசாங்கம் புகலிடக் கோரிக்கையாளர்களின் அடிப்படை உரிமைகளை உதாசீனம் செய்து வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

புகலிடக் கோரிக்கையாளர்கள் காலவரையறையின்றி தடுத்து வைக்கப்படுவதன் மூலம் அவர்களுக்கு உள மற்றும் உடல் ரீதியான பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

இதனால் ஏற்படக் கூடிய பிரச்சினைகளை அரசாங்கம் உதாசீனம் செய்து வருகிறது.

தம்மில் எந்தவிதமான குற்றச்சாட்டுக்களையும் சுமத்தாது, எதற்காக தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றோம் என்பதனையும் அறியாது புகலிடக் கோரிக்கையாளர்கள் துன்பப்படுகின்றனர்.

காலவரையறையின்றி புகலிடக் கோரிக்கையாளர்களை தடுத்து வைப்பதானது அவர்களின் சிவில் மற்றும் அடிப்படை உரிமை மீறலாகும் என ஐக்கிய நாடுகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை, காலவரையறையின்றி தடுத்து வைக்கப்பட்டிருந்த புகலிடக் கோரிக்கையாளர் ஒருவர் தற்கொலைக்கு முயற்சித்துள்ளார்.

50 இற்கும் மேற்பட்ட மெய்யான புகலிடக் கோரிக்கையாளர்கள் என அடையாளம் காணப்பட்டவர்கள். அவுஸ்திரேலிய பாதுகாப்புப் புலனாய்வுப் பிரிவின் பரிந்துரைக்கு அமைய இவ்வாறு காலவரையறையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் இலங்கைத் தமிழர்கள் என தெரிய வருகின்றது. (அ-2)


அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

**நன்றி நவிலலும்**



கடந்த 01.10.2013 சிவபதமடைந்த லோகிதாசன் ஜீவராணி அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று 31.10.2013 வியாழக்கிழமை காலை 7 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் இறுதிக் கிரியைவரை உதவி புரிந்தவர்களுக்கும் தொலைபேசி, மலர் வளையம், துண்டுப் பிரசுரம் மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்துகொள்ளவும்.

வல்லை றோட், தொண்டைமாநகரம்
0776904590

(4373)

எம்.லோகிதாசன்,
கணவன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# காணாமல் போன பூனைக்குட்டி!

கலைச்செல்வி ஐந்தாம் வகுப்பு படிக்கிறாள். நல்ல கெட்டிக்காரப் பெண். அம்மா, அப்பாவின் செல்லப் பெண். அவளுக்கு ஒரு அண்ணன். கண்ணன். அவன் எட்டாம் வகுப்பு படிக்கிறாள். விளையாட்டுப் பிரியன். தாத்தா அவளுக்கு நிறையக் கதைகள் சொல்வார். அப்பாதான் கொஞ்சம் கட்டுப்பாடு. சின்னக்குடும்பம். எல்லோரும் பாசக்காரர்கள்.

ஒருநாள் பள்ளியிலிருந்து வீட்டிற்கு கலைச் செல்வி உற்சாகமாக, துள்ளல் நடையில் வந்தாள். வழக்கமாக திண்ணையில் உட்கார்ந்திருக்கும் தாத்தாவிடம் பேசிவிட்டுத்தான் செல்வாள். அன்று அவரைக் கண்டு கொள்ளவில்லை.

அம்மா, என்ன கொண்டு வந்திருக்கேன், பாரேன் என்று அம்மாவிடம் உரத்த குரலில் ஒலிபரப்பினாள் கலை.

என்ன கலை, அப்பிடி என்ன அதிசயமா கொண்டு வந்திருக்க? என்று கேட்டுக் கொண்டே சமையல் அறையிலிருந்து அம்மா வெளியே வந்தாள்.

கலை கையில் சின்னஞ் சிறு பூனைக்குட்டி. பிறந்து சில நாட்கள் தான் ஆகியிருக்கும். மஞ்சளும், வெள்ளையும் கலந்த பழுப்பு நிறம். சிரமப்பட்டுத் தலையைத் தூக்கிப் பார்த்தது. மெல்லிய குரலில் மிஞ்ஞா என்று குரல் கொடுத்து தன்னை அறிமுகம் செய்துகொண்டது. மிக அழகாக உயிருள்ள பொம்மையாகக் காட்சி தந்தது.

ஏய் கலை, இதை எங்கிருந்து பிடிச்சிட்டு வந்தே? பூனைக்குட்டியை வீட்டுக்குள்ளே கொண்டு வரக் கூடாது. எங்கே எடுத்தியோ அங்கே கொண்டு போட்டுட்டு வா என்று அம்மா அதட்டினாள். அம்மாவுக்குப் பூனை என்றால் அலர்ஜி. பிடிக்காது.

அம்மா, இதை நான் தெருவிலே கிடந்து தூக்கிட்டு வரலை. எங்கூடப் படிக்கிற கனி வீட்டிலிருந்து கேட்டு வாங்கிட்டு வந்தேன். அவுங்க வீட்டுப்பூனை நாலு குட்டி போட்டிருக்கு. அதிலே ஒண்ணு தான் இது. ஆசையா வளக்கனும்னு கொண்டு வந்திருக்கேன். பீளிஸ்மா என்று கெஞ்சினாள் கலை. கலை சொன்னால் கேளு. பூனையை வளர்க்கிறது ரொம்பக் கஷ்டம். வீட்டுக்குள்ளே எங்கேயும் போகும். சில சமயத்தில் வீட்டை அசுத்தப்படுத்திவிடும். சொன்னாக் கேள். கொண்டுபோய் விட்டுவிட்டு வா என்று அம்மா அதட்டினாள்.

கலை என்னசெய்வ்தென்று தெரியாமல் நின்று கொண்டிருந்தாள். அவளது கைகளுக்குள் பூனைக்குட்டி பதுங்கிக் கொண்டிருந்தது. அதன் மென்மையான பட்டு மேனியை கலையின் விரல்கள் வருடிக் கொண்டிருந்தன.



அப்போது அப்பா வீட்டிற்குள் வந்தார். கலையையும் அவள் கையிலிருந்த பூனைக் குட்டியையும் பார்த்தார். அப்பா என்று கலை தனது வேண்டுகோளை வைக்கு முன்பு அம்மா படபடவென்று பேசினாள். பூனைக்குட்டியை வளர்க்கக்கூடாது என்று அடித்துக் கூறினாள். அப்பா பேசாமல் வீட்டிற்குள் சென்று விட்டார்.

அந்த நேரத்தில் கண்ணன் வந்தான். டேய் கண்ணா. இந்தப் பூனைக்குட்டியைக் கொண்டுபோய் கலை கூடப் படிக்கிற கனி வீட்டிலே விட்டுட்டு வா என்றாள் அம்மா.

கலை, அண்ணா அம்மாக் கிட்ட பூனையை வளர்க்கலாம்னு சொல்லு. எனக்கு இதை வளர்க்க ரொம்ப ஆசை. என்று தனது விருப்பத்தைக் கூறி அண்ணனின் ஆதரவைக் கண்களால் வேண்டினாள்.

அந்தப்பூனைக் குட்டியை உற்றுக் கவனித்த கண்ணன், அது அழகாய் இருப்பதைக் கண்டான். தனது தங்கையைப் பார்க்கப் பாவமாக இருந்தது. அவனிடம் இயல்பாக இருக்கும் முரட்டுத்தனத்தில் மாறுதல். அம்மா, கலை இவ்வளவு பிரியமா பூனைக்குட்டியைத் தூக்கிட்டு வந்திருக்கா. வளத்துட்டுப் போறாம்மா என்று தங்கைக்காகப் பரிந்து பேசினான்.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த தாத்தா திண்ணையிலிருந்து எழுந்துவந்தார். தனது மருமகளிடம் கோதை, நீ சொல்றபடி வீட்டுக்குள்ளே கொண்டு வராமல் திண்ணையிலே ஓர் அட்டைப்பெட்டியிலே வைச்சு கலை வளர்க்கட்டும். வீட்டுக்குள்ளே வராமல் நான் பார்த்துக்கிறேன் என்றார்.

கண்ணனும் தாத்தாவும் இப்படி தனக்கு ஆதரவாகப் பேசுவார்கள் என்று கலை எதிர்பார்க்கவில்லை. நன்றியோடு இருவரையும் பார்த்தாள். இப்போது அம்மாவின் போக்கில் மாற்றம்.

எப்படியும் போங்க இந்தப் பூனைக்குட்டி வீட்டுக்குள்ளே மட்டும் வரக்கூடாது. வந்திருச்சின்னா அவ்வளவுதான். தூக்கிக்கொண்டுபோய் தெரிவிலயே போட்டுருவேன் என்று சொல்லிவிட்டுத் தனது வேலையைக் கவனிக்க அடிப்படிக்கு போய்விட்டாள்.

தாத்தா வீட்டுக்குள்ளிருந்து ஒரு அகலமான அட்டைப் பெட்டியைக் கொண்டு வந்து திண்ணையில் வைத்தார். கலை பூனைக்குட்டியை அந்தப் பெட்டிக்குள் விட்டாள். அது மெதுவாக நடை பழகியது. தாத்தா கூறியபடி ஒரு கிண்ணத்தில் பால் கொண்டு வந்து வைத்தாள். அதற்கு நல்லபசி. உறிஞ்சிக் குடித்தது. பெட்டியின் மூலையில் படுத்துக்கொண்டது.

கலை படிக்கிற நேரம், பள்ளிக்கூடம் போகிற நேரம் தவிர மற்ற நேரமெல்லாம் பூனைக்குட்டிக்கு அருகிலேயே இருப்பாள். பூனைக்குட்டியும் அவளிடம் ஒட்டிக் கொண்டது. நன்றாக நடக்க ஆரம்பித்தது. அவளைச் சுற்றிச் சுற்றி வந்தது.

அது வீட்டிற்குள் போகாமல் தாத்தா பார்த்துக் கொள்வார். அது சுதந்திரமாக சுற்றி வரும். விளையாடும். சுற்றுச் சுவர் இருந்ததால் வீட்டை விட்டு வெளியில் போகாது.

பள்ளிக்கூடத்திலிருந்து கலை வருவதைப் பார்த்தால் மெல்லிசையாக மிஞ்ஞா என்று குரல் கொடுக்கும். எங்கிருந்தாலும் அவள் குரல் கேட்டால் ஓடி வந்துவிடும். அதற்கு அவர் கண்மணி என்று பெயர் வைத்திருக்கிறாள். அவள் அந்தப் பெயர் சொல்லிக் கூப்பிட்டால் திரும்பிப் பார்க்கும் அளவிற்கு பழகிவிட்டது.

கண்ணனுக்கும் அது பிடிக்கும். அவனும் சில நேரம் அதோடு விளையாடுவான். தாத்தாதான் அதன் பாதுகாவலர்.

அப்பா, அவ்வப்போது என்ன கலை உன் செல்லக் குட்டி எப்படி இருக்கு? என்று கேட்பார். ஆனால் அம்மா தான் அந்தப் பூனைக்குட்டியைக் கண்டுகொள்வதில்லை. அது கலைக்கு சற்று வருத்தத்தைத் தந்தது .........

(தொடரும்)




- 1517-கிறிஸ்தவச் சீர்திருத்த இயக்கம்: மார்ட்டின் லூதர் தனது 95 கொள்கைகளை ஜெர்மனியின் விட்டன்பேர்க் தேவாலய வாசலில் வெளியிட்டார்.
- 1803-கப்டன் ட்றைட்பேர்க் தலைமையில் ஆங்கிலேயப் படைகள் பண்டாரவன்னியனின் படைகளைத் தாக்கினர். பலர் கொல்லப்பட்டனர்.
- 1863-நியூசிலாந்தில் நிலைகொண்ட பிரித்தானியப் படைகள் வைக்காட்டொ என்ற இடத்தில் தாக்குதலை நடத்தியதைத் தொடர்ந்து மவோரி போர்கள் மீண்டும் ஆரம்பமானது.
- 1864-நெவாடா ஐக்கிய அமெரிக்காவின் 36ஆவது மாநிலமாக இணைந்தது.
- 1876-இந்தியாவின் கிழக்குக் கரையில் இடம்பெற்ற மிகப்பெரும் சூறாவளி காரணமாக 2 இலட்சம் பேர் வரை இறந்தனர்.
- 1913-ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது நெடுஞ்சாலை லிங்கன் நெடுஞ்சாலை திறக்கப்பட்டது.
- 1924- உலக சேமிப்பு நாள் இத்தாலியின் மிலேனோ நகரில் சேமிப்பு வங்கிகளின் உலக அமைப்பினால் அறிவிக்கப்பட்டது.
- 1931-தமிழின் முதல் பேசும் படம் காளிதாஸ் வெளியானது.
- 1954-அல்ஜீரியாவில் பிரெஞ்சு ஆக்கிரமிப்புக்கெதிராக அல்ஜீரிய தேசிய விடுதலை முன்னணி போராட்டத்தை ஆரம்பித்தது.
- 1956-ஐக்கிய இராச்சியம் மற்றும் பிரான்ஸ் சூயஸ் கால்வாயைத் திறக்க வற்புறுத்தி எகிப்தின் மீது குண்டுகளை வீசின.
- 1968-வியட்நாம் போர்: பாரிஸ் அமைதிப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து வட வியட்நாம் மீதான அனைத்துத் தாக்குதல்களையும் நவம்பர் மாதம் 1 ஆம் திகதியிலிருந்து நிறுத்துவதாக அமெரிக்க ஜனாதிபதி லிண்டன் ஜோன்சன் அறிவித்தார்.
- 1969-வோல்ட் மார்ட் தொடங்கப்பட்டது.
- 1984-இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி இரண்டு சீக்கியப் பாதுகாவலர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். அதன் பின்னர் புதுடில்லியில் இடம்பெற்ற கலவரத்தில் சுமார் 2 ஆயிரம் சீக்கியர்கள் கொல்லப்பட்டனர்.
- 2003-22 ஆண்டுகள் ஆட்சியின் பின்னர் மலேசியப் பிரதம மந்திரி மகதிர் பின் முகமது தமது பதவியைத்துறந்தார்.

### பிறப்புக்கள்

- 1795-ஜோன் கீற்ஸ், ஆங்கிலக் கவிஞர் (இ.1821)
- 1875-வல்லபாய் பட்டேல், இந்திய விடுதலைப் போராட்டவீரர் (இ.1950)
- 1922-நொறொடோம் சீஹானூக், கம்போடிய அரசர்
- 1930- மைக்கேல் கொலின்ஸ் அமெரிக்க விண்வெளி வீரர்
- 1933-துரை இராஜாராம், தமிழக எழுத்தாளர்

### இறப்புக்கள்

- 1811-பண்டார வன்னியன், வன்னி மன்னன்
- 1986-றொபேர்ட் மலிக்கென், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க அறிவியலாளர் (பி.1896)
- 2003-செம்மாங்குடி சிறிநிவாச ஐயர், இந்திய கர்நாடக இசைப் பாடகர், (பி.1908)
- 2005-அமிரிதா பிரீதம், பஞ்சாபி எழுத்தாளர் (பி.1919)
- 2006-[illegible]

### துரை இராஜாராம்

துரை இராஜாராம் 1933 ஆம் ஆண்டு ஒக்டோபர் 31 ஆம் திகதி பாரதத்தில் பிறந்தார். காஞ்சிபுரம் மேல்நிலைப்பள்ளியில் 32 ஆண்டுகள் தமிழராசிரியராகப் பணியாற்றியுள்ளார். பல வைணவ மாநாடுகளில் கலந்துகொண்ட அவர் 1994 ஆம் ஆண்டு பண்ருட்டி வைணவ மாநாட்டிற்கு இவர் தலைமை தாங்கியது குறிப்பிடத்தக்கது.

இவர் வ.உ.சிதம்பரனார், விண்ணுலகில் பாரதியார் என்னும் நாடகங்களை இயற்றியுள்ளார். கம்பராமாயணம், பதினெண் கீழ்க் கணக்கு, கம்பனின் சிற்றிலக்கியங்கள், பல நூல்களுக்கு தெளிவுரை எழுதியுள்ளார். கலிபோர்னியாவில் உள்ள உலகக் கலை பண்பாட்டு இயக்கம் இவருக்குக் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இன்றைய நிலையில் நீங்கள் சரியென்றும், தவறென்றும் கருதுபவையெல்லாம் சமூகத்தின் ஒழுக்க நியதிகளைச் சார்ந்துதான் இருக்கிறது.**

# கர்மவினை



## ஆன்மீகம் 23

...நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ, அதுவாகவே மாறுகிறீர்கள். உங்களுக்கு சூதாட்டம் பழகிப் போய்விட்டால் வீட்டில் தாயின் முன்போ மனைவியின் முன்போ சூதாட்டம் என்று சொல்வதே, ஒரு பெரிய பாவமாகக் கருதப்பட்டிருந்தால்கூட, உங்கள் குழுவோடு சேர்ந்து கொள்கிற போது சூதாட்டம் ஒரு இன்பமான விடயமாகிறது.

சூதாடிகளுக்கு மத்தியில் சூதாடாத ஒருவன், வாழ்க்கையை வாழத் தகுந்தவனாகக் கருதப்படமாட்டான். எல்லோருமே திருடர்களாக இருந்தால் மகிழ்ச்சியாக இருக்கிறது. மற்றவர்களிடம் இருந்து திருடுவதை தவறு என்று திருடர்கள் ஒருபோதும் கருதுவதில்லை. திருடுவதில் தோல்வி ஏற்படுகிறபோது தான், நீங்கள் திறமையில்லாத திருடர்கள் என்று கருதப்படுகிறீர்கள். கர்மவினை என்பது உங்கள் எண்ணங்களையும் உணர்வுகளையும் சார்ந்ததே தவிர, உங்கள் செயல்களைச் சார்ந்தது அல்ல.

நாம் ஏற்றுக் கொள்தலைப் பற்றித் திரும்பத் திரும்ப சொல்வதற்குக் காரணம், நீங்கள் முழுமையாக ஏற்கிற நிலையில் இருந்தால், வாழ்க்கை என்ன கேட்கிறதோ, அதைச் செய்வீர்கள். யுத்தத்திற்கான தேவை வரும்போது நீங்கள் யுத்தமிட்டால் அது கர்மவினை இல்லை. ஏனென்றால் கர்மவினை செயல்கள் வழியாக வருவதில்லை. அது உணர்வுகளின் வழியாக வருவது.



யாரோ ஒரு முட்டாள் எப்போதோ ஏற்படுத்திய விதிகளை வைத்துக் கொண்டு ஒவ்வொரு மனிதனும் அதன்படி வாழ வேண்டுமென்று கருதுகிறீர்கள். இது சாத்தியமில்லை. ஆனால், சமூகத்திற்குத் தன்னுடைய அகங்காரத்தை நிலை நிறுத்திக்கொள்ள அத்தகைய விதிகள் தேவைப்படுகிறது.

சமூகத்திற்கென்று ஒரு தனி அகங்காரம் இருக்கிறது. இல்லையா? ஒவ்வொரு சிறிய விடயத்திற்கும் இந்த சமூகமே பொங்கி எழுகிறது. அந்த செயல் தவறாக இருக்கவேண்டுமென்றுகூட அவசியமில்லை.

உதாரணத்திற்கு, அமெரிக்காவில் கோடை காலம் என்று வைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்கள் மிகக் குறைந்த ஆடையை அணிந்திருக்கிறார்கள். நீங்கள் முழு மையாக ஆடை உடுத்திக் கொண்டிருந்தால் மற்றவர்கள் அதிர்ச்சியடைவார்கள். என்ன நடக்கிறது? ஏன் முழுமையாக மூடிக்கொண்டிருக்கிறார்கள் என்று கேட்பார்கள். இந்தியாவில் நீங்கள் அப்படி முழுமையாக உடை உடுத்திக்கொள்ளவில்லை என்றால் எல்லோரும் அதிர்ச்சியடைவார்கள். எனவே, இது ஒருவகையான அகங்காரம், அது ஒருவகையான அகங்காரம். இதில் சமூக அகங்காரம் பாதிக்கப்படுகிறது. அந்தக் கூட்டுக் கர்மவினையின் அங்கமாக உங்கள் கர்மவினையும் மாறுகிறது. இதை நீங்கள் ஆழமாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன். நல்லது, தீயது என்பதெல்லாம் உங்களுக்குச் சொல்லித் தரப்பட்டிருக்கின்றன. நீங்கள் வாழ்ந்து வருகின்ற சமூகச் சூழலிலிருந்து அவற்றைப் பெற்றிருக்கிறீர்கள். கர்மவினை என்பது உங்கள் வாழ்க்கைக்குப் பொருத்தமான அம்சங்களில் இருக்கிறதே தவிர, செய்கிற செயலிலோ இல்லை. (தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# பொதுநலவாய அமைப்பின் உச்சிமாநாடு- 2013

# இலங்கைக்கு நல்வாய்ப்பா? சவாலா?

பொதுநலவாய அமைப்பின் உச்சிமாநாட்டை நடாத்துகின்ற எந்தவொரு நாடும் பொதுநலவாய வர்த்தக பேரவையின் நலனை அதிகளவில் பெற்றுக்கொள்கிறது. எடுத்துக்காட்டாக, 2011 இல் பேர்த்தில் நடைபெற்ற பொதுநலவாய அமைப்பின் உச்சிமாநாட்டில் அவுஸ்திரேலியாவுக்கு 10 பில்லியன் டொலர்கள் பெறுமதியான நிதியுதவி கிடைக்கப்பெற்றது. 2013 இல் பேரவையால் இலங்கைக்கு 2 பில்லியன் டொலர்கள் பெறுமதியான திட்டம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**திடிப்ளோமற் ஊடகத்தில் சல்மா ஜுசுஃப் எழுதியுள்ள கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

ஒருநாட்டில் முதலீட்டை மேற்கொள்வதற்கு பூகோள தனியார் துறையானது அந்நாட்டின் கோட்பாட்டின் உறுதித்தன்மை மற்றும் பரந்தளவிலான ஆட்சிக் கட்டமைப்பு ஆகிய இரண்டையும் முக்கியமாக நோக்குகிறது. இலங்கையில் தனியார் துறை முதலீடானது, நாட்டின் புலம்பெயர் சமூகத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் இவ்விரு முக்கிய விடயங்களையும் இலங்கை உறுதிப்படுத்தியுள்ளது.

பொதுநலவாய அமைப்பின் பிறிதொரு பிரிவான ஒன்பதாவது பொதுநலவாய இளையோர் பேரவை இவ்வாண்டு நவம்பர் 10-14 வரையான காலப்பகுதியில் அம்பாந்தோட்டையில் 200 இளைஞர்களை ஒன்றிணைத்து செயற்படவுள்ளது. இந்த பேரவை யானது பொதுநலவாயத்தைச் சேர்ந்த இளைஞர்களை ஒன்றிணைத்து உத்தியோகபூர்வமாகக் குரல் கொடுக்கின்றது. இது தனது முதலாவது பொதுக்கூட்டத்தை இலங்கையில் நடாத்தவுள்ளது. மே 2014இல் இலங்கையில் இடம்பெறவுள்ள இளைஞர்களின் அனைத்துலக கருத்தரங்கிற்கான முன்நகர்வாகவே தற்போது ஒன்பதாவது பொதுநலவாய இளை யோர் பேரவை அம்பாந்தோட்டையில் கூடவுள்ளது. இது பொதுநலவாயத்தில் இளைஞர்கள் தமது கருத்துக்களைப் பிரதிபலிப்பதற்கான மிகவும் அருமையான வாய்ப்பாக காணப்படும்.

இந்த அடிப்படையில் இலங்கை ஏனைய நாடுகளிலும் இளைஞர்களை வலுப்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான செயற்திட்டங்கள் சிலவற்றைக் கொண்டுள்ளது. இலங்கை தேசிய இளைஞர் நாடாளுமன்ற கட்டமைப்பு மற்றும் இளைஞர் கழகங்களின் ஒன்றியங்கள் போன்றன இதற்கான எடுத்துக்காட்டாகும். தற்போது இவை இரண்டும் இலங்கை முன்னெடுக்கும் மிகச் சிறந்த இளைஞர் செயற்பாடுகளாக உள்ளன.

இலங்கை அடுத்த இரு ஆண்டுகளுக்கும் பொதுநலவாயத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதன் மூலம் நாடுகளுக்கிடையில் அமைதியை ஏற்படுத்தி பிரச்சினைகளையும் தவறான கருத்தாக்கங்களையும் நீக்கிக் கொள்ள முடியும். இலங்கையில் நடைபெறவுள்ள உச்சிமாநாட்டுக்கு 3000 வரையான ஊடகவியலாளர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் வருகை தரவுள்ள நிலையில் இலங்கை தனது நாட்டின் பலம் மற்றும் மீளெழுச்சி போன்றவற்றைக் காண்பிப்பதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளது.

இலங்கைக்குள் உள்ள பல்வேறு அரசியற் கட்சிகள் தேசிய நல்லுக்காக ஒன்றிணைவதற்கான சந்தர்ப்பத்தை இந்த உச்சிமாநாடு வழங்கியுள்ளது. இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியானது பொதுநலவாய அமைப்பின் உச்சிமாநாட்டிற்கு தனது ஆதரவை வழங்கியுள்ளது. இதனைப் பயன்படுத்தி இலங்கை அரசாங்கம் தனது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் முரண்பாடுகளைக் களைய முற்படவேண்டும்.



இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து நான்கு ஆண்டுகள் கடந்த நிலையில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் மற்றும் நிலக்கண்ணி வெடி அகற்றல் ஆகியன இடம்பெற்று வருகின்றன. இவை அனைத்துலக அமைப்புக்கள் மற்றும் வெளிநாட்டு அரசாங்கங்களின் உதவியுடன் மேற்கொள்ளப்படு கின்றன. நிலக்கண்ணி வெடி அகற்றல் பணிகள்பெருமளவில் முடிவடைந்துள்ளது.

இடம்பெயர்ந்து வாழ்ந்த 300 ஆயிரம் வரையான மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். இங்கே உள சமூக நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு நலன்புரிக் கிராமங்களிலும் தொழிற்பயிற்சி நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. 595 சிறார் போராளிகள் உட்பட பெரும்பாலான முன்னாள் போராளிகள் அவர்களது குடும்பங்களுடன் இணைத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான கடன்கள் மற்றும் வேலை வாய்ப்புக்கள் போன்றனவும் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றின் விளைவாக, 1987 இன் பின்னர் முதன்முதலாக இலங்கையின் வடக்கில் மாகாண சபைத் தேர்தல்கள் இடம்பெற்றுள்ளன. இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் மிக்க நிகழ்வாகக் காணப்படுகின்றது.

இலங்கையில் வாழும் சிறுபான்மைத் தமிழ் மக்கள் 67.52 சதவீத வாக்குகளை அளித்து தமக்கான அரசாங்கத்தை தெரிவு செய்துள்ளனர்.

இலங்கையின் தெற்கு மற்றும் வடக்கின் அதிகாரம் மற்றும் உறவு நிலை போன்றவற்றில் சமநிலை பேணப்படுவதற்கான வழிவகை உருவாக்கப்பட்டுள்ள நிலையில் இலங்கை த்னது நாட்டில் பொதுநலவாய அமைப்பின் அரசாங்கத் தலைவர்கள் ஒன்றுகூடும் உச்சிமாநாட்டை நடாத்துவதன் மூலம் அனைத்துலக அரங்கில் தனது நிலையைப் பலப்படுத்தும். அதே வேளையில் உள்நாட்டிலும் தன்னைப் பலப்படுத்திக் கொள்ளும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக சட்டசபையின் தீர்மானத்தை இந்திய அரசாங்கம் மதிக்க வேண்டும்

## அரியம் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

**கொழும்பில் அடுத்த மாதம் இடம்பெறவுள்ள பொது நலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என தமிழக சட்டசபை நிறைவேற்றிய தீர்மானம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தவரை ஒரு திருப்புமுனை என நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.**

தமிழக சட்டசபையில் கடந்த வாரம் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் பல காலமாக இன்னல்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் மக்கள் சார்பில், தமிழ் நாட்டு முதல்வர் உட்பட பல கட்சிகள், இளைஞர் அமைப்புக்கள் ஒன்றிணைந்து குரல் கொடுத்து வருகின்றன.

அவற்றின் அடிப்படையிலே தான் தமிழ்நாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானமும் அமைந்துள்ளது. அதனை நாம் வரவேற்கின்றோம்.

இலங்கையில் 66 வருடகாலமாக தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெற்றுக் கொண்டிருந்த போராட்ட நேரத்தில் எத்தனையோ தமிழ் நாட்டு இளைஞர்கள் தீக்கு



ளித்துக் கொண்ட வரலாறுகளும் உண்டு. இவற்றை இந்திய அரசு சிந்தித்து செயற்பட்டிருக்குமேயானால் இன்று தமிழ் மக்கள் ஏக்கப் பெருமூச்சுடன் வாழ்ந்திருக்க வேண்டிய தேவை இருந்திருக்காது.

அரசியல் தீர்வுக்காக 66 வருடங்களாக போராடிய தமிழ் மக்களுக்கு எந்த இறுதித்தீர்வும் இதுவரை கிடைக்கவில்லை என்பதனை நன்கு உணர்ந்த நாடும் இந்தியாதான். அதேநேரம் தமிழ் மக்களிடையே ஆயுத போராட்டத்தினை ஆரம்பித்து வைத்தது மாத்திரமல்ல, அவர்களை வளர்த்தெடுத்து விட்டு சந்தர்ப்பம் பார்த்து அழிப்பதற்கு உறுதுணையாக இருந்த நாடும் இந்தியாதான்.

இலங்கையில் வாழ்கின்ற தமிழ் மக்களும் இந்த நாட்டின் பிரஜைகள்தான் என்பதை இந்திய அரசாங்கம் உணர்ந்திருந்தால் எப்போதோ தமிழ் மக்கள் உண்மையான சமாதானத்தினை அனுபவித்து இருப்பார்கள்.

ஆனால் இதுநாள் வரைக்கும் இந்தியா எமது மக்களின் அரசியல் தீர்வில் தள்ளி நின்று பார்க்கும் செயற்பாட்டிலேயே உள்ளது. இவர்களின் இவ்வாறான செயற்பாடுகளினால் எமது இனத்தவர்கள் இன்றும் இன்னல் பட்டுக்கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் என அரியநேத்திரன் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# இரணைமடுக்குள நீர்த்திட்டம் அமுல்படுத்த நடவடிக்கை

## விவசாய அமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

விவசாயிகளின் கோரிக்கை மற்றும் அவர்களின் சம்மதத்துடன் இரணைமடுக் குளத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு நீர் கொண்டு வரும் திட்டம் அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என வடக்கு மாகாண விவசாயம் மற்றும் சுற்றுச் சூழல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சிக்கும் யாழ்ப்பாணத்திற்குமான குடிநீர் விநியோகத் திட்டம் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் நேற்று முன்தினம் யாழ்.நூலகத்தில் இடம்பெற்றது.

இதில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலக்சுமி ரமேஷ் மற்றும் விவசாயம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சிற்கு கீழ் இயங்கும் திணைக்களத் தலைவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இதில் கலந்து கொண்ட அமைச்சர் ஐங்கரநேசன் இக் கலந்துரையாடல் விடயம் தொடர் பில் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சிக்கும் - யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான குடிநீர் விநியோக திட்டம் நெடுங்காலமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் செயற்பாட்டு நிலைக்கு தற்பொழுதுதான் வந்துள்ளது.

ஆனால் விவசாயிகளுக்கு இந்த திட்டம் தொடர்பில் பல சந்தேகங்களும் பிரச்சினைகளும் இருக்கின்றன.

வரட்சிக்காலங்களில் என்ன செய்வது? சனத்தொகை அதி கரித்தால் காலப்போக்கில் பயிர்ச் செய்கை செய்வதற்கு நீருக்கு என்ன வழி? போன்ற பல கேள்விகள் அவர்களிடம் உள்ளன.

இதனால் அந்த விவசாயிகளையும் அமைப்புக்களையும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வைப்பதற்கு நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும் எனவும் கிளிநொச்சி விவசாயிகளின் கோரிக்கை மற்றும் அவர்களின் சம்மதத்துடன் தான் இரணை மடுக்குளத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு நீர் கொண்டுவரும் திட்டம் அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (அ-6)

# 4 வருடங்களில் ஐனநாயகக் கட்சி ஆட்சியமைக்கும்- சரத் பொன்சேகா

(கொழும்பு)

அடுத்த நான்கு வருடங்களுக்குள் நாட்டின் ஆட்சி அதிகாரத்தை தான் கைப்பற்ற போவதாக ஜனநாயகக் கட்சியின் தலைவரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.


ஸ்ரீஜயவர்த்தனபுர கோட்டே பிரதேசத்தில் உள்ள கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்ற புதிய தொகுதி அமைப்பாளர்களை நியமிக்கும் நிகழ்வின் பின்னர் நடைபெற்ற கூட்டத்தில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அடுத்து நடைபெறவுள்ள தென், ஊவா மற்றும் மேல் மாகாண சபைத் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சியை விட அதிகளவான வாக்குகளை ஜனநாயகக் கட்சி பெறும்.

மேலும் கொழும்பு-கட்டுநாயக்க அதிவேக பாதையை நிர்மாணிக்க செலவிடப்பட்ட பணத்தை விடவும் பத்தில் ஒரு பங்கு பணத்தை செலவிட்டு அப்பாதையை நிர்மாணித்திருக்க முடியும்.

இந்த பாதை நிர்மாணிப்பின் மூலம் கிடைத்த அதிகளவிலான கமிஷன் பணத்தை ராஜபக்ஷ குடும்பத்தினர் பெற்றுக் கொண்டுள்ளனர்.

புதிய அதிவேக பாதையின் ஒரு கிலோமீற்றர் தூரத்தை நிர்மாணிக்க 14 மில்லியன் அமெ[illegible] டொலர்கள் செலவிடப்பட்[illegible]ள தாகவும் அவர் குறிப்பிட்டார். (அ-2)



புத்தூர் கிழக்கு கல்லடை கன்னியர் வைரவர் ஆலய மகாகும்பாபிஷேகம் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சுவாமி வீதியுலா வருவதையும் சொற்பொழிவு ஆற்றிய திருவாவடுதுறை ஆதீன சமய பிரசாரகர் சைவப்புலவர் எ.அனுசாந்தன் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

# எலிக்காய்ச்சல் தொடர்பில் அவதானம் செலுத்துங்கள்

அடுத்த போகத்திற்கான விவசாய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து எலிக்காய்ச்சல் தொடர்பில் அவதானம் செலுத்துமாறு பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தினர் விவசாயிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் எலிக்காய்ச்சலால் 3 ஆயிரத்து 300 இற்கும் அதிகமானோர் பீடிக்கப்பட்டுள்ளதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் உப செயலாளர் தெவித்துள்ளார்.

இந்த நோயின் தாக்கத்தினால் சுமார் 50 பேர் உயிரிழந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்நோயினால் பாதிக்கப்பட்ட அதிகளவு நோயாளர்கள் களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டங்களிலேயே பதிவாகியுள்ளனர். (அ-2)

# மாநாடு தொடர்பில் ஐ.தே.கட்சிக்கு உத்தியோகபூர்வ அழைப்பில்லை

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகள் அரச தலைவர்கள் மாநாடு தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு உத்தியோகபூர்வ அழைப்பு இதுவரையில் கிடைக்கவில்லை என கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அரச தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்குமாறு ஐக்கிய தேசியக் கட்சிக்கோ, எதிர்க்கட்சித் தலைவருக்கோ இது வரையில் அரசாங்கம் அழைப்பு விடுக்கவில்லை.

மாறாக கட்சியின் சில நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் பொது நிர்வாக அமைச்சு அதிகாரியொருவர் தொலைபேசி மூலம் மாநாட்டில் பங்கேற்குமாறு கோரியுள்ளார்.

மாநாட்டில் பங்கேற்குமாறு இதுவரையில் உத்தியோகபூர்வமாக அழைக்கப்படாத காரணத்தினால், பங்கேற்பது குறித்து தீர்மானிக்கப்படவில்லை.

மாநாட்டு ஏற்பாட்டு நடவடிக்கைகளில் குறைபாடுகள் காணப்படுகின்றமை இதன் மூலம் அம்பலமாகியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# 499 வெளிநாட்டவர்கள் நாடு கடத்தப்பட்டனர்

(கொழும்பு)

இலங்கையில் விசா இன்றி தங்கியிருந்த 499 வெளிநாட்டு பிரஜைகள் கடந்த ஆண்டு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

விசா சட்டங்களை மீறிச் செயற்படும் நபர்களைக் கண்காணித்து கைது செய்வதற்காக குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் விசேட புலனாய்வு பிரிவு ஒன்றை நிறுவியுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான் நைஜீரியா, ஆப்கானிஸ்தான் மற்றும் சீனப் பிரஜைகளே அதிகளவில் நாடு கடத்தப்பட்டுள்ளனர். (அ-2)

# கொத்தணியின் வெள்ளிவிழா

வலிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியும் அங்கத்துவ சங்கங்களும் இணைந்து நடத்தும் கொத்தணியின் வெள்ளி விழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொத்தணி கலையரங்க மண்டபத்தில் வலிகாமம் பனை,தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க கொத்தணித் தலைவர் செ.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் 91 ஆவது சர்வதேச கூட்டுறவு தினம், ஸ்தாபகத் தலைவர் அமரர் சு.நடேசு, மறைந்த பொது முகாமையாளர் அமரர் க.சந்திரராசா ஆகியோரின் நினைவு தின நிகழ்வு, புலமைப் பரி சில் வழங்கல், ஓய்வுநலக் கொடுப்பனவு வழங்கல் என்பன இடம் பெறவுள்ளன. (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பயனுள்ள குறிப்புக்கள்

(கடந்த வாரத் தொடர்ச்சி)

உதாரணமாக விளக்குக, ஆராய்க, விபரிக்குக, மதிப்பிடுக போன்ற பதங்களின் அர்த் தங்களைப் புரிந்து கொண்டு பொருத்தமாக விடையளிக்க முற்படுதல்.

கட்டுரை வினாக்களுக்கு விடையளிக்கும் போது எடுக்க வேண்டிய கவனங்கள்

கட்டுரை வகை வினாக்களுக்கு தகவல் களைத் தொகுத்து ஒழுங்குபடுத்தி தர்க்க ரீதியான ஒரு தொடராக விடைகளை எழுத வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே, இது தொடர்பான கவனங்களாவன:

1.வினாவை விளங்கிக் கொள்ளும் வகையில் அதனை வாசித்து அவ் வினாவுக்கான விடை எவ்வாறு அமையவேண்டுமென மனதளவில் விரைவாகத் தீர்மானித்துக் கொள்ளல்.

2.வினாவுக்கான விடையை அறிமுகம், கட்டுரையின் முக்கிய அம்சம் (Body) முடிபு என்ற ஒழுங்கிலே எழுதுவதற்கான சுருக்கக் குறிப்புக்களைக் குறித்துக் கொண்டு எழுதத் தொடங்குதல்.

3. விடையை எழுதத் தொடங்கும் போது வினாவிலுள்ள முக்கியமான அம்சத்துடனேயே அறிமுகப்பந்தியை ஆரம்பிப்பது புத்திசாலித் தனமாகும்.

உதாரணமாக ஈழத்துத் தமிழ் நாடகப் பாரம் பரியம் நீண்ட வரலாற்றைக் கொண்டது என்ற கூற்றை மதிப்பிடுக? என்ற வினாவுக்கு விடை யளிக்க முற்படும் போது ஈழத்து தமிழ் நாடகப் பாரம்பரியம் என்பதனால் சுட்டப்படுவது என ஆரம் பிக்கலாம். அல்லது உங்களுடைய அபி ப்பிராயத்தையே சொல்லும் வகையில் ஈழத்துத் தமிழ் நாடகப் பாரம்பரியம் நீண்ட வரலாற்றைக் கொண்டது என்ற கூற்று சர்ச் சைக்குரியதாகும் என எழுத ஆரம் பிக்கலாம்.

4. கட்டுரையின் (விடையின்) உடலில் இடம் பெறவேண்டிய ஒவ்வோர் அம்சங்களையும் தர்க்க ரீதியான ஓர் ஒழுங்கில் வெவ்வேறு பந்திகளில் எழுதிச் செல்வது அவசியம். ஒரு குறித்த அம்சத்தில் பல உப அம்சங்கள் ஒவ் வொ ன்றையும் ஒவ்வொரு பந்தியில் எழுதலாம்.

5. இறுதியில் முடிவாக நீங்கள் சொல்லவிருப்பதை தெளிவாக எழுதிக் கொள்ள வேண்டும்.

6.வெவ்வேறு வினாக்களுக்கான விடைகளுக்கிடையே போதிய அளவு இடைவெ




ளியை விடுவது அவசியம். பொதுவாக புதிய வினா வொன்றுக்கான விடையை ஒரு புதிய தாளி லேயே எழுதத் தொடங்குவது பொருத்தமா னது. வேறொரு வினாவுக்கு விடையளித்துக் கொண்டிருக்குபோது முன்னைய வினாவுக் கான விடை பற்றிய புதிய தகவல்களை பின்பு சேர்த்துக் கொள்வதற்கு இது உதவும்.

7.ஒவ்வொரு வினாவுக்கும் உரிய நேரத்தில் அவ்வினாவுக்கான வின்டயை எழுதி முடிக்க வேண்டும். பின்பு நேரமிருப்பின் முன்னைய விடைகளில் மேலும் சேர்க்கப்பட வேண்டியன எனக் கருதுபவற்றை சேர்த்துக் கொள்ளலாம்.

8. எல்லா வினாக்களுக்கும் பூரணமான விடைகளை எழுத முயற்சிக்க வேண்டும். நான்கு வினாக்களுக்கு விடையளிக்க வேண் டிய பரீட்சையில் முதல் மூன்று வினாக்களுக்கு மிகவும் அதிகமான தகவல்களுடன் விடையளி த்து விட்டு நான்காவது வினாவுக்கான விடையை எழுதாமல் விடுவதைவிட மூன்றாவது வினாவை எழுதத் தொடங்கும் போது உள்ள நேரத்தைக் கணக்கிட்டு அடுத்த இரு வினாக்களுக்கும் அதனைப் பங்கிட்டு திருப்திகரமான விடையை எழுதிக் கொள்வது அதிக புள்ளிகளைப் பெற்றுத் தரும்.

பல்தேர்வு வினாக்களுக்கு விடையளித்தல்

1.பல்தேர்வு வினாக்கள் பல சந்தர்ப்பங்களில் எம்மை ஏமாற்றிவிடக் கூடியன. எனவே வினாக்களிலுள்ள சொற்பிரயோகத்தை நன்கு கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

2.இயன்றவரை விரைவாக விடையளிக்கக் கூடிய வினாக்களுக்கு விடையளித்துக் கொண்டு செல்ல வேண்டும்.


3.வினாவை வாசிக்கும்போது இரு விடைத் தெரிவுகளில் எது சரியானதெனக் கண்டறிய முடியாதவிடத்து அவ்விரு விடைத் தெரிவுகளையும் குறித்துக் கொண்டு பின்பு விடைத்தாளை மீட்டுப் பார்க்கும் போது அவ்வினாவுக்கான விடையை முன்பு குறித்துக் கொண்ட விடைத் தெரிவிலிருந்து தீர்மானித்துக் கொள்ளலாம். அவ்வாறு விடைத் தெரிவை அவற்றிலிருந்து தீர்மானிக்க முடியாத போது அறிவார்ந்த நிலையில் ஊகிப்பதன் மூலம் அவ் விடைத் தெரிவுகளில் ஒன்றை விடையாகக் கொள்ளலாம்.

4. தவறான விடைகளுக்கு புள்ளிகள் கழிக்கப்படமாட்டாது என்பதை உறுதி செய்து கொண்டு சரியான விடைகளை முன்பு குறிப்பிட்டது போல இரு தெரிவு களிலிருந்து தீர் மானிக்க முடியாதவிடத்து அத் தெரிவுகளுள் ஒன்றை விடையாகக் குறித்துக் கொள்ள வேண்டும். எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

இதுவரை கூறியவற்றிலிருந்து பரீட்சைப் பயத்தை மனங்கொள்ளாது பதகளிப்புக்கு இடங்கொடுக்காது நீங்கள் பெற்றுக் கொண்ட அறிவுடனேயே நிதானமாக பரீட்சையை நீங் கள் எதிர்கொள்ளின் வினாக்களைச் சரியான முறையில் விளங்கிக் கொண்டு புத்திபூர்வமாக விடையளிப்பதற்கான சூழலை நீங்களே உருவாக்கிக் கொள்ள முடியும் என்பது இங்கு வலியுறுத்தப்படுகின்றது. அவ்வாறாயின் உங்களுக்கு வெற்றி நிச்சயம்.

பதளிப்பு நிலைக்கு நீங்கள் உட்படக் கூடா தென்பதற்காக தவிர்த்துக் கொள்ளப்பட வேண் டியவை எவை என இங்கு சுட்டிக்காட்டப் பட்டனவோ, அவற்றை உங்கள் சக மாணவர்களுக்கு நீங்கள் ஏற்படுத்தாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

பெற்றோர் இவ்விடயங்களைக் கவனத்திலெடுத்து உங்கள் பிள்ளைகளுக்குப் பயத்தையும் பதகளிப்பையும் தோற்றுவிக்கக்கூடிய நெருக்கடி நிலைகளைத் தோற்றுவிக்காமல் பிள்ளைகளுக்கு உற்சாகம் வழங்கி அவர் களை மகிழ்ச்சியான மன நிலையில் வைத்துக் கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும். (முற்றும்)



**கலாநிதி த.கலாமணி**
சட்டத்துறைத் தலைவர்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கல்வியியற்றுறை,
யாழ். பல்கலைக்கழகம்.

யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதன் எழுதும்
'பாடசாலைகளின் விளைதிறன் மிக்க கூட்ட முகாமைத்துவத்தை நடைமுறைப்படுத்தல்'
எனும் தலைப்பிலான கட்டுரை உங்கள் கல்வித் தரிசனத்தில் அடுத்த வியாழன் வெளிவரும். வாசிக்கத் தவறாதீர்கள்.
ஆ-ர்

# நாவலர் குருபூசையை முன்னிட்டு மாணவர்களுக்கு போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசையை முன்னிட்டு வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்தி கழகத்தினால் நடத்தப்படும் வினாவிடை மற்றும் கட்டுரைப் போட்டிகளில் பங்குபற்ற விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தரம் ஒன்று முதல் தரம் 5 வரையான மாணவர்களிடையே நடத்தப்படவுள்ள இப் போட்டிகளில் தரம் 1, 2 மாணவர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சரிதம் தொடர்பான சிறு வினாவிடைப் போட்டியும் சிறு கட்டுரை போட்டியும் இடம்பெறவுள்ளன.

தரம் 3 மாணவர்களுக்கு சைவ வினா விடை நூலில் கடவுள் இயல், புண்ணிய பாவ இயல், விபூதி இயல் ஆகிய பகுதிகளிலிருந்து வினாவிடைப் போட்டியும் ஆறுமுக நாவலர் எனும் தலைப்பில் சிறுகட்டுரைப் போட்டியும் இடம்பெறவுள்ளன.

தரம் 4 மாணவர்களுக்கு சைவ வினா விடை முதலாம் நூலில் கடவுள் இயல், புண்ணியபாவ இயல், விபூதி இயல், சிவாலய தரிசன இயல் எனும் பகுதியிலிருந்து வினா விடைப் போட்டியும் ஆறுமுகநாவலர் எனும் தலைப்பிலான சிறுகட்டுரைப் போட்டியும் இடம்பெறவுள்ளன.


தரம் 5 மாணவர்களுக்கு சைவ வினா விடை முதலாம் நூல் முழுவதிலும் வினா விடைப் போட்டியும் ஆறுமுக நாவலர் எனும் தலைப்பிலான சிறு கட்டுரை போட்டியும் இடம் பெறவுள்ளன.

மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் நவம்பர் மாதம் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் சைவ சமய அபிவிருத்திக்கழக அறிவகம், 82, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் விண்ணப்பப் படிவத்தை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

மேலும் போட்டிக் கட்டணமாக 50 ரூபா செலுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இப்போட்டிகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி இடம்பெறவுள்ளன.

போட்டியில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்களும் அடுத்த 5 இடங்களை பெறுபவர்களுக்கு சிறப்புப் பரிசில்களும் ஏனையோருக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-5)



ஒ.ஐ.எம். நிறுவன புதிய தலைவர் தலைமையிலான குழுவினர் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்தரசிறியை ஆளுநர் அலுவலகத்தில் நேற்று சந்தித்ததைப் படத்தில் காணலாம். (படம்:- என்.குமார்)

# மூன்று எம்.பிக்கள் மீண்டும் சந்திப்பர்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க மற்றும் பாராளுமன்ற உறுப்பினரகளான கருஜயசூரிய, சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கு இடையிலான அடுத்தகட்ட முக்கிய சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது. இன்று வியாழக்கிழமை நடைபெறும் என கட்சியின் ஊடக பேசசாளரும் பாராளுமன்ற உறுப்பின ருமான கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

இச் சந்திப்பின்போது கட்சியில் உருவாக்கப்படவுள்ள தலைமைத்துவ சபை, அதன் கட்டமைப்பு, உறுப்பினர்களின் எண்ணிக்கை, அதற்கு வழங்கப்படவுள்ள அதிகாரங்கள் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடவுள்ளன. (அ-2)

# கலை விழா

(யாழ்ப்பாணம்)

யா/ தோப்பு அருள்நந்தி வித்தியாலய கலைவிழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் வித்தியாலய அதிபர் மு.ராஜவரோதயம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ். சற்குணராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

இந் நிகழ்வில் காத்தவராயன் இசை நாடகம் மற்றும் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேசநாடுகளின் தலைவர்களை உளவு பார்க்கும் அமெரிக்கா

உலகின் மிகப் பலம் பொருந்திய நாடுகளில் ஒன்றாகக் "கருதப்படும் அமெரிக்கா, நட்பின் இலக்கணத்தை மீறிச் செயற்பட்டுள்ளதாக பல மேற்கத்தைய நாடுகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் விமர்சனங்களை வெளியிட்டுள்ளன.



ஜேர்மன் அதிபர்-அன்ஜெலா மொர்கல்

உலகளவில் பல்வேறு நெருக்கடிகளை சந்தித்துவரும் அமெரிக்காவை தொலைபேசி ஒட்டுக்கேட்டல் என்ற சர்ச்சை, பெரிதும் உலுக்கியுள்ளது என்பதற்கு அப்பால், இராஜதந்திர உறவுகளில் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது.

நேசநாடுகளின் தலைவர்கள், உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் தொடர்பில், இரகசியமாக அமெரிக்கா உளவு பார்த்துள்ளமை வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

ஜேர்மன், ஸ்பெயின், சுவிட்சர்லாந்து, பிரேசில் போன்ற பல நாடுகளின் தலைவர்களையும் அமெரிக்கா இரகசியமாக கண்காணித்துள்ளது. இந்த நடவடிக்கையை அநேகமான நேசநாடுகள் ஓர் துரோகச் செயலாகவே நோக்குகின்றன.

ஜெர்மனிய அதிபர் அன்ஜலா மொர்கலின் தொலைபேசி கடந்த ஒரு தசாப்த காலமாக ஒட்டுக் கேட்கப்பட்டு வருவாதாக அண்மையில் பரபரப் தகவல் வெளிவிடப்பட்டிருந்தது. இந்தத் தகவல்களை அமெரிக்கா இதுவரையில் மறுக்கவோ மறைக்கவோ முயற்சிக்கவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

சர்வதேச பயங்கரவாத ஒழிப்பு என்ற போர்வையில் அமெரிக்கா பல நாடுகளின் உள்விவகாரங்களில் தேவையின்றி தலையீடு செய்வதாகவும் மூக்கை நுழைப்பதாகவும் பல நாடுகள் குற்றம் சுமத்தியுள்ளன.

அமெரிக்க தேசிய பாதுகாப்பு முகவர் நிறுவனத்தினால் உளவுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2007 ஆம் ஆண்டு அமெரிக்க தேசிய பாதுகாப்பு முகவர் நிறுவனத்தினால், இந்த உளவுப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த உளவு நடவடிக்கைகளுக்கு பிரிஸ்ம் என பெயரிடப்பட்டுள்ளது.

நிறுவனம், தனிப்பட்ட நபருக்கான தொலைபேசி அழைப்புக்கள், மின்னஞ்சல்கள், வீடியோ காட்சிகள், சமூக வலைத்தள தொடர்பாடல்கள் போன்றவற்றை கண்காணிக்கும் வகையில் இந்த பாதுகாப்புத் திட்டம் உருவாக்கப்பட்டது.

பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பது என்ற நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு இந்தத் தகவல் கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் இதற்காக வருடாந்தம் 20 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

1978 ஆம் ஆண்டு வெளிநாட்டுப் புலனாய்வு மற்றும் கண்காணிப்பு சட்டத்தின் கீழ் அமெரிக்க தேசிய பாதுகாப்பு முகவர் நிறுவனம் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

முதலில் நீதிமன்றின் அனுமதியுடன் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதியளிக்கப்பட்டிருந்தது.

எனினும், 2001 ஆம் ஆண்டு செப்டெம்பர் 11 ஆம் திகதிய தாக்குதல்களைத் தொடர்ந்து நீதிமன்றின் அனுமதியின்றி உளவுத் தகவல்களை பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

2005 ஆம் ஆண்டு மற்றும் 2008 ஆம் ஆண்டுளில் கண்காணிப்பு விவகாரம் குறித்த, சட்டங்களில் மேலும் மாற்றங்கள் செய்யப்பட்டன. உளவுத் தகவல் கசிவு தொடர்பில் அமெரிக்க சீ.ஐ.ஏ உளவுப் பிரிவின் முன்னாள் தொழில்நுட்ப அதிகாரி எட்வர்ட் ஸ்னோவ்டன், அம்பலப்படுத்தியிருந்தார்.

தகவல்கண்காணிப்புக்குள்ளாக்கப்படுபவர்கள் யார் யார் என்று நோக்கின்,

அமெரிக்கப் பிரஜைகள், வெளிநாடுகளில் வாழும் அமெரிக்கப் பிரஜைகள், அமெரிக்காவில் வாழும் ஏனைய பிரஜைகள் போன்றவர்களின் தகவல்களை இவ்வாறு கண்காணிக்க முடியாது என சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது இதனால்,

பெரும்பாலும் வெளிநாட்டுப் பிரஜைகளின் வெளிநாட்டு தொடர்பாடல்களே கூடுதலாக கண்காணிக்கப்படுகின்றன.

அமெரிக்கப் பிரஜைகள் கண்காணிக்கப்படவில்லை என்பதனை அமெரிக்க புலனாய்வுப் பிரிவினர் எஃப்.பி.ஐ உறுதிப்படுத்தியதன் பின்னரே உளவுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

உலகின் ஏனைய நாட்டுப் பிரஜைகளின் தகவல்களை கண்காணிப்பதற்கு எவ்வித அனுமதியும் பெற்றுக்கொள்ளப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தது. இந்தக் கண்காணிப்பு நடவடிக்கையானது, மனித உரிமை மீறலாகும் என சர்வதேச ஊடகங்கள் குற்றம் சுமத்தியுள்ளன.

கண்காணிப்பு நடவடிக்கைகள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றன என பார்க்கையில்,

அமெரிக்க தேசிய பாதுகாப்பு முகவர் நிறுவனம் விசேட கருவியொன்றின் மூலம் தகவல்களை கண்காணித்து உளவுபார்க்கின்றது.

கூகிள்,யாகூ, ஃபேஸ்புக், டுவிற்றர் போன்றவை உள்ளிட்ட பல்வேறு முக்கிய நிறுவனங்கள் நேரடியாக தகவல்களை வழங்குதில்லை.

கணினிகளின் ஊடாக இவ்வாறு இணையத் தகவல்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன.

பிரிஸ்ம் ஊடாக அமெரிக்க பாதுப்பு முகவர் நிறுவனம் நேரடியாகவே, அதாவது ரியல் டைமில் தகவல்களை கண்காணிக்க முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

மைக்கிரோசொப்ட், அப்பிள், யாகூ, கூகிள் மற்றும் ஃபேஸ்புக் போன்ற நிறுவனங்களிடம் கோரிக்கை விடுப்பதன் மூலம் நபர்கள் பற்றிய தகவல்களை வழங்கும் நடைமுறையும் காணப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

யாருடைய தகவல்கள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன, இந்தத் தகவல்கள், மூன்றாம் தரப்பினருக்குப் பகிரப்படுகின்றனவா?

அதிகாரிகள் தங்களது தகுதியை மீறிச் செயற்படுவதனை தடுக்க ஏதெனும் வழிமுறைகள் உருவாக்கப் பட்டுள்ளனவா?

ஆகிய கேள்விகளுக்கு அமெரிக்க அரசாங்கமோ பாதுகாப்பு துறையினரோ தெளிவான விளக்கங்களை வழங்கத் தவறியுள்ளனர்.

அமெரிக்கா கண்காணிப்பு பணிகளை நியாயப்படுத்துகின்றது. தேசிய பாதுகாப்பு முகவர் நிறவனத்தினால் மேற்கொள்ளப்படும் உளவுப் பணிகள் நியாயமானதே என அமெரிக்கா அறிவித்துள்ளது.

செப்டெம்பர் 11 தாக்குதலின் பின்னர் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்காணிப்பு நடவடிக்கைகள் பாரியளவில் வெற்றியளித்துள்ளதாக தேசிய பாதுகாப்பு முகவர் நிறுவனத்தின் தலைமை அதிகாரி கீத் அலெக்சாண்டர் தெரிவித்துள்ளார்.

கிட்டத்தட்ட 50 சதவீதமான பயங்கரவாதத் தாக்குதல் திட்டங்கள் முறியடிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


100 வீதமான பாதுகாப்பையோ, 100 வீதமான அந்தரங்கத்தையோ எதிர்பார்க்க முடியாது என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

பல தரப்பினரதும் தகவல்கள் கண்காணிக்கப்படுவதனை எவ்வாறு தடுக்கமுடியும்?

பிரபலமான தொழில்நுட்ப நிறுவனங்களின் உற்பத்திகளை பயன்படுத்தக் கூடாது.

க்ளவுட் ஸ்டோரேஜ் கருவியொன்றை பயன்படுத்தினால், அதற்கான சேவர் அமெரிக்காவை மையமாகக் கொண்டிருக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்ளவும்

எலக்ரோனிக் பொன்டியர் பவுண்டேசனின் எச்.ரீ.ரீ.பி.எஸ் எக்டென்சனைப் பயன்படுத்தவும்



வேர்சுவல் பிரைவட் நெட் வேர்க்கைப் பயன்படுத்தவும்

எவ்வாறெனினும் இவ்வாறான பாதுகாப்பு வழிமுறைகளை மீறியும் அமெரிக்கா கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளும் என தொழில் நுட்ப நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

சீனா, ஐரோப்பிய ஒன்றியம், தூதரகங்கள், உலகத் தலைவர்கள் என பல்வேறு தரப்பினரதும் தகவல்களை. அமெரிக்கா மிகவும் நுட்பமான முறையில் உளவு பார்த்துள்ளது.

தொலைபேசி ஒட்டுக் கேட்டல், இணைய தகவல் பரிமாற்ற கண்காணிப்பும், மின்னஞ்சல் தொடர்பாடல் கண்காணிப்பு என தனிப்பட்ட நபர்கள், நிறுவனங்கள் அரசாங்கங்கள் என்ற பல்வேறு மட்டத்தினரதும் அந்தரங்க இரகசியத் தகவல்கள் உளவு பார்க்கப்பட்டுள்ளன.

ஒரு மாத காலத்தில் ஸ்பெயினின் 60 மில்லியன் தொலைபேசி அழைப்புக்களை 'அமெரிக்கா' ஒட்டுக்கேட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எந்த இடத்திலிருந்து யார் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தியது போன்ற தகவல்கள் திரட்டப்பட்ட போதிலும், தொலைபேசி உரையாடல் பற்றய தகவல்கள் திரட்டப்டவில்லை என குறிப்பிடப்படுகிறது.

தொலைபேசி ஒட்டுக் கேட்ட்ல் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்ற உறுப்பினர்கள் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளனர்.

உலகின் மிகப் பலம் பொருந்திய கனவான்கள் வாழும் நாடாகவும் மனித உரிமைகளுக்கும் ஜனநாயகத்திற்கும் கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்படும் நாடாகவும் தங்களை அடையாளப்படுத்திக்கொள்ளும் ஐக்கிய அமெரிக்கா, இவ்வாறு தனி மனித சுதந்திரத்தில் பயங்கரவாதத் தடுப்பு என்ற போர்வையில் தேவையின்றி தலையீடு செய்வது உலகளாவிய ரீதியில் பெரும் சர்ச்சையை உருவாக்கியுள்ளது.

நியூயோர்க் ரைமஸ்
தமிழில் சீலா. ஜெயந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெலிவேரிய சம்பவம் தொடர்பில் குரல் கொடுக்க புதிய இயக்கம்

(கொழும்பு)

**வெலிவேரிய, ரத்துபஸ்வல பிரதேசத்தில் குடிநீர் நெருக்கடி தொடர்பாக குரல் கொடுப்பதற்கு கூல, அனுகூலங்களை ஆராய்வதற்காக புதிய இயக்கம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.**

கைத்தொழில். மேம்படுத்தல் மற்றும் விரிவாக்கல் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய இயக்கத்திற்கு மேல்மாகாண சபையின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர் திலீப் ராஜபக்ச ஆலோசகராக செயற்படுகின்றார்.

ரத்துபஸ்வெல உள்ளிட்ட அயல் பிரதேசங்களில் வாழும் மக்களின் குடிநீர் நெருக்கடிக்கு அங்குள்ள தொழிற்சாலையே காரணம் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனினும், அந்த பிரச்சினைக்கு குறித்த தொழிற்சாலை காரணமல்ல என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்காக உருவாக்கப்பட்ட இயக்கத்தின் உறுப்பினர் நிஹால் சஞ்சீவ கருத்து தெரிவிக்கையில்,

குறித்த தொழிற்சாலைக்கும் இந்த பிரச்சனைக்கும் தொடர்பில்லை என தான் தெளிவாக இருப்பதாக கூறினார்.

சில தனிப்பட்டவர்களின் நிலைப்பாடு காரணமாக தொழிற்சாலை மூடப்பட்டமையால்தான் பலர் வேலைவாய்ப்புக்களை இழந்துள்ளனர்.

உத்தியோகபூர்வமற்ற இயக்கங்களை தோற்றுவித்து அரசியலை புகுத்தி நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாக அவர் குற்றம் சுமத்தினார்.

இதுதொடர்பாக கல்கமுவ சம்புத்த ஜயந்தி விகாரையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றிய தெரிப்பேஹே சிறிதர்ம தேரர், தாமதம் இன்றி துரிதமாக பிரச்சினைக்கான தீர்வினை எட்டுமாறு அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்தார்.

குறித்த தொழிற்சாலைக்கு முன்பாக தாம் போராட்டம் மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டாம் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை அரசாங்கத்திற்கு எதிராக கொழும்பில் போராட்டமொன்று எதிர்வரும் நவம்பர் மாதம் 7 ஆம் திகதி நடத்தப்படவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியினால் இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நான்கு முக்கிய கோரிக்கைகளின் அடிப்படையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

கசினோ சூதாட்டச் சட்டத்திற்கு எதிர்ப்பை வெளியிடல், ரத்துபஸ்வலவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுக்கு எதிர்ப்பை வெளியிடல், வரவு செலவுத் திட்டத்தில் மக்களுக்கு நிவாரணங்களை வழங்க வேண்டுமென கோருதல் மற்றும் 17ஆம் திருத்தச் சட்டத்தை மீள அமுல்படுத்துமாறு கோருதல் ஆகிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட உள்ளன.

பொதுநலவாய நாடுகள் அரச தலைவர்கள் மாநாடு நடைபெறவுள்ள நிலையில் இவ்வாறான போராட்டம் நடத்தப்படவிருப்பது பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது. (அ-2)

# தாச்சி சுற்றுப்போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

(தனங்கிளப்பு)

வலி.தெற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினரால் யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் தாச்சி சுற்றுப் போட்டியை நடத்த தீர்மானித்துள்ளது.

பாரம்பரிய விளையாட்டுக்களை வளர்க்கும் நோக்கோடு இடம்பெறவுள்ள இச்சுற்றுப் போட்டி உடுவில் உதய சூரியன் விளையாட்டு மைதானத்தில் அடுத்து வரும் மாதமளவில் நடைபெறவுள்ளது. எனவே இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் பதிவு செய்யப்பட்ட கழகங்கள் யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தின் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-9-37)

# கதை சொல்லும் நேரம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் கீழுள்ள சாவகச்சேரி பொது நூலகத்தில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு முன்பள்ளி மாணவர்களுக்கான கதை சொல்லும் நேரம் இன்று வியாழக்கிழமை காலை 9.30 இற்கு நடைபெறுமென நூலகர் வே.வித்தியானந்தன் அறிவித்துள்ளார். (அ-9-29)

# அர்த்தமற்ற செயற்பாடே பொதுநலவாய மாநாடு

## மக்கள் விடுதலை முன்னணி தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் உச்சி மாநாட்டினை ஆதரிக்கும் எண்ணம் எமக்கு இல்லை .

அர்த்தமிஷ்லாத அரசாங்க செயற்பாடுகளில் ஒன்றாகவே இந்த உச்சி மாநாடும் அமைந்துள்ளது என்று மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

பொது நலவாய உச்சி மாநாடு தொடர்பில் [illegible]ல் எவ்விதக் கருத்துக்களையும் தெரிவி[illegible]ப் பேவதில்லை எனவும் அக் கட்சி தெரிவித்துள்ளது .

இது தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவிக்கையில ,

பொது நலவாய அரச தலைவர்கள் உச்சி மாநாட்டில் பிரித்தானிய இளவரசர் கலந்து கொள்ளவுள்ளார். எனவே, இவ்வாறான தொரு சந்தர்ப்பத்தில் எமது விரோதத்தினை வெளிப்படுத்துவதில்லை என்ற முடிவிலேயே எமது கட்சி உள்ளது. அதேபோல் இம் மாநாட்டினை ஆதரிக்கும் எண்ணமும் எமக்கில்லை .

இம் மாநாட்டு காலப் பகுதிகளில் எதிர்க் கட்சிகள் தமது எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளப் போவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது . எனினும் நாம் எந்தக் கட்சிகளோடும் இணைந்து எமது எதிர்ப்பை வெளிப்படுத்தப் போவதில்லை.

நாம் தனியான கொள்கையிலேயே எமது செயற்பாடுகள் அனைத்தையும் செய்து வருகின்றோம். இவ்விடயத்திலும் நாம் தனித்தே செயற்படுவோம் .

அரசாங்கம் செய்யும் அர்த்தமில்லாத வேலைத்திட்டங்களில் ஒன்றாகவே இலங்கையில் நடத்தப்படும் இப் பொதுநலவாய உச்சி மாநாடும் அமைந்துள்ளது . எனவே , இது தொடர்பில் கருத்தில் எடுக்க வேண்டிய தொரு அவசியம் இல்லை எனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# ஆடை தொழிற்சாலைக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் அமைக்கப்பட்டுள்ள இலங்கையின் 6 முன்னணி ஆடைத்தொழிற்சாலைகளில் தேவையான ஆளணியை அதிகரிக்கும் நோக்கில் வடமாகாண இளைஞர் யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் இலங்கை முதலீட்டு சபையினர் அறிவித்துள்ளனர்.

கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள ஒவ்வொன்றிலும் 2 வீதம் ஆடைத் தொழிற்சாலைகளுக்கு முகாமையாளர்கள், பகுதி முகாமையாளர்கள், குழு மேற்பார்வையாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்களான மின்னிணைப்பாளர் மற்றும் நீரிணைப்பாளர்கள், இயந்திர இயக்குநர்கள், வைத்திய தாதியர்கள், தையலாளர்கள் , சாரதிகள் ஆகிய பதவி நிலைகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ள இலங்கை முதலீட்டு சபை, முதலாம், மாடி என்.எச்.டி.ஏ. கட்டடம், சுண்டுக்குளி , யாழ்ப்பாணம் எனும் முகவரியுடனோ அல்லது 021 222 1336 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ள முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.(அ-5)

# வளப்பற்றாக்குறைகளுடன் ஆயுர்வேத வைத்தியசாலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.முஸ்லிம் கல்லூரி வீதியில் அமைந்துள்ள மாநகரசபையின் சித்த ஆயுர்வேத வைத்தியசாலை போதிய வசதிகளற்ற நிலையில் இயங்குவதாக யாழ்.மாநகரசபை உறுப்பினர் எம்.ஏ.எஸ்.சுபியான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது,

யாழ்.முஸ்லிம் கல்லூரி வீதியில் அமைந்துள்ள நூல்நிலையக் கட்டடத்தில் கடந்த சில வருடங்களாக யாழ்.மாநகர சபையின் சித்த ஆயுர்வேத வைத்தியசாலை போதிய வசதிகளற்ற நிலையில் இயங்கிக் கொண்டிருக்கிறது.

இதற்குள் தற்போது அரசாங்கத்தின் நெனசல எனும் அறிவகம் நிகழ்ச்சித்திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இக்கட்டடமானது யுத்தத்தின்போது சேதமானதால் இரண்டு தடவைகள் புனரமைக்கப்பட்ட போதிலும் இக்கட்டடத்தின் நூல் நிலையம் மீண்டும் ஆரம்பிக்கப்படாதிருப்பது மிகவும் கவலை தரக் கூடிய விடயமாகும்.

இது தொடர்பாக முன்னதாகவே சபையில் என்னால் பிரேரணை ஒன்று கொண்டு வரப்பட்டு இது மீண்டும் நூல் நிலையமாக இயங்க வைக்க வேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும் தற்போது இயங்கிவரும் சித்த ஆயுர்வேத வைத்திய நிலையத்தின் சூழல் மிகவும் கவலையளிப்பதாக இருக்கிறது.

காற்றோட்டமின்மை, மலசலகூட வசதியின்மை, நீர், மின்சார வசதிகளின்மை ஆகிய குறைபாடுகள் உள்ளதுடன் சுற்றுச்சூழல் பற்றைக்காடுகள் வளர்ந்து பூச்சிகள் , விஷ ஜந்துகள் வாழும் இடமாகக் காட்சியளிக்கின்றது. இச்சூழல் நுளம்புப் பெருக்கத்திற்கும் வாய்ப்பாகவுள்ளது என அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (அ-2-6)



சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகம் அமெரிக்க யூத சமூக சேவை நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்திய புலமைப்பரிசில் வகுப்புக்களில் பங்கு பற்றி பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகத்தின் இயக்குநர் அருட்தந்தை யோ.யு.கமலானந்தன் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்கி வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)

# சொல்வளப் போட்டி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் கீழுள்ள மீசாலை பொதுநூலக எல்லைக்குட்பட்ட முன்பள்ளி மாணவர்களுக்கான சொல்வளப் போட்டி இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக நூலகர் திருமதி த.பாலச்சந்திரன் அறிவித்துள்ளார். (அ-9-29)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தில் பலாத்காரமாக குடியேற்றுவது தவறான செயல்

## ஜே.வி.பி. பொதுச் செயலாளர்

(கொழும்பு)

**அரசாங்கம் வடமாகாணத்தில் இனவாத ரீதியில் திட்டமிட்டு பலாத்காரமாக சிங்கள மக்களைக் குடியேற்றினால், அது பிழையான செயலாகும். இதனை நாம் எதிர்க்கிறோம் என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.**



வடமாகாணத்தில் மட்டுமல்ல நாட்டில் எங்கும் சிவில் நிர்வாகத்தில் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளை ஆளுநர்களாக நியமிப்பதை தாம் எதிர்ப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரி விக்கையில்,

வடமாகாணத்தில் அரசாங்கமும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்ள முடியாது. வட மாகாண ஆளுநராக ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளமையை எதிர்க்கின்றோம். அங்கு மட்டுமல்ல நாட்டில் எப்பிரதேசத்திலும் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளை சிவில் நடவடிக்கைகளுக்கு நியமிப்பதை எதிர்க்கின்றோம்.

ஆனால் அரசாங்கம் சிவில் நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக இராணுவ அதிகாரிகளை நியமித்து நாட்டை இராணுவ மயமாக்கும் திட்டத்தையே முன்னெடுக்கின்றது.

அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வடமாகாண மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு முன்னுரிமை வழங்கவில்லை. மாறாக தமிழ் மக்களின் பிரச்சினையை மறைத்து வெளிநாட்டுப் பயணங்களையும் தமக்கான சிறப்புரிமைகளையும் சலுகைகளையும் மட்டும் பெற்றுக் கொண்டு அரசியலில் குளிர்காயவே நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது.

அது மட்டுமல்லாது இந்தியாவின் அரசியல் பொருளாதார தேவைகளை நிறைவேற்றுகின்றது.

அரசாங்கம் திட்டமிட்டு பலாத்காரமாக சிங்கள மக்களை வடக்கில் குடியேற்றுவது பிழையான விடயமாகும்.

அரசு சிங்கள இனவாதத்தையும் கூட்டமைப்பு தமிழ் இனவாதத்தையும் நடைமுறைப்படுத்துகின்றன.

தமிழ் மக்களாகட்டும் சிங்கள, முஸ்லிம் மக்களாகட்டும் இந் நாட்டில் அனைவரும் தமது சுய விருப்பத்தின்படி எவ்விடத்திலும் வாழ முடியும்.

அதற்கு தடை போட முடியாது ஆனால், பலாத்காரமான இனவாத குடியேற்றமே பிழையான செயலாகும். இவ்வாறு இனவாதம் தொடருமானால் மீண்டும் பிரிவினைவாதம் தலைதூக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆயிரம் பேர் வருகை

(கொழும்பு)

சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் செயற்பாட்டாளர்கள் என ஆயிரத்திற்கும் அதிகமான பிரதிநிதிகள் கொழும்பில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் மாநாடு நடக்கும் தினங்களில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

பொதுநலவாய மாநாடு நடக்கும் தருணத்தில் ஹிக்கடுவ பிரதேசத்தில் நடைபெறும் மக்கள் மாநாடு ஒன்றில் கலந்து கொள்வதற்காகவே இவர்கள் இலங்கை வரவுள்ளதாக பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

இம் மாநாட்டுக்காக வரும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளில் கடந்த காலத்தில் இலங்கைக்கு எதிராக தவறான பிரசாரங்களை மேற்கொண்டு வந்தவர்களும் அடங்குகின்றனர்.

இந்த மாநாடு காலி, ஹிக்கடுவை, ஹபராதுவ ஆகிய பிரதேசங்களில் நடைபெறவுள்ளது.

இலங்கைக்கு எதிராக சர்வதேசத்தில் தவறான பிரசாரங்களை மேற்கொண்டு வரும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கைக்கு வருகை தந்து உண்மையான நிலைமையை நேரில் அறிய இந்த சந்தர்ப்பம் அவர்களுக்கு வாய்ப்பாக அமையும் என பிரதி சபாநாயகர் குறிப்பிட்டார். (அ-2)

# புலமைப்பரிசில் பரீட்சையில் மாற்றங்கள் கொண்டுவரப்படும்

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு

தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் பெரியளவில் மாற்றங்களைக் கொண்டு வரவுள்ளதாக கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இப் பரீட்சை மாணவர்களுக்கு பெரும் சுமையாகிவிட்டது என்பதில் அமைச்சர்கள், அதிகாரிகளிடையே கருத்து வேறுபாடில்லையென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த சர்ச்சைக்குரிய புலமைப்பரிசில் பரீட்சையை உடனடியாக கைவிட வேண்டுமென தேசிய சிறுவர் பாது காப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது. புலமைப் பரிசில் பரீட்சையினால் ஒரு சிறு தொகையினர் மட்டுமே நன்மை யடைகின்றனர் என்றும் பெருந் தொகையானோர் விரக்தி அடைகின்றனர் எனவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் அனோமா திஸாநாயக்க கூறியுள்ளார்.

மாணவர்களின் உணர்வுகளை நோகடிக்காதிருப்பதற்காக அபிவிருத்தியடைந்த நாடுகளில் கீழ் வகுப்பு மாணவர்களுக்கு மதிப்பீட்டு அறிக்கையில் புள்ளிகள் காட்டப்படுவதில்லை என்றும் அவர் கூறினார்.

5ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையை கைவிடக்கோரும் வேண்டுகோளை உத்தியோக பூர்வமாக சகல பங்குதாரர்களுக்கும் விடுக்கவுள்ளதாக அவர் கூறினார். (அ-2)



கைதடி முத்துகுமாரசுவாமி மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் பாடசாலையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட தென்மராட்சி வலயக் கல்வி பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் உட்பட விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டு மங்கள விளக்கேற்றப்படுவதையும் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்கப்படுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# கிழக்கின் தனித்துவத்தை பாதுகாக்கவே கிழக்கை பிரித்தெடுத்துள்ளோம்

## அமைச்சர் அதாவுல்லா தெரிவிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணம் தனித்துவமாக இயங்க வேண்டும் என்பதற்காகவே கிழக்கைப் பிரிக்கக் கோரியதாக உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் புதிய கட்டடத் தொகுதி திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கிழக்கு மாகாணத்தை யாரும் செதுக்கத் தேவையில்லை. இம் மாகாணம் இயற்கையாகவே அழகானது. அழகு நிறைந்த இந்த மாகாணம் அதற்குரிய கலை, கலாசார,பாரம்பரிய விழுமியங்களுடன் தனித்துவமாக இயங்க வேண்டும். இம்மாகாணத்தில் வாழுகின்ற மக்கள் அவரவர் கலாசார விழுமியங்களை சுதந்திரமாக அனுபவிக்க வேண்டும். அதனாலேயே கிழக்கை பிரிக்கக் கோரினோம்.

யதார்த்தங்களை நிலை நிறுத்துவதற்காக குரல் கொடுத்த எங்களைப் பார்த்து இனவாதிகள், துவேசிகள் என்ற சிலர் வசைபாடினர்.

அத்தகையவர்கள் பின்னர் யதார்த்தத்தின் உண்மை நிலையைப் புரிந்து கொண்டு மௌனமாகிவிட்டனர்.

திருகோணமலை [illegible] பொருளாதார வளம் நிறைந்தது. பொருளாதார விருத்திக்கு கிழக்கின் தலைசிறந்த மாவட்டமாக திருகோணமலை உள்ளது. இருப்பினும் நிர்வாகத்துக்கான மாவட்டமாக மட்டக்களப்பு உருவாக வேண்டும்.

கடந்த காலங்களில் கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்கு போதிய நிதியிருக்கவில்லை. பல்வேறு நிர்வாகச் சிக்கல்களுக்கு இம்மாகாணம் முகம் கொடுத்தது. இன்று அவ்வாறு இல்லை. ஆசிய அபிவிருத்தி வங்கி, ஜெயக்கா, கொய்க்கா போன்ற நிதி உதவி வழங்கும் நிறுவனங்களினூடாக நிதி கிடைக்கப் பெறுகிறது.

அரசியல் அதிகாரமும் நிர்வாக அதிகாரமும் ஒன்றிணைந்து செயற்படும் போதுதான் மாகாணத்தினதும் மக்களினதும் இலக்குகளை அடைய முடியும். (அ-2)

# வெங்காய வரி உயர்வு கசினோவுக்கு சலுகை

## எரான் எம்.பி.சீற்றம்

அரசாங்கம் பாராளுமன்றத்தின் ஊடாக கசினோ சூதாட்டத்தை சட்டமாக்கி அதற்கு அரச அங்கீகாரத்தை வழங்க முயற்சிப்பதை ஐ.தே.க. கட்சி கடுமையாக எதிர்ப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரட்ண தெரிவித்தார்.

வெங்காயத்திற்கு வரியை அதிகரிக்கும் அரசாங்கம் கசினோ சூதாட்டத்திற்கு சலுகைகளை வழங்குவது எவ்வாறு நியாயமாகுமென்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், விபச்சாரம், சூதாட்டங்கள் குதிரைப் பந்தயம் என நாட்டுக்குள் எத்தனையோ சமூகத்தை சீரழிக்கும் செயற்பாடுகள் உள்ளன. இவையனைத்தையும் நாம் எதிர்க்கின்றோம். சூதாட்டம் எந்த ரூபத்தில் தலைதூக்கினும் அதற்கு ஆதரவளியோம்.

அண்மையில் சட்ட விரோதமான கசிப்பு உற்பத்திக்கு அனுமதி வழங்க வேண்டுமென அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சரொருவர் தெரிவித்திருந்தார். எனவே சட்டவிரோதமான விடயத்திற்கு சட்ட அங்கீகாரத்தை வழங்கி எப்படியாவது பணம் சம்பாதிப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும். (அ-2)

# நீரில் மூழ்கி பிரான்ஸ் பிரஜை உயிரிழப்பு

காலிப் பிரதேசக் கடலில் நீராடிக் கொண்டிருந்த சுற்றுலா பயணியான பிரான்ஸ் நாட்டுப் பிரஜை ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இது குறித்து தெரியவருவதாவது,

காலி, ஹபராதுவ பொலிஸ் பிரிவில் கொக்கல பகுதி ஹோட்டல் ஒன்றின் அருகில் கடலில் நீராடிக் கொண்டிருந்த வெளிநாட்டு பிரஜைகள் இருவர் நீரில் மூழ்கியுள்ளனர்.

இதனை கண்ணுற்ற உயிர் பாதுகாப்பு பிரிவினர் அவர்களைக் காப்பாற்றி முதலுதவி வழங்கியுள்ளனர்.

அவர்களில் ஒருவர் ஆபத்தான நிலையில் கராபிட்டிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை வசதிகளின்றி கருநாட்டுக்கேணி மக்கள்

(முல்லைத்தீவு)

**முல்லை.மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள கருநாட்டுக்கேணி கிராம மக்கள் தாம் அடிப்படை வசதிகள் இன்றி அவதிக்குள்ளாவதாக கவலை தெரிவித்துள்ளனர்.**

யுத்தத்தால் இடம் பெயர்ந்து 27 வருடங்களின் பின்னர் கடந்த 2011 ஆம் ஆண்டு மீள் குடியேற்றம் செய்யப்பட்டு மேற்குறித்த கிராமத்தில் 224 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இக்குடும்பங்களுக்கு கரிதாஸ் கியூடெக் நிறுவனம் 78 நிரந்தர வீடுகளையும், என்.ஆர்.சி நிறுவனம் 41 தற்காலிக வீடுகளையும், சோ ஆ நிறுவனம் 58 தற்காலிக வீடுகளையும் அமைத்துக் கொடுத்துள்ளன.

மிகுதியான 47 குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகள் கூட வழங்கப்படவில்லை. அத்துடன் கிணறுகள் சோ ஆ நிறுவனத்தினால் 13உம், கரித்தாஸ், கியூடெக் நிறுவனத்தினால் 27உம் அமைத்துக் கொடுக்கப்பட்டன. 184 குடும்பங்களுக்கு கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்படவில்லை.

மேலும் மலசலகூடங்கள் சோ ஆ நிறுவனம் 7உம், என்.ஆர்.சி நிறுவனம் 41 உம், கரித்தாஸ், கியூடெக் நிறுவனம் 78உம் அமைத்துக்கொடுத்துள்ளன. ஏனைய 98 குடும்பங்களுக்கு இவை அமைத்துக் கொடுக்கப்படவில்லை.

இக்கிராமத்தில் 16 உள் வீதிகளும், 5 கிளை வீதிகளும் உள்ள நிலையில் எவையும் புனரமைப்பு செய்யப்படவில்லை.

76 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவி வழங்கப்பட்டுள்ளன. இன்னமும் 71 குடும்பங்களுக்கு இவை தேவை. தனி அங்கத்தவர்



க்ளை கொண்ட வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட விதவைகளை கொண்ட 77 குடும்பங்கள் சமுர்த்தி திட்டத்தின் கீழ் உள் வாங்ககப்பட வேண்டும்.

இங்கு மின்சாரம் வழங்கப்படவில்லை. மண்ணெண்ணெய் முத்திரை ஒரு மாதம் மட்டுமே வழங்கப்பட்டது. பின்னர் அதுவும் வழங்கப்படவில்லை.

4 இந்துக் கோயில்கள் புனரமைக்கப் படாத நிலையில் உள்ளன. 30ற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு சொந்த காணிகள் இல்லை.


இக்கிராமத்தில் 43 விதவைகளைத் தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களும், 18 ஊனமுற்றவர்கள் உள்ள குடும்பங்களும் உள்ளன.

13 முன்னாள் போராளிகளும் உள்ள நிலையில் கடன் திட்டங்கள் எவையும் இவர்களுக்கு வழங்கப்படவில்லை. மேலும் கணவனால் கைவிடப்பட்ட 19 குடும்பங் களும் இங்கு உள்ளன.

கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், கமக்கார அமைப்பு, மீனவர் ஓய்வு மண்டபம், சமுர்த்தி அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், பல நோக்கு கூட்டுறவு சங்கம் ஆகியவற்றுக்குரிய காணிகள் இருந்த போதிலும் அவற்றிற்கான கட்டடங்கள் இல்லை.

எனவே இக்கிராமத்தில் உள்ள பல்வேறு வகைப்பட்ட குறைபாடுகளைக் கருத்திற்கொண்டு இவற்றை நிவர்த்தி செய்ய முன்வர வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-267)

## சந்தேக நபருக்கு விளக்கமறியல்



(முல்லைத்தீவு)

முள்ளியவளை பூதநகர் பகுதியில் 14கி.கி, 8கி.கி நிறைகளுடைய 3 கிளைமோர் குண்டுகளை வைத்திருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட நபர் ஒருவரை பயங்கர ஆயுதங்கள் கட்டளைச்சட்டத்தின் கீழ் எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா கட்டளையிட்டுள்ளார்.

குடிபோதையில் தான் கிளைமோர் என்று அறியாது மீன்பிடிக்கும் நோக்கத்தில் தாம் அதனை எடுத்ததாக சந்தேகநபர் மன்றில் குறிப்பிட்டுள்ளார். (ம)






நல்லூர் றோட்டரி கழகமும் சென்னை றோட்டரி கழகமும் இணைந்து யுத்தத்தால் அவயவங்களை இழந்தவர்களுக்கு உதவிகளை வழங்கின. முல்லைத்தீவு வட்டுவாகலில் இடம்பெற்ற நிகழ்வில் சென்னை றோட்டறிக்கழகத்தை சேர்ந்த முன்னாள் ஆளுநர் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு உதவி வழங்குவதையும் உதவிகளைப் பெற்றுக்கொண்டவர்களுடன் றோட்டரிக் கழகங்களின் அங்கத்தவர்களையும் படங்களில் காணலாம்.

# தேசிய கலை, இலக்கிய போட்டி; வெற்றியீட்டியோர் விபரம்

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் கலை, கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இவ்ஆண்டு நடத்தப்பட்ட தேசிய, கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்றோர் விபரங்கள் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளன. பிரதேச செயலக ரீதியாக முதல் மூன்று இடங்களை பெற்றவர்களின் விபரங்கள்.

**கவிதை - பாலர் பிரிவு**

திசரூபன் கதிர்நிலா - கரைச்சி
ரவீந்திரராஜா அபிலசா- கண்டாவளை
ராஜ்குமார் விழிமதி - கண்டாவளை

**கனிஷ்ட பிரிவு**

நடராசா தர்சனா - பச்சிலைப்பள்ளி
தி.பாவரசி - கண்டாவளை
வசந்தகுமார் அபிர்ணா - பச்சிலைப்பள்ளி

**சிரேஷ்ட பிரிவு**

மகேந்திரன் ஒலிசியா- கண்டாவளை
நாகலிங்கம் ஜெனோபா- கண்டாவளை
பாலேந்திரன் திலக்சனா - கண்டாவளை

**கவிதை - திறந்த பிரிவு**

அந்தோனிப்பிள்ளை மங்களராசா - கரைச்சி
கார்த்திகேசு தவராஜசுந்தரம்- கரைச்சி
செ.கஜானன் - பச்சிலைப்பள்ளி

**பாடலாக்கம்-திறந்த பிரிவு**

வல்லிபுரம் ஏழுமலைப்பிள்ளை - கரைச்சி
கார்த்திகேசு தவராஜசுந்தரம்- கரைச்சி
பெருமாள் புண்ணியராஜ் - கண்டாவளை

**கையெழுத்துப்போட்டி**

**பாலர் பிரிவு**

த.சாருஜன் - கண்டாவளை
ச.கலைப்பிரியா - கண்டாவளை
முரளிதரன் புகழிசை - பச்சிலைப்பள்ளி

**இலக்கிய விபரணம்**

**திறந்த பிரிவு**

வல்லிபுரம் ஏழுமலைப்பிள்ளை- கரைச்சி

**கட்டுரை - கனிஷ்ட பிரிவு**

கருணானந்தன் அபிசிகா - கண்டாவளை
உ. வினித்தா- பூநகரி
நடராசா தர்சனா- பச்சிலைப்பள்ளி

**சிரேஷ்ட பிரிவு**

வி.சரண்யா - பூநகரி
குணசேகரம் மிதுளா- பச்சிலைப்பள்ளி

**சிறுகதை- திறந்த பிரிவு**

இ. நடராசா - கரைச்சி
வ. சாளினி- கண்டாவளை
வல்லிபுரம் ஏழுமலைப்பிள்ளை- கரைச்சி

(ம-254)

## சூரசங்ஹாரம்



(குருமன்காடு)

அருள்மிகு ஸ்ரீலக்ஷ்மி சமேத நரசிங்கர் ஆலயத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை தீபாவளி தினத்தன்று மாலை 3.30 மணிக்கு மிகவும் சிறப்பான முறையில் நரகாசுரன் சங்ஹாரம் நடைபெறவுள்ளது.


அதனைத் தொடர்ந்து எம்பெருமானுக்கு அபிஷேக, பூசை, ஆராதனைகள் நடைபெறும் என்பதை அறியத்தருவதுடன் அனைவரும் இதில் கலந்து கொண்டு எம்பெருமானின் அருளைப் பெற்றுக்கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ம-250)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் பேருந்தில் தீ விபத்து; 45 பயணிகள் உடல் கருகி பலி!

**(ஆந்திரா)**

**ஆந்திராவில் தனியார் சொகுசு பேருந்தில் இடம் பெற்ற பயங்கர தீ விபத்தில் 45 பயணிகள் உடல் கருகி பலியாகினர். பேருந்தின் ஓட்டுநர், நடத்துநர் உட்பட 5 பேர் தீக்காயங்களுடன் உயிர் தப்பியுள்ளனர். காய மடைந்த பலர் அவசர அவசரமாக மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**





இச்சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றது.

இது தொடர்பாக தெரிய வருவதாவது,

பெங்களூரில் இருந்து ஐதராபாத்துக்கு வேகமாக சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து ஒன்று ஆந்திரா மாநிலம், மெகபூப் நகர் அருகே முன்னே சென்ற வாகனத்தை முந்திச் செல்ல முயன்றது.

அப்போது எதிரே வேகமாக கார் ஒன்று வந்துள்ளது. அதன் மீது பேருந்து மோதாமல் இருக்க சாரதி பேருந்தை இடதுபுறமாக திருப்பியுள்ளார்.வேகமாக திருப்பியதில் வீதியோர கல்வெட்டின் மீது பேருந்தின் டீசல் டாங்க் மோதியது.

அப்போது டீசல் டாங்க் பயங்கரமாக வெடித்தது. இதனால் பேருந்து தீப்பிடிக்கத் தொடங்கியது.

இதில் பேருந்தின் ஓட்டுநர், நடத்துநனர் உட்பட 5 பேர் தீக்காயங்களுடன் உயிர் தப்பித்தனர்.

தீப்பிடித்த நேரம் பேருந் தில் பயணிகள் தூங்கிக் கொண்டிருந்தனர். சில நொடிக ளில் பேருந்து முழுவதுமாக தீப் பிடித்து மளமள வென எரியத் தொடங்கியது. சூடு தாங்கமுடியாது விழித்த பயணிகள், வெளியே வர முடியாமல் தவித்தனர். சிலர் மட்டும் கண்ணாடிகளை உடைத்துக் கொண்டு வெளியே குதித்துள்ளனர்.

அப்பகுதி மக்கள் ஓடிவந்து பயணிகளை மீட்க முயன்றனர். அதற்குள் தீ கொழுந்து விட்டு எரிந்ததால் யாராலும் பேருந்தின் அருகில் நெருங்க முடியவில்லை.

சம்பவ இடத்திற்கு மூன்று தீயணைப்பு வாகனங்கள் விரைந்து வந்தன. ஆனால் அதற்குள் பேருந்து முழுவதுமாக எரிந்து சமபலானது. இந்த கோர விபத்தில் 45 பயணிகள் தீயில் கருகி பலியாகினர்.

இந்தச் சம்பவம் ஆந்திராவில் பெரும் பரபரப்பையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

அப் பேருந்து குளிர்சாதன வசதி செய்யப்பட்ட சொகுசு பேருந்து என்பதால் பயணிகள், வெளியேற முடியாது சிக்கி உயிரிழப்பு அதிகமாக இருந்ததாக பொலிஸார் கூறுகின்றனர். (2)


# செவ்வாய் கிரகத்திற்கு மங்கல்யான் விண்கலம்

(சென்னை)

செவ்வாய் கிரகத்துக்கு செல் லும் மங்கல்யான் விண்கலத்தை தாங்கிய பி.எஸ்.எல்.வி சி&25 ரொக்கெட் எதிர் வரும் 5ஆம் திகதி விணணில் பாய்கிறது.

இந்திய விண்வெளி வரலாற் றில் முதல்முறையாக செவ்வாய் கிரகத்துக்கு விண்கலம் ஏவும் முயற்சியில் இஸ்ரோ ஈடுபட்டுள்ளது.

அதற்காக மங்கல்யான் என்று பெயரிடப்பட்டுள்ள விண்கலம், பி.எஸ்.எல்.வி சி&25 ரொக்கெட் ஆகியவை 450 கோடியில் உருவாக்கப்பட்டன. செவ்வாயில் தண்ணீர் உள்ளதா, அங்கு மனிதர்கள் வாழ முடியுமா போன்ற ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவிருக்கும்.



இதற்காக விண்கலத்தில் லைமேன் ஆல்பா போட்டோ மீட்டர், மீத்தேன் சென சார் கருவி, மார்ஸ் எக்சாஸ் பியரிக் காம்போசிஷன் அனலைசர் என்ற சுற்றுச் சூழல் ஆய்வுக் கருவி, தரைத் தளங்களை படம் பிடிக்கும் மார்ஸ் கலர் கமரா, ஸ்பெக்ட்ரோ மீட்டர் போன் றவை பொருத்தப்பட்டுள்ளன.

குறித்த ரொக்கெட் நவம்பர் 5 ஆம் திகதி பிற்பகல் 2.36 மணிக்கு ஏவப்படும் என இஸ்ரோ அறிவித்துள்ளது. (2)

# தலிபான்களுடன் பேசத் தயார்; பாகிஸ்தான் பிரதமர் அழைப்பு

தலிபான்களுடன் அமைதி பேச்சு வார்த்தையைத் தொடர தயார் என பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் அழைப்பு விடுத்துள்ளார்.

பாகிஸ்தான் பிரதமர் அரசு முறை சுற்றுப்பயணமாக லண்டன் சென்றுள்ளார். அப்போது அவர் தொலைக் காட்சி செய்தி நிறுவனத்திற்கு பேட்டியளித்தார்.


அப்பேட்டியின்போது தலிபான்கள் குறித்து அவர் கூறியதாவது,

எனது தலைமையிலான அரசு பாகிஸ்தான் மற்றும் இப்பிராந்தியத்தில் அமைதி நிலவ வேண்டும் என்றே நடவடிக்கை எடுத்து வருகிறது. தலிபான்களுடன் அமைதி பேச்சுவார்த்தையை தொடர தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க நான் உள்துறை அமைச்சருக்கு உத்தரவிட்டுள்ளேன். இது குறித்து அனைத்து



கட்சிகளுடனும் உள்துறை அமைச்சர் பேசுவார்.

இதுகுறித்து அனைத்து கட்சி கூட்டத்தில், போராளிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்கான அரசின் முயற்சிக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். எனவே பாகிஸ்தான் தலிபான்கள் அமைதி பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள வேண் டும். அவர்கள் அரசியலில் ஈடுபட்டு மக்கள் மத்தியில் செல்வாக்கை பெறவேண்டும் என அவர் கூறினார். (2)



குஜராத் மாநிலம் அகமதாபாத்திற்கு விஜயம் ஒன்றை பிரதமர் மன்மோகன் சிங் மேற்கொண்டார். இதன்போது பிரதமரை விமான நிலையத்தில் வைத்து முதல்வர் நரேந்திர மோடி வரவேற்பதையும் அருகில் ஆளுநர் கமலா பெனிவால் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# பொதுநலவாய மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும்

## திராவிடர் கழகத் தலைவர் வீரமணி தெரிவிப்பு



(தஞ்சாவூர்)

இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டை இந்தியா புறக் கணிக்க வேண்டும் என்று திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி தெரிவித்துள்ளார்.

தஞ்சையை அடுத்த வல்லம் பெரியார் மணியம்மை பல்கலைக் கழகத்தில் திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது,

இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக்கூடாது என்று தமிழ்நாட்டிலுள்ள தலைவர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக கருத்து தெரிவித்து இருக்கின்றனர். தமிழக சட்ட பேரவையில் அனைத்து கட்சிகளின் ஆதரவுடனும் முதல் அமைச்சர் தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறார். அப்படி இருந்தும் வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான்குர்ஷித் மாநாட்டிற்கு செல்லவிருக்கிறார். பிரதமர் போகப்போகிறார் என்று உறுதிசெய்ய முடியாத தகவல்கள் ஊடகங்களில் வெளியாகிக் கொண்டு இருக்கின்றன.

இத்தகைய தவறை இந்தியா செய்யக்கூடாது. மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்பட்டு வருகிறார்கள். தமிழர்களுக்கு விரோதமாக மத்திய அரசு செயற்பட்டு வருகிறது என்ற கருத்து நிலவி வருகிறது. தமிழ்த் தேசிய கூட்டணியும் இந்த மாநாட்டை புறக் கணிக்கப் போவதாக தெரிவித் திருக்கிறது.

இதனை இலங்கையில் உள்ள தமிழர்களின் ஒட்டுமொத்த பிரதிபலிப்பாக எடுததுக் கொள்ள வேண்டும்.

இதனால் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும். மீறி மாநாட்டில் கலந்து கொண்டால் அதற்காக காங்கிரஸ் மிகப்பெரிய விலையைக் கொடுக்க வேண்டியிருக்கும்.

இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு அகதிகள் வரும்போது மாநில அரசே அவர்களை பார்த்து கொள்கிறது. வெளியுறவுக் கொள்கை என்பது வானத்தில் இருந்து பொழிந்தது அல்ல. எல்லா மாநி லங்களும் சேர்ந்தது தான் இந்தியா. எல்லா மாநிலங்களின் கூட்டமைப்பாக இந்தியா இருக்கும் என்று சொல கிறார்கள். ஒரு கூட்டு குடும்பத்தில் கணவன் , குழந்தைகள், மனைவி பற்றி கவலைப்படாது செயற் பட் டால் அந்த குடும்பம் ஒற்றுமையாக இருக்காது என்றார். (2)

# 40 அகதிகள் பரிதாபமாக பலி!

(அல்ஜியர்ஸ்)

ஐரோப்பாவிற்கு குடிபெயர்ந்து செல் லும் போது பாலைவனத்தில் டிரக் பழு தானதில் தண்ணீர் கிடைக்காது நைஜ ரிய பெண்கள், சிறுவர்கள் உட்பட 40 அகதிகள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

சோமாலியா மற்றும் எதித்திரியா நாட்டில் இருந்து ஏராளமானோர் உழைப்பிற்காக ஐரோப்பிய நாடுகளுக்கு கடல் வழியாகவும், வாகனங்களிலும் சட்டவிரோதமாக தற்பொழுது செல் கின்றனர்.

இந்நிலையில் நைஜீரியாவை சேர்ந்த பெண்கள், சிறுவர்கள் உட்பட 60 பேர் கடந்த சில நாட்களுக்கு முன்பு 2 டிரக்கில் அல்ஜீரியாவின் டமாரன்ராசெட் நகருக்கு அகதிகளாக சென்றுள்ளனர்.

இவர்கள் சகாரா பாலை வனத்தை கடந்து செல்லும் போது நைஜரின் வட பகுதியான அர்லிட் நகரத்தில் இருந்து 50 கிலோ மீற்றர் தூரத்தில் அவர்கள் சென்ற டிரக் பழுதடைந்தது.

இதனால் பாலைவனத்தில் சிக்கிய அகதிகளால் அம்மணல் பரப்பில் நீண்ட தூரம் நடந்து செல்ல முடியாது போயிற்று. அத்துடன் தண்ணீர் கிடைக்காது நாக்கு வறண்டு பெண்கள், சிறுவர்கள் உட்பட 40 பேர் உயிரிழந்தனர்.

இதுபோல் பாலைவனத்தில் சிக்கி ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. கடந்த 3ஆம் திகதி இத்தாலி லாம் பிதுசா தீவு அருகே அகதிகளின் படகு கடலில் மூழ்கியதில் 300 பேர் உயிரிழந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால் முகம் காணாக் குழவி, தாய் முகம் நோக்க, தாய் என்முகம் நோக்க, நான் நின்முகம் நோக்கி வந்தேன் ஐய!

*– சங்கப்புலவர்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கோபுரம் கட்டுவோர் வீடு தரட்டும் சுருவம் நாட்டுவோர் வள்ளம் தரட்டும்

வயிற்றுக்கு சோறிடல் வேண்டும் இங்கு வாழும் மனிதர்களுக்கெல்லாம் என்றான் பாரதி. பாரதியின் கவிதைகள் அவனின் மறைவுக்குப் பின்னர் உயிர் வாழ்வதற்கு மேற்குறிப்பிட்ட கவிதை வரிகளே காரணம் எனலாம்.

சமூகத்திற்கு நல்லதைச் சொல்ல விளைகின்ற–நல்லதைச் சிந்திக்கின்ற ஒருவன் முதலில் மக்களின் அடிப்படைத் தேவைகள் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

அந்தச் சிந்தனை பாரதியிடம் கடுமையாக இருந்தது. அதனால்தான் தனியொரு மனிதனுக்கு உணவில்லை எனில் இந்த ஜெகத்தினையே அழித்திடுவோம் என்றான் அவன்.

இந்த உலகத்தையும் அழிக்க முடியும். எப்போது என்றால், தனி மனிதனுக்கு உணவில்லை என்ற நிலை வரும்போது என்பது பாரதியின் உறுதியான முடிவு.

தனிமனிதனின் உணவு பற்றிய பாரதியின் சிந்தனை எங்கள் அனைவரிடமும் இருக்க வேண்டும். அயல்வீட்டானின் அடுப்பு எரிகிறதா? அவர்கள் உணவுண்டு பசி ஆறுகிறார்களா? என்பது பற்றி சிந்திக்காத எவரும் மனிதனாக இருக்க முடியாது.

எனவே இந்த சிந்தனையின் அடிப்படையில் எங்கள் அரச நிர்வாகம் முன்னெடுக்கப்பட வேண்டும். காணியில்லை; வீடு இல்லை; தொழில் இல்லை; ஒருவேளை உணவுக்கும் இடர்படுகின்றோம் என்ற பரிதாப நிலைக்கு முற்றுப்புள்ளி வைப்பதே இதன் முதற்பணியாகும்.

இதற்காக வடக்கு மாகாண அரசு கடுமையாகப் பாடுபட வேண்டும். இங்கு பாடு என்பது பல கோணங்களை நோக்கிய பயணமாக இருப்பதும் அவசியம்.

வடபகுதியின் பொருளாதாரம் என்பது நலிவானது அல்ல. இங்கு பலமான பொருளாதாரம் உண்டு. ஆனால் இது, ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தினரிடம் குவிந்துபோய் கோயிலுக்கு கோபுரம் கட்டுவதிலும் சந்திகளில் சுருபம் அமைப்பதிலும் செலவாகிக் கொள்கிறது.

ஆலடி, அரசடிகளில் ஓலைக்குடிசையில் இருந்த வைரவர் பளிங்கு மாளிகையில் குடியமர்த்தப்பட்டு கும்பாபிஷேகம் நடத்தப்பட,

ஒற்றைத் தூணில் எழுந்துநின்ற சுருவத்தை மலை உடைத்து; கல்லெடுத்து; குகையும் குன்றும் அமைத்து; குடியிருத்த, பாவம் எங்கள் ஏழைக்குடும்பங்கள் மழை ஒழுக்கிற்குப் பானை வைத்து, சட்டி வைத்து, சாக்குப்போட்டு குடிசை வீட்டை பாதுகாக்க பெரும்போராட்டம் நடத்துகின்றன. இது தான் எங்கள் களநிலைமை.

ஆக, அடிப்படைத் தேவைகளை தீர்க்க வேண்டுமாயின் கோபுரம் அமைக்கும் கோயில்கள் குறைந்தது பத்து வீடுகளையாவது கட்டி பரம ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டும்.


சந்திகள் தோறும் போட்டி போட்டு சுருவம் நாட்டுவோர் வள்ளமின்றி கடற்றொழில் செய்ய முடியாதவர்களுக்கு குறைந்தது இருபது வள்ளங்கள் எடுத்து வழங்க வேண்டும். இதுதான் சட்டமென்று வடக்கு மாகாணம் தீர்மானம் எடுத்தால், எங்கள் பஞ்சம் கொஞ்சமேனும் குறையும். இல்லையேல்

**இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டில்**
**பரந்து கெடுக உலகியற்றியான்**

என்ற வள்ளுவத்தின் குறளையே நாம் உச்சரிக்க முடியும்.

# மேற்படிப்புக்காக வடக்கிலிருந்து எவரும் வருகை தருவதில்லை

## தென்கொரிய தூதுவர் கவலை



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த எவரும் தென்கொரியாவுக்கு மேற்படிப்புக்காக வருகை தருவதில்லை. இது எமக்கு மிகுந்த வேதனையளிக்கின்றது என அந்நாட்டு உயர்ஸ்தானிகர் அர்ஜுன யோங்மூன் சொய் யாழ்ப்பாணத்தில் வைத்து தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனை யாழ். நல்லூர் கோவில் வீதியிலுள்ள அவரது வாசஸ்தலத்தில் நேற்றைய தினம் சந்தித்து கலந்துரையாடிய பின்னர் இலங்கைக்கான தென்கொரிய உயர்ஸ்தானிகர் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீண்டகாலமாக தென்கொரியாவுக்கு மேற்படிப்புக்காக இலங்கையிலிருந்து பல மாணவர்கள் வருகை தருகின்றபோதிலும் வடக்கு மாகாணத்திலிருந்து இதுவரையில் எவரும் வருகை தரவில்லை. இந்த நிலை எதிர்காலத்தில் மாற்றமடையவேண்டும்.

வடக்கிலிருக்கும் மாணவர்கள் மேற்படிப்புக்காக தென்கொரியாவுக்கு வரவேண்டும். அத்தோடு தென்கொரிய மொழியைக் கற்பதன்மூலம் வேலை வாய்ப்பை இலகுவாக பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை தென்கொரிய உயர்ஸ்தானிகருடனான சந்திப்பையடுத்து ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த முதலமைச்சர், வடக்கு மாகாணத்திலுள்ள மாணவர்கள் மேற்படிப்புக்காக தென்கொரியாவுக்கு வருகை தரவேண்டும் என்ற விருப்பத்தை தென்கொரிய உயர்ஸ்தானிகர் தெரிவித்திருந்தார். எனவே இங்குள்ள மாணவர்கள் மேற்படிப்புக்காக அங்கு செல்லமுடியும் எனவும் உதவி செய்ய அவர்கள் தயாராகவே இருக்கின்றனர். அதனைப் பயன்படுத்த வேண்டும் என்றும் முதலமைச்சர் ஆலோசனை வழங்கினார்.

இதனைவிட வடக்கு மாகாண மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தங்களாலான உதவிகளை வழங்கவும் மீன்பிடித் தொழிலுக்கு உதவி வழங்கவும் தமது நாடு தயாராகவிருப்பதாகவும் முதலமைச்சரிடம் மேலும் தெரிவித்தார். (அ-6)

## மோ.சைக்கிள் திருடிய இருவர் மாட்டினர்

நெல்லியடி மதுபானசாலைக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளைத் திருடிய இருவர் வசமாக மாட்டியுள்ளனர். சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கடந்த 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மதுபானசாலைக்கு முன்பாக ஒருவர் தனது மோட்டார் சைக்கிளை நிறுத்தி அதனைப் பூட்டி சாவியையும் எடுத்துச் சென்றுள்ளார்.

அவ்விடத்தில் தருணம் பார்த்திருந்த திருடர்கள் அந்த பூட்டிய மோட்டார் சைக்கிளைத் திருடிச் சென்றுள்ளனர். இவை அனைத்தும் மதுபானசாலையில் பொருத்தப்பட்டிருந்த கமராவில் பதிவு செய்யப்பட்டன.

மோட்டார் சைக்கிளைக் களவாடிய இரு நபர்களையும் நெல்லியடிப் பொலிஸார் தீவிர தேடுதலின் பின்னர் ஆழியவளை குஞ்சிக்குளம் கிராமத்தில் வைத்து கடந்த திங்கட்கிழமை கைது செய்துள்ளனர்.

அத்தோடு இரு நபர்களையும் திருடிய மோட்டார் சைக்கிளையும் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் பொலிஸார் சந்தேக நபர்களை பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளனர். (அ-9-60)

## இந்துசிட்டி இந்து மயானத்துக்கு முன்பாக கழிவுகள் வீசப்படுகின்றன

### மக்கள் விசனம்

(நல்லூர்)

புத்தூர் சுன்னாகம் வீதியிலுள்ள இந்துசிட்டி இந்து மயானத்துக்கு முன்புள்ள வீதியோரங்களில் கழிவுப் பொருட்கள் வீசப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறாக குறித்த பகுதியில் குப்பைகள், கழிவு பொருட்கள் வீசப்படுவதால் நுளம்பு பெருக்கம் அதிகமாவதோடு அவ்விடங்களில் தாங்க முடியாத துர்நாற்றமும் வீசுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்தோடு கழிவுப் பொருட்கள் வீசப்படும் இடத்தை அண்டிய பகுதிகளில் கடைகளும் மக்கள் குடியிருப்புக்களும் உள்ளன.

இங்கு வீசப்படும் கழிவுப் பொருட்களை புத்தூர் பிரதேச சபை அவ்வப்போது துப்புரவு செய்து வருகின்ற போதிலும் தொடர்ந்து அவ்விடத்தில் கழிவுகள் வீசப்பட்டுக் கொண்டே இருக்கிறன.

எனவே சமூகத்தினர் இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்தி கழிவுப் பொருள்களைத்தினம் தினம் வீசுவதைத் தவிர்த்து மாற்று வழிகளில் அவற்றை நீக்க வேண்டுமென சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-134)

## சத்திய தரிசனம்



மனிதன் ஒவ்வொரு நொடியும் முன்னேற வேண்டியுள்ளது. தேக்கமுள்ள வாழ்க்கை நடத்துவது அவனுக்கு நன்மை தராது. ஒரு மாணவன் ஒரு வகுப்பில் பல வருடங்கள் படிப்பதை நாம் எவ்வளவு காலம் பொறுத்துக்கொள்ளமுடியும். அந்த மாணவன் ஒரு வகுப்பிலிருந்து மற்றொரு வகுப்புக்கு ஆண்டுதோறும் தேர்ச்சிபெற்று செல்வதுதான் முன்னேற்றம். அதேமாதிரி ஒரு ஆன்மீக சாதனையாளரும் ஒரே சாதனா நிலையில் நிற்கக்கூடாது. சந்தனமிடுதல், தீபாராதனை, நைவேத்தியம், கற்பூர ஆரத்தி, வலம் வந்து கீழேவிழுந்து வணங்குதல், மலர்களால் பூஜிப்பது ஆகியன போற்றத்தக்கதே. இவை ஆரம்பநிலை சாதகனுக்குத்தான். இந்த நிலையிலிருந்து சாதகன் மேலே உயர்ந்து ஆத்மாவை உணரும் நிலைக்கு உயரவேண்டும். மலர்கள் சீக்கிரம் வாடிவிடும். அழுகிவிடும். மனிதவாழ்க்கை என்னும் மரத்தில் மலரும் மலர்கள் மனித முயற்சியாலும் திறமையாலும் நற்பண்புகளாலும் பூத்திருக்கவேண்டும். இதயம் என்ற தோட்டத்தில் பூத்த நற்குணங்கள் என்ற மலர்கள்தான் இறைவன் விரும்பும் மலர்கள்.

## கந்தசஷ்டி உற்சவம்

பொலிகண்டி கந்தவனம் திருவருள் மிகு சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான கந்தசஷ்டி மகோற்சவம் எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இம்மகோற்சவத்தில் 06 ஆம் திகதி புதன்கிழமை தாரகன் போர், 7 ஆம் திகதி வியாழக்கிழமை சிங்கன் போர், 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சூரன் போர் ஆகியன இடம்பெறவுள்ளன. அத்துடன் 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு பாறணைப் பூஜையைத் தொடர்ந்து தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு திருக்கல்யாண உற்சவம் நடைபெறும். (அ-7)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### உணவு இலையில் உண்ண வேண்டுமா?



டிஸ்போசபில் பாத்திரங்கள் உற்பத்தி பெருகியதாலும் இலைகளின் பற்றாக்குறையாலும் நம் நாட்டினர்கூட இலையை ஓர் பழைய காலத்து நினைவாகவே வைத்துள்ளனர் என்பதே நிஜ நிலை. எல்லா நாளும் மதிய உணவு இலையில் உண்ணும் ஒரு காலம் நம் நாட்டில் இருந்தது. வேளாண்மைத் துறையும் வேளாண்மைத் தொழிலும் ஆராதனையாகக் கொண்டிருந்த தலைமுறை மாய்ந்ததும் நாம் மேல்நாட்டு கலாசாரத்தில் மூழ்கி அதன் அடிமைகளாகி விட்டோம். வாழை போன்ற தீங்கற்றதும் சுத்தமான இலைகளில் உணவருந்தி வந்தனர். இவைகளில் சிறிய அளவிலாவது மருத்துவ குணங்கள் அடங்கியுள்ளதாக ஆயுர்வேதம் போதிக்கின்றது. இலைகளில் உண்ணும்போது சுத்தம் கடைப்பிடிப்பு இயல்கின்றது என்று மட்டுமல்லாமல் ஒருவர் உண்டபின் அதில் மற்றொருவருக்கு பரிமாறும் நிலையும் வரவில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# துடுப்பாட்ட வீரர்களுக்கு சாதகமாக புதிய விதி; டிராவிட்



புதிய விதிகள் துடுப்பாட்ட வீரர்களுக்கு சாதகமாக உள்ளது. இந்நிலையில் பந்து வீச்சாளர்களை விமர்சிக்கப் போவதில்லை, என, தெரிவித்துள்ளார் டிராவிட்.

இந்தியா அவுஸ்திரேலிய அணிகள் மோதும ஒருநாள் தொடரில் இதுவரை முடிந்த அனைத்து போட்டிகளிலும் 300 ஓட்டங்கள் சாதாரணமாக எடுக்கப்பட்டன. இந்திய அணி 303 ஓட்டங்கள் எடுத்து தோற்றது. அவுஸ்திரேலியா 359 ஓட்டங்கள் எடுத்தும் வீழ்ந்தது.

கடைசி 10 ஓவர்களில் கைவசம் விக்கெட்டுகள் வைத்துக்கொண்டு, முதல் 3 போட்டிகளில் 80, 132, 96 ஓட்டங்கள் குவித்தன.

இதுகுறித்து இந்திய அணியின் முன்னாள் வீரர் டிராவிட் கூறுகையில்,

ஆரம்பத்தில் ஒருநாள் போட்டிகளில் 250 ஓட்டங்கள் எடுத்தால் போதுமானது. இப்போது, குறைந்தது 300 ஓட்டங்கள் எடுக்க வேண்டும். நிலைமை இப்படி இருக்க, பழைய புள்ளி விபரங்களை பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது.

இதனால், பந்துவீச்சாளர்கள் வெளிப்படுத்தும் திறமையின் அளவீடு குறித்து, நாம் மறுமதிப்பீடு செய்தாக வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. தவிர, சமீபத்தில் வந்த புதிய களத்தடுப்பு விதிகள், இரண்டு புதிய பந்துகள் போன்ற காரணங்களால், ஓட்டங்கள் அதிகமாக எடுக்கப்படுகின்றன.

இதற்கு முன், கடந்த முறை இங்கிலாந்து வந்தபோது, ஒருமுறை மட்டும் தான் 300 ஓட்டங்களை கடந்தது. பாகிஸ்தான் தொடரில், 250 ஓட்டங்களை தாண்ட விடவில்லை. இத் தொடரில் மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டியில் 167 ஓட்டங்கள் எடுத்த இந்திய அணி, 157 ஓட்டங்களுக்கு பாகிஸ்தானை சுருட்டியது.

இதனால் தான் இப்போதைய இந்திய அணியின் பந்துவீச்சாளர்கள் குறித்து விமர்சனம் செய்யவில்லை.

இருப்பினும், இப்போதுள்ள பந்துவீச்சாளர்கள் இளம் வீரர்கள் என்பதால், அனுபவத்தின் அடிப்படையில் பாடம் கற்றுக்கொள்வர் என நினைக்கிறேன்.

மற்றபடி இந்திய ஒருநாள் அணியின் துடுப்பாட்டம் எப்போதும் இல்லாத வகையில் உள்ளது என்றார் டிராவிட் கூறினார்.


# மெஸ்ஸியின் சாதனையை முறியடித்த 7 வயதுச் சிறுவன்

50 போட்டிகளில் 106 கோல் என்ற லயோனல் மெஸ்சியின் சாத னையை முறியடித்தான் பிரிட்ட னைச் சேர்ந்த 7 வயது சிறுவன் சோனி கில்கென்னி.

அச்சிறுவன், வெர்ன்போர்ட் ரேகு சர்ஸ் என்ற ஜூனியர் கிளப் அணிக் காக விளையாடி வருகிறான். பிரிட்ட னின் டெய்லி எக்ஸ்பிரஸ் நாளிதழ் இச்சிறுவன் தொடர்பான செய்தியை வெளியிட் டுள்ளது.

ஜூனியர் கிளப் அணிகளுக்கு இடையிலான போட்டியில் சோனி, 12 கிண்ணங்களை வென்றுள்ளான்.

மெஸ்சியின் சாதனையை முறியடிப் பதற்காக சோனி கடுமையான பயிற்சி மேற்கொண்டான் என்று அவனது தந்தை கூறியுள்ளார்.



# தங்க காற்பந்து விருதுக்கு 23 பேர் தெரிவு

சர்வதேச அளவில் காற்பந்து போட்டியில் சிறந்து விளங்கும் வீரருக்கு ஆண்டு தோறும் அளிக்கப்படும் தங்க காற்பந்து விருதுக்கு இம்முறை 23 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த அறிவிப்பை சர்வதேச காற்பந்து சம்மேளனம் (ஃபிஃபா) செவ்வாய்க்கிழமை அறிவித்தது.

அவர்களில் லியோனல் மெஸ்ஸி (ஆர்ஜெண்டினா), ஃபிராங் ரிபெரி (பிரான்ஸ்), கிறிஸ்டியானோ ரொனால்டோ (போர்ச்சுகல்), கேரத் பேல் (வேல்ஸ்), நேமர் (பிரேசில்) உள்ளிட்டோரும் அடங்குவர்.

1994ஆம் ஆண்டு வரை பாலன் டி"ஓர் (தங்க காற்பந்து) விருதை ஐரோப்பிய வீரர்கள் மட்டுமே பெற்று வந்தனர். அந்த விதி முறையானது 1995ஆம் ஆண்டில் மாற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

வாக்கெடுப்பு முறையில் இந்த விருதைப் பெறுபவர் தேர்வு செய்யப்பட்டு வருகிறார். இந்த சீசனில் சிறப்பாக விளையாடிய வீரர் யார் என்று அணிகளின் பயிற்சியாளர்கள், அணித்தலைவர்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோர் வாக்களித்து தேர்வு செய்வர்.

அடுத்த ஆண்டு ஜனவரி 13ஆம் திகதி இந்த விருதைப் பெறுபவர் யார் என்று அறிவிக்கப்படும்.

4 ஆண்டுகளாகத் தொடர்ந்து தங்க காற்பந்து விருதைப் பெற்று வரும் மெஸ்ஸி, இந்த முறையும் அவ்விருதைப் பெறுவோர் பட்டியலில் உள்ளார்.

2012-13 சீசனில், சிறந்த வீரருக்கான ஐரோப்பிய விருதைப் பெற்ற ரிபெரி, இம்முறை தங்க காற்பந்தை வெல்லலாம் என்று கணிக்கப்பட்டுள்ளது.

லிவர்பூல் அணி வீரரான லூயிஸ் சுராஸ் இவ்விருதுக்கான தேர்வுக் களத்தில் உள்ளார்.

பயிற்சியாளர் விருது: ஃபிஃபா பயிற்சியாளர் விருதுக்கு 10 பேர் கொண்ட பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் மான்செஸ்டர் யுனைடெட் மேலாளர் அலெக் ஃபெர்கியூஸன், பேயர்ன்ஸ் மேலாளர் ஹிநெக்ஸ் ஆகியோர் இடம் பிடித்துள்ளனர்.

# சாதித்தது பங்களாதேஷ்



பங்களாதேஷிற்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும், பங்களாதேஷ் அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் முதலாவது போட்டியில் பங்களாதேஷ் அணி இலகுவான வெற்றியைப் பெற்றுள்ளது.

ஷேரே பங்களா மைதானத்தில் இடம் பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 49.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 265 ஓட்டங்களைப் பெற்றது.

13 ஓட்டங்களுக்கு முதலாவது விக்கெட்டை இழந்த அவ்வணி, 25 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது. [illegible] 4ஆவது விக்கெட்டுக்காக 154 ஓட்டங்கள் பகிரப்பட்டன. அதன் பின்னர் இறுதி நேரத்தில் ஓட்டங்கள் பெறப்பட அவ்வணி 265 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் பங்களாதேஷ் அணி சார்பாக முஷ்பிக்கூர் ரஹீம் 98 பந்துகளில் 90 ஓட்டங்களையும், நயீம் இஸ்லாம் 115 பந்துகளில் 84 ஓட்டங்களையும், மகம துல்லா 30 பந்துகளில் 29 ஓட்டங்களையும் பெற்றனர.


பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பாக ஜேம்ஸ் நீஷம் 9 ஓவர்களில் 42 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், ரிம் சௌதி 10 ஓவர்களில் 34 ஓட்டங்களுக்கு 3 விக் கெட்டுக்களையும், கொரே அன்டர்சன் 8.5 ஓவ6ர்களில் 46 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

265 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 20 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 82 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது மழை குறுக்கிட்டது. நீண்ட இடைவெளியின் பின்னர் 33 ஓவர்கள் கொண்ட போட்டியாக மாற்றப்பட்டு, நியூசிலாந்து அணிக்கு 206 ஓட்டங்கள் வழங்கப்பட்டன. நியூசிலாந்து அணி 29.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 162 ஓட்டங்களை மாத்திரம் பெற்று டக் வேர்த் லூயிஸ் அடிப்படையில் 43 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் நியூசிலாந்து அணி சார்பாக கிரான்ற் எலியட் 77 பந்துகளில் 71 ஓட்டங்களையும், கொரே அன்டர்சன் 31 பந்துகளில் 46 ஓட்டங்களையும், அன்ரன் டேவ்சிச் 29 பந்துகளில் 22 ஓட்டங்களையும் பெற்றனர். இதில் காயம் காரணமாக கேன் வில்லியம்சன் துடுப்பெடுத்தாட மைதானத்திற்கு வந்திருக்கவில்லை.

பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பாக ஹட்ரிக் சாதனை படைத்த றூபெல் ஹொசைன், 5.5 ஓவர்களில் 26 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். சொஹக களி, அப்துர் ரஸாக், மகமதுல்லா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக றூபெல் ஹொசைன் தெரிவானார்.

# டெனிஸ் வீரர் பெயரில் விமான சேவை



சேர்பியாவின் விமான சேவையான 'ஏர் செர்பியா' தனது விமானத்திற்கு டெனிஸ் வீரர் நோவக் ஜோகோவிச் பெயரை சூட்டியுள்ளது.


சேர்பியாவின் முன்னணி டெனிஸ் வீரரான நோவக் ஜோகோவிச், 26. ஆறு முறை "கிராண்ட்ஸ்லாம்" பட்டம் வென்ற இவரை கௌரவிக்கும் வகையில், சேர்பிய விமான சேவையான "ஏர் சேர்பியா" தனது "ஏர்பஸ் 319" விமானத்திற்கு இவரது பெயரை சூட்டியுள்ளது.

முன்பகுதியில் ஜோகோவிச் என எழுதப்பட்ட விமானம் சேர்பியாவில் இருந்து அபுதாபிக்கு கடந்த 27இல் பறந்தது.

இதுகுறித்து ஏர் சேர்பியாவின் தலைமை அதிகாரி டேன் கோடிக் கூறுகையில், கடந்த சில ஆண்டுகளாக ஜோகோவிச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி நாட்டில் உள்ள எல்லா மக்களின் மனதிலும் நீங்காத இடம் பிடித்துவிட்டார். தவிர, உலகம் முழுதும் புகழ்பெற்றுள்ள அவரை கௌரவிப்பதில் எந்த தவறும் இல்லை, என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸியை வென்றது இந்தியா



அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான ஒருநாள் போட்டியில் இந்திய அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

இந்தியா-அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான 6-வது ஒரு நாள் போட்டி நேற்று மதியம் நாக்பூரில் நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது.

இந்த போட்டியில் தோற்றால் இந்தியா தொடரை இழந்து விடும் என்பதால் இந்திய வீரர்கள் ஜெயிக்க வேண்டும் என்ற இக்கட்டான நிலையில் களம் இறங்கினர்.

இந்திய அணியில் 3 சுழற்பந்து வீச்சாளர்கள் இடம்பெற்றிருந்தனர்.

தொடக்க வீரர்களாக பின்ஞ்-ஹியூக்ஸ் களம் இறங்கினார்கள். அணியின் ஓட்ட எண்ணிக்கை 30 ஆக இருக்கும்போது ஹியூக்ஸ் 13 ரன்னில் ஆட்டம் இழந்தார். அடுத்து 2-வது விக்கெட்டுக்கு வோட்சன் களம் இறங்கினார். 20 ரன் எடுத்திருக்கும்போது பின்ஞ் ஆட்டம் இழந்தார்.

அப்போது அவுஸ்திரேலிய அணி 11.1 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 45 ரன்கள் எடுத்திருந்தது.

3-வது விக்கெட்டுக்கு வோட்சன்- அணித்தலைவர் பெய்லி ஜோடி சேர்ந்தனர். இருவரும் தொடக்கத்தில் நிதானமாக விளையாடினர். பின்னர் அதிரடியாக விளையாடினார்கள்.

வோட்சன் 94 பந்தில் 13 பவுண்டரி, 3 சிக்சருடன் 102 ரன்கள் எடுத்து ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த மேக்ஸ்வெல் 9 ரன்னில் ஆட்டம் இழந்தார்.

ஒருபுறம் விக்கெட் வீழ்ந்தாலும் மறுமுனையில் இந்திய பந்து வீச்சை அடித்து நொறுக்கிய அவுஸதிரேலிய அணித்தலைவர் பெய்லி, 156 ரன் குவித்து அரங்கு திரும்பினார். வோக்ஸ் 44 ரன் எடுத்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இதனால் அவுஸ்திரேலியா அணி 50 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 350 ரன் குவித்தது.

17-வது ஓவரை ரவீந்திர ஜடேஜா வீசினார். இந்த ஓவரின் 4-வது பந்தை வோட்சன் அடிக்க ரோகித் சர்மா பிடித்தார்.

ஆனால் அது நோ-போல் என்று அறிவிக்கப்பட்டது. அப்போது வோட்சன் 25 ரன்கள் எடுத்திருந்தார். இந்த கண்டத்தில் இருந்து தப்பிய வோட்சன் சதம் எடுத்து அசத்தினார்.

351 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்தியாவில் தொடக்க ஆட்டக்காரர்களாக தவான் மற்றும் ரோகித் சர்மா களம் இறங்கினர். இருவரும் அதிரடியான தொடக்கத்தை வெளிப்படுத்தினார்கள்.

இவர்கள் இருவரும் ஜோடி சேர்ந்து 178 ரன்கள் எடுத்த நிலையில் சர்மா ஆட்டமிழந்தார். இவர் சேர்ந்தார். இவர் 16 ரன்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார். அடுத்து களம் இறங்கிய யுவராஜ் சிங் ரன் எதுவும் எடுக்காமல் ஆட்டம் இழந்தார்.

5வது விக்கெட்டுக்கு ஜோடி சேர தோனி களம் இறங்கினார். மறுமுனையில் அதிரடியாக விளையாடிய ஹோலி சதம் அடித்தார்.

இறுதியில் 3 பந்துகள் மீதமுள்ள நிலையில் இந்திய அணி 4 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து 351 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது.



79 ரன்கள் எடுத்து இருந்தார்.

அடுத்த விக்கெட்டுக்கு ஜோடி சேர ஹோலி களம் இறங்கினார். மறுமுனையில் சிறப்பாக விளையாடிய தவான் சதம் அடித்து ஆட்டமிழந்தார். அதன்பின் இறங்கிய ரெய்னா, ஹோலியுடன் ஜோடி

ஹோலி 66 பந்துகளில் 115 ரன்னும், தோனி 23 பந்துகளில் 25 ரன்னும் எடுத்தனர்.

இந்த வெற்றியின் மூலம் இந்தியா 2-2 என்ற நிலையில் இருக்கின்றது. அபாரமாக விளையாடிய ஹோலி ஆட்ட நாயகன் விருது பெற்றார்.

# உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி சென் ஜோன்ஸ் கல்லூரி வெற்றி

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் சென் ஜோன்ஸ் கல்லூரிக்கு மிடையிலான நட்புறவு' ரீதியான உதைபந்தாட்டப் போட்டிகள் நேற்று முன்தினம் பிற்பகல் 1.30க்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. 14,16,18,20 வயதுப் பிரிவு அணிகளிற்கிடையிலே இப் போட்டிகள் இடம்பெற்றன.

இதில் 14 வயதுப் பிரிவினரிற்கான போட்டியில் ஆட்டநேரம் முடியும் வரை இரு அணிகளும் கோல்கள் எதையும் பெற்றுக் கொள்ளாமையால் போட்டி சமநிலையில் நிறைவு பெற்றதுடன்.

16 வயதுப் பிரிவினரிற்கான போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரி 2:0 என்னும் கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து 18 வயதுப் பிரிவினரிற்கான போட்டியில் ஆட்டநேரம் முடியும் வரை இரு அணி களும் கோல்கள் எதையும் பெற்றுக் கொள்ளாமையால் போட்டி சமநிலையில் நிறைவுபெற்றது.

20 வயதுப் பிரிவினரிற்கான போட்டியில் 1:0 என்னும் கோல் கணக்கில் சென் ஜோன்ஸ் கல்லூரி வெற்றி பெற்றது.

# கிரிக்கெட் போட்டி

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கட் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றுவரும் 17வயதிற் குட்பட்ட பிரிவு III ற்கான கிரிக்கட் போட்டிகளின் இறுதிப் போட்டி இன்று இடம்பெறவுள்ளது.

இப் போட்டிகள் அநுராதபுரம் இபகமுவ மத்திய கல்லூரிமை தானதில் இடம்பெறவுள்ளது. இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சென் ஜோன்ஸ் கல்லூரியும் காமினி மகா வித்தியாலயமும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப் போட்டிகளில் வெற்றிபெறும் அணி பிரிவு II ற்கு முன்னேறக்கூடியதாக இருக்கு மெனவும் இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கட் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

# இராணுவ பிடிக்குள்...

யாழ்ப்பாணத்திற்கு நேற்று காலை வருகை தந்த அமெரிக்க உயர்ஸ்தானிகர் மிக்சல் சிசென வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை யாழ்.நல்லூர் கோவில் வீதியிலுள்ள அவரது வாசஸ்தலத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச்சந்திப்பினையடுத்து ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்த முதலமைச்சர் மற்றும் உயர்ஸ்தானிகரிடமும் ஊடகவியலாளர்களினால் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடுகள் இடிக்கப்படுவது தொடர்பில ஒருசில விடயங்களை எடுத்துரைத்தேன். இருப்பினும் அது அரசியல் விடயம் என்பதால் அரசாங்கத்துடன் பேசித்தான் அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளதே தவிர வெளிநாட்டிலிருந்து வருபவர்களுக்கு பேசி எதுவும் செய்ய முடியாது. ஆனால் இப்பேற்பட்ட சம்பவங்கள் இங்கு இடம்பெறுகின்றது என்பதை அமெரிக்க உயர்ஸ்தானிகரிடம் எடுத்து கூறியிருக்கின்றேன்.

மேலும் அது சம்பந்தமாக எந்தவொருகருத்தும் அவரால் கூறப்படவில்லை அவரால் கூறவும் முடியாது. காணி சுவீகரிப்பு அது உள்நாட்டு பிரச்சினை. இலங்கை அரசாங்கத்துடன் பேசித்தான் தீர்வுகாண வேணடுமெனவும் இலங்கைக்கான அமெரிக்க உயர்ஸ்தானிகர் மிச்சல் சிசென் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார் என வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவித்தார்.

அத்தோடு வீடு உடைத்து அழிக்கப்படுவது தொடர்பில் ஜனாதிபதியுடன் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனைக் கலந்துரையாடுமாறும் கோரிக்கை விடுத்துள்ளேன் என முதலமைச்சர் மேலும் தெரிவித்தார். [illegible]

# சிறந்த கால்பந்து வீரர் பட்டியலில் மெஸ்சி




சர்வதேச கால்பந்து சம்மேளனம் சார்பில் ஆண்டுதோறும் உலகின் சிறந்த கால்பந்து வீரர் தேர்வு செய்யப்பட்டு விருது வழங்கி கௌரவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டுக்கான விருது பட்டியலில் நட்சத்திர வீரர்கள் லயோனல் மெஸ்சி (அர்ஜெண்டினா), கிறிஸ்டியனோ ரொனால்டோ (போரத்துகல்), நெய்மார் (பிரேசில்) உள்பட 23 வீரர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். விருது விவரம் ஜனவரி 13-ந் திகதி அறிவிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(C-5313)
**Spoken English with Grammar**
For Beginners
Duration : 3 Months
New Batch 9-Nov-2013
iCS International Academy
No 77, Clock Tower Road, Jaffna.
021 - 7306000 , 077 - 3013060

**BEACON**
யாழ், பேராதனை
G.A.Q, B.A
பட்டப்படிப்பு மாணவர்களுக்கான வகுப்புகள் நடைபெறுகின்றன.
வரலாறு: ஆசிரியர்: S.S. தாஸ் BA (Hons) SP
புதிய பிரிவுகள் ஆரம்பம்:
03.11.2013 ஞாயிற்றுக்கிழமை நேரம்: 9.00 மணி
(C-5305)

**மணல் விற்பனைக்கு**
கட்டட வேலைகளுக்கும் பூச்சு வேலைகளுக்கும் சிறந்த மணல் மண் விற்பனைக்குண்டு.
4½ ரக்டர் 17500
தொடர்புகளுக்கு:- தீபன்
077 676 6499, 077 759 0792
(அ-5306)

**FRENCH LANGUAGE CENTRE**
FOR BETTER FRENCH
**FRENCH CLASSES**
France, Canada, Belgium செல்வோர், சிறுவர்கள்(9-13வயது) French கற்று International Certificates இனை பெற்றுக் கொள்ளலாம்..
ஆசிரியர்: Mr. V. Jegan (Teaching Training in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற்கொள்பவரும்.
வடக்கில் இருந்து எம் மாணவர்கள் மட்டுமே கடந்த DELF A1 Exam இல் சித்தி... நேரம்,பணம் வீணாகாது 8 மாதத்தில் DELF Exam எழுதலாம்....
ஆரம்பம் : 09.11.13 Sat at 8am. No. 23, Palaly Road, ஆரியகுளம். (அப்பலோ Hospital க்கு அண்மையில்).
11.11.13 Mon at 4.30pm. No. 181, 1st Floor, Main Street, Nelliady. (சோதி வீதி முன்பாக).
0779 789 456
Deutsch, IELTS, B1, Sinhala Classes உம் நடைபெறுகிறது...

## மனித உரி...

றுக்கு கருத்துத் தெரிவித்துள்ள அரச அதிகாரி ஒருவர், பொது நலவாயம் குறித்தே இந்த மாநாட்டில் பிரதானமாகக் கலந்துரையாடப்படும் எனவும் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சி நிரலின்படி மனிதவுரிமை விவகாரங்களுக்கு இடமளிக்கப்படமாட்டாது என்றும் தெரிவித்துள்ளார். (செ-11)

## ஊடகவியலாளர்கள்...

இவர்கள் சுதந்திர ஊடகஇயக்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சி கருத்தரங்கில் கலந்து கொண்டிருந்தனர்.

சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்து செயலமரவை நடத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டே இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்துள்ளது.

இந்த கருத்தரங்கு ஜானகி ஹோட்டேலில் நடந்து கொண்டிருந்த போது அங்கு சென்ற குடிவரவுமற்றும்குடிய கல்வு திணைக்கள அதிகாரிகள் 10 பேர் கொண்ட குழு அவர்களை கைது செய்துள்ளது.

இதேவே... கைதான சாவ... பத்திரிகையா... சுயமோனதன்... உறுப்பினர்க... இன்று வியாழ... மை நாடு கட... வார்கள் என தெ... கப்படுகிறது. (...

## சு.ஆணைக்குழு...

யத்தை வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் நடந்த வடமாகாண சபை தேர்தலுக்கான பொதுநலவாயத்தின் கண்காணிப்புக்குழு பற்றிய இறுதி அறிக்கையை வெளியிட்டபோது கமலேஷ் சர்மா இலங்கையில இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல் எனவும் இதை அவதானிக்க அழைக்கப்பட்டதையிட்டு பொதுநலவாயம் மகிழ்ச்சியடைந்தது எனவும் கூறினார்.

தேர்தல் தினத்தன்று சகல தரப்பினரதும் நடத்தை பாராட்டும் வகையில் இருந்ததென அவர் கூறினார்.

வாக்காளர்கள்தமது வாக்குரிமையைபயன் படுத்த பெருமளவில் வந்திருந்தனர். தேர்தல் அலுவலர்கள் பணிகளை நேர்த்தியாக செய்தனரென அவர் கூறினார்.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னரான நிலைமையும் அமைதியாக இருந்தது. இதற்காக நாம் போட்டியிட்ட அரசியல் கட்சிகளின் தலைமைத்துவங்களை பாராட்டுகின்றோம்என அவர் கூறினார்.

இருப்பினும் தேர்தலுக்கு முந்திய நிலைமை தொடர்பாக பொது நலவாய கண்காணிப்புக்குழு தெரிவித்திருந்த விசனம் தொடர்பில் பொதுநலவாய செயலாளர் நாயகம் கவனத்தை ஈர்த்தார், தேர்தல் என்பது ஒரு தொடர் செயல் முறையேயன்றி அது ஒரு நிகழ்வு அல்ல என கண்காணிப்புக்குழு கூறிய கருத்தை தான் ஆதரிப்பதாக அவர் கூறினார்.

தேர்தலுக்கு முந்திய நிலை தேர்தலின் நேரமைக்கும் நம்பகத் தன்மைக்கும் அவசியமானது என அவர் கூறினார்.

பொதுநலவாய நல்மரபுப்படி ஒரு சுயாதீனமான தேர்தல் ஆணைக்குழுவை அமைக்க வேண்டுமென பொதுநலவாயத்தின் கண்காணிப்புக் குழு கூறியிருந்ததை சர்மா குறிப்பிட்டார்.

நாம் இலங்கையுடன் ஒரு வேலைத்திட்டமொன்றைகொண்டுள்ளோம்அதன்படி தேர்தல் முறையை பலப்படுத்த இலங்கைக்கு உதவ நாம் தயாராகவுள்ளோம் என சர்மா கூறினார். (செ-11)

## மீட்கப்பட்ட யுவ...

தொலைபேசி அச்சுவேலி பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இந்த யுவதி வீட்டிலிருந்துவெளியேசென்ற வேளை முச்சக்கர வண்டி மற்றும் 3 மோட்டார் சைக்கிளில்வந்தவர்களினாலேயே கடத்தப்பட்டதாகவும்பேசமுடியாத அவரின் உறவுக்காரப் பெண்ணொருவர் தெரிவித்துள்ளார் (அ-9,24)

## இரு வெளிநாட்டு தூது...

யுள்ளனர்.

இலங்கைக்கான அமெரிக்க உயர்ஸ்தானிகர் மிச்சேல் சிசென் மற்றும் இலங்கைக்கான தென் கொரிய உயர்ஸ்தானிகர் அர்ஜன யோங்மூன் சொய் ஆகிய இருவருமே நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்திருந்தனர்.

வடக்கு மாகாண சபையில்30 ஆசனங்களுடன்ஆட்சிஅமைத்துள்ள தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் கடந்த 25 ஆம் திகதி முதலாவது அமர்வும் இடம்பெற்றது. இதனையடுத்து நேற்றையதினம் வடக்கிற்கு விஜயம் செய்த இலங்கைக்கான அமெரிக்க உயர்ஸ்தானிகர் மிச்சேல் சிசென் மற்றும் இலங்கைக்கானதென்கொரிய உயர்ஸ் தானிகர் அர்ஜன யோங்மூன் சொய் ஆகிய இருவரும் முதலமைச்சரைச்சந்தித்து கலந்துரையாடினர்.

வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலை வரம் குறித்து இலங்கைக்கான அமெரிக்க உயர்ஸ்தானிகர் மச்சேல் சிசென்னிடம் அமைச்சர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

முதலமைச்சருடனான இவர்களது சந்திப்பு யாழ். நல்லூர் கோவில் வீதியிலுள்ளஅவரதுவாசஸதலத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

இதன்பின்பு யாழ். ஒஸ்மானியா கல்லூரிக்கு சென்ற அவர்கள் அங்கு முஸ்லிம் பிரதி நிதிகளையும் சந்தித்து கலந்துரையாடினர். அதன் பின்பு சுன்னாகத்திலுள்ள தனியார் விடுதியொன்றில் வைத்து வடக்கு மாகாண சபையின் விவசாயம் மற்றும் சுற்றுச் சூழல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன், கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, சுகாதாரம் மற்றும் சுதேச வைத்தியத் துறை அமைச்சர் ப.சத்தியலிங்கன் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச்சந்திப்பில் வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைவரம் குறித்து அமெரிக்க உயர்ஸ்தானிகருக்கும் தென்கொரிய உயர்ஸ்தானி கருக்கும் ...வாக எடுத்துக்கூறப்பட்டுள்ளது எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-...)

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னப்பிள்ளை ஆசைப்பிள்ளை



சிறுப்பிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னப்பிள்ளை ஆசைப்பிள்ளை 29.10.2013 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி-ஆச்சிக்குட்டி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பர்-செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஆசைப்பிள்ளையின் அன்பு மனைவியும், மகேஸ்வரி, சறோஜினிதேவி (அமெரிக்கா), மனோன்மணி (கனடா), தவரத்தினம் (கனடா) , மகேந்திரன் (பி.பொ.மு அலுவலகம், இ.மி.சபை - யாழ்ப்பாணம்), கணேசநாதன் (பொறியியலாளர், அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயும், ஜெயபதி (ஓய்வுபெற்ற காகித ஆலை உத்தியோகத்தர், வாழைச்சேனை) ,கதிர்காமநாதன் (பொறியியலாளர்,அமெரிக்கா), ஆனந்தராசா(கனடா), சுகந்தினி(கனடா), மாலா (ஆசிரியை, யா/சிறுப்பிட்டி இ.த.க. பாடசாலை), ஜெகதா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியும், ஜெயரூபன், ஜெயதீபன், ஜெயசீலன், றோகினி, சுஜீவன், கஜீபன், சஞ்சீவன், துஷாந்தினி, தக்ஷினி, யதூஷா, தயாநளனி, திருசிகா, வினோஜா, ஆரணி, பாலகௌரி, சர்மிளா, வெங்கட்ரமணன், சுதாகர், தர்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சரணா, கிருஷிகன், பவந்தி, சணாளன், ஓவியா, அட்சயா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 01.11.2013 வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெற்று அவரது பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக 10.00 மணிக்கு கிந்துசிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.
021 205 8802,
021 321 6648

தகவல்:
ஆ.மகேந்திரன்(மகன்)
பிரதி பொது முகாமையாளர் அலுவலகம்,
இலங்கை மின்சார சபை, யாழ்ப்பாணம்.
(அ-5314)

## பொதுநலவாய மாநாட்...

கைகளுக்கு எதிரான மகிந்த ராஜாபக்ஷ ஆளும் இலங்கையில் பொதுநலவாய கூட்டம நடைபெறக்கூடாது.

இது குறித்து தமிழக சட்டசபையில் தமிழ்மக்களின் ஒட்டு மொத்த உணர்வுகளை பிரதிபலிக்கும் வகையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. திமுக தலைவர் கலைஞர் அனுப்பியிருந்த கடிதத்திற்கு, பரதமர் மன்மோகன் சிங், தமிழக மக்களின் உணர்வுகள் கருத்தில் கொள்ளப்படும் என அளித்த வாக்குறுதிக்கு விரோதமாக இந்திய வெளியுறவு துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் பேசியது கண்டிக்கத்தக்கது.

இந்தியா பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ளாவிட்டால் உலக நாடுகளில் இருந்து இ... தனிமை படுத்தப்... என இலங்கை தூ... கூறியதற்கு அ... மேல் இந்திய அ... நடவடிக்கை எடுக்... வேண்டும் என அ... பேசினார்.

தேசிய தலைவ... ஏ.சயீத் பேசுகையில் போர் குற்றங்களுக்... கான விசாரணை... ஐ.நாவின் மனித உரிமை ஆணைய... ளர் நவநீதம்பிள்ளை... யின் அறிக்கையின் அடிப்படையில் எதி... நோக்கி உள்ள இலங்... கையை பொதுநலவாய அமைப்பிலிருந்து நீக்க வேண்டும்.

இதற்கு முன் இது போன்றபொதுநலவாய... தத்துவங்களை பின்பற்றாத பிஜிதீவுகள், தென்ஆபிரிக்கா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் நீக்கி வைக்கப்பட்டுள்ள முன்மாதிரிகள்உள்ளன என்று சுட்டிக்காட்டினார். (செ-11)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**
*Learn French The French Way*
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்



யார் AF இல் French படிக்க முடியும்?
திருமணம் மூலம் France, Canada... செல்வோர், வெளிநாடுகளில் தொழில் புரிய/ கல்விகற்க செல்வோர், மாணவர்கள் மேலும் French கற்கவிரும்புவோர்... இங்கு வடமராச்சி, வன்னி, வவுனியா மற்றும் மன்னாரைச் சேர்ந்த பலரும் படிக்கிறார்கள்.

- Speaking, writing, listening & reading திறமைகளில் நன்கு தேர்ச்சிபெற்றிட...
- *Videos* for listening & speaking practice : "*Bienvenue en France*" Episode N°. 1,2,3,4...
- *Teaching materials* are given with *free* of charge. (ஆங்கில அறிவு அவசியமில்லை)
- Elementary level - 1 (6 Months, 100 Hours, CERTIFICATE course)
- Elementary level - 2 (4 or 5 Months, 80 Hours, CERTIFICATE course) ஏற்கனவே கொஞ்சம் பிரெஞ் கற்றவர்களும் வழமைபோன்று இப்பிரிவில் இணைந்திடுங்கள்.
- International Diplomas : DELF A1, A2 - AF இல் கற்பவர்களுக்கு மட்டுமே குறைந்த கட்டணத்தில் அனுமதி. மேலும் இப்பரீட்சைகளை ஏதாவதொரு AF இல் மட்டுமே எழுத முடியும்.
- Letter in French : 6 மாதத்தினை நிறைவுசெய்யாதோருக்கு / Embassy க்கு (Free)
- Translations in French : பிறப்பு, இறப்பு & திருமண சான்றிதழ்கள்.

குறிப்பு: நீங்கள் French கற்கும் நிறுவனம் France அரசாங்கம் & French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்டதா? Exams, Certificates என்பன உண்மையில் பெறுமதியானதா? என்பவற்றைக் தெரிந்துகொள்ளும்போது உங்கள் பணமும் நேரமும் வீணாவதை தவிர்கலாம்.

> Just say "Yes, I can... speak French"
> AF is the only International Organization for French in Northern Province

✓ AF இன் தலைமை நிறுவனம் Paris இலும் கிளைநிறுவனங்கள் இலங்கையில் COLOMBO, GALLE, KANDY, MATARA ஆகிய இடங்களில் மாத்திரமே உள்ளன. யாழில் FRENCH EMBASSY யின் அனுசரணையுடன் 1976 இல் இருந்து... உலகில் 136 நாடுகளில் 1040 Alliances Françaises (AF) உள்ளன. French Embassy website: www.ambafrance-lk.org

அனுமதியை பெற விரையுங்கள். உடன் (தொ.பேசி மூலமும்) பதிவுசெய்யுங்கள்
61, Kachcheri-Nallur Road, Jaffna T.P. 021 222 8093 / நேரிலும் வரலாம்
(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)
(4868)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org